42651

# இரணியன் நாடகம்

அல்லது

பரஹலாதா

1926

Q22:72
N26
97724

85

42651
42651

# Hiranya

OR

# PIRAHALATHA

AN

WONDERFUL

**TAMIL DRAMA**

BY

**T. T. Sankara Doss Swamy.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1926
MADRAS

புகழ்பெற்ற தமிழ் நாடகாசிரியர்

ஸ்ரீலஸ்ரீ தூ. தா. சங்கரதாஸ் சுவாமி

அவர்களால் இயற்றப்பெற்ற

# இரணியன் நாடகம்

அல்லது

# பிரஹலாதா.

Printed and Published by

K. MAYANDI PILLAI,

MANONMONY VILAS PRESS,

NORTH MASI STREET,

MADURA.

1926.

Price As. 12.

Q22:22
N26
97724

உ

குமரன் றுணை

உலகெங்கும் புகழோங்கிய
தமிழ் நாடகாசிரியர்

# ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ்
சுவாமி அவர்களால்
இயற்றப்பெற்ற

# இரணியன் நாடகம்
அல்லது
# பிரஹலாதா.

மதுரை, வித்வான்
மு. திருமலைமுத்துப் பிள்ளை அவர்களால்
பார்வையிட்டு

மதுரை, தாசில்தார் பள்ளிவாசல்தெரு
கு. மாயாண்டி பிள்ளையால்
தமது
மதுரை, வடக்குமாசிவீதி
மனோன்மணி விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1926.

விலை] Registered Copy Right. [அணா 12.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1926
MADRAS

A2651

O22:26

N26

97724

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# இரணியன் நாடகம்

அல்லது

# பிரஹலாதன் சரித்திரம்.

வெண்பா.

பெட்புமிகுங் கீர்த்திப் பிரகலா தன்மாலின்
நட்புமிகக் கொண்டோங்கிந் நாடகத்திற்—கெட்பொறியு
ருண்டையவல் தோசையொடு ளுந்துவடை முப்பழக்கற்
கண்டையுண்ணு முன்னோன்கால் காப்பு.

---

## ஸீன் 1.

காலம் — பிற்பகல்.
இடம் — தர்பார் மண்டபம்.
பாத்திரங்கள் — இரணியன், தூதர்கள்.

### இரணியன் தர்பார்.

இரணியன் சிம்மாசனத்திலிருக்கிறான், மந்திரிமார்கள் பக்கத்தில் நிற்கிறார்கள்.

இரணியன்:— மந்திரிமார்களே! எனது பாந்தவனான இரணியாட்சன், பூமியைப் பாயாகச் சுருட்டிப், பாதலம் புகுந்ததைக் கேள்விப்பட்ட துஷ்டச் சண்டாள மாயாவியான நாரணன், மலமுண்ணும் சுவேதவராக ரூபமெடுத்து, அவனோடு, அமர் புரிந்து கொண்டிருக்கிறானென்று சாரணர் வந்து தெரிவித்தார்கள். அது கேட்ட நாம் தூதர்களையனுப்பி வெற்றி தோல்வியைக் கண்டுவாருங்களென்று கட்டளையிட்டோம், சென்ற தூதர்கள் இன்னும் வராத காரணமென்ன?

சேவகன்:— பிரபு! இதோ தூதர்கள் வருகிறார்கள்.

இ-ன்:— அடே சேவகா! சடுதியில் இங்கே வரவிடு.

பே-தூதன்:— மகாராஜ்! நமஸ்கரிக்கின்றோம் (ஒதுங்கி நிற்றல்

இ-ன்:— தூதர்களே! என்ன வாய்மூடி மௌனமாக நிற்கிறீர்கள்? எனது பாந்தவனாகிய இரணியாட்சனும், மட்டிப்பிரஷ்ட விஷ்ணுவும் யுத்தம் செய்தார்களே, அங்கு நடந்த விபரமென்ன?

சி-தூதன்— அண்ணா! நீயே சொல்லு.

பே-ன்— தம்பி! நீயே சொல்லு.

இ-ன்— என்னடா ஒன்றுஞ் சொல்லாது நிற்கிறீர்கள்?

பே-ன்— பிரபு! எங்களுடைய எஜமானாகிய தங்களுடைய தம்பியும், அந்தத் திருட்டுப்பயலாகிய மாயனுஞ் சண்டை போட்டார்கள்.

இ-ன்— அடே! சண்டை போட்டதைத்தான் முன்னமே கேள்விப்பட்டேனே விபரமென்ன?

சி-ன்— அவர்களிருவருஞ் சண்டை போட்டபோது

இ-ன்— சண்டை போட்டபோது என்ன நடந்தது?

பே-ன்— யுத்தம் நடந்தது

இ-ன்— தூதர்காள்! யுத்தம் நடந்ததில் வெற்றி தோல்வி விபரமென்ன? சிக்கிரம் சொல்லுங்கள்.

சி-ன்— யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது தங்கள் தம்பி தடாரென்று ஒரு அறை அறைந்தார்.

இ-ன்— ஆ! ஆ! சந்தோஷம் என் தம்பி அற்பப்பயலாகிய மாயனைத் தடாரென்று ஒரு அறை அறைந்தானா?

பே-ன்— ஆம் மகாராஜா! அந்த அறையிலே அந்த மாயன் மயக்கமாகக் கீழே விழுந்துவிட்டான்.

இ-ன்— பேஷ்! பேஷ்! (பெருஞ்சிரிப்புடன்) அப்பால்?

சி-ன்— அப்பால் அவன் கணை தெளிந்தெழுந்து தங்கள் தம்பியை ஒருகுத்துக் குபீலென்று குத்தினான்.

இ-ன்— அடே துஷ்டர்களே! எனது தம்பியை அந்தச் சோரப் பயல் குபீலென்று குத்தினானா?

பே-ன்— குத்தினதிலொன்றுமில்லை.

இ-ன்— அப்பால் என்ன நடந்தது?

சி-ன்— அப்பால் தங்கள் தம்பி, அந்த மடப்பயலைக் காலாலே ஒரு எற்று எற்றினார்.

இ-ன்— என் தம்பி அவனைக் காலால் எற்றினானா? (சிரிப்பு)

பே-ன்— ஆமாம் மகாராஜா!

இ-ன்— அச்சா! அச்சா! (பெருஞ் சிரிப்புடன்) அப்பால்?

சி-ன்— காலாலெற்றினவுடனே வருத்தஞ் சகிக்கமாட்டாமல் அந்தப்பயல் கீழே விழுந்துவிட்டான்.

இ-ன்— மாயன் கீழே விழுந்துவிட்டானா?

பே-ன்— விழுந்துவிட்டான் பிரபு!

இ-ன்— பேஷ்! பேஷ்! பேஷ்! கேவலம் அந்த விஷ்ணுவென்னும் பயல் என்கனிஷ்டனுக்கு எம்மாத்திரம்? மந்திரிபிரதானிகளே! யானை, தேர், பரி முதலான வாகனங்களை யலங்கரித்துச் சகலமான விருதுகளோடு சென்று என் தம்பியை உபசரித்துப் பல்லக்கிலேற்றி யூர்வலஞ்செய்து கௌரவப்படுத்திக் கூட்டி வாருங்கள்.

சி-ன்— பிரபு! அப்பாலே கீழே விழுந்த மாயன் எழுந்தான்.

இ-ன்— அடே! என்ன சொன்னாய்? [உருத்து நோக்கல்]

சி-ன்— ஒன்றுஞ் சொல்லவில்லை, ஒன்றுஞ் சொல்லவில்லை (நடுங்குகிறான்)

இ-ன்— பயப்படாதே! பயப்படாதே!

சி-ன்— இல்லை இல்லை.

இ-ன்— சும்மா சொல்லு?

சி-ன்— வாயை மெல்லுகிறான்.

இ-ன்— (பெரிய தூதனைப்பார்த்து) அடே! நீதான் சொல்லு மாயனெழுந்து என்ன செய்தான்?

பே-ன்— மாயனெழுந்து ஒடுவதற்கு வழிபார்த்து மிரள மிரள விழித்தான்.

இ-ன்— ஓடுவதற்கு வழிதேடினானா?

சி-ன்— ஆம் ஓடுவதற்கு வழிதேடினான்.

இ-ன்— (பெருஞ் சிரிப்பு)

பே-ன்— அப்படி ஓடுவதற்கு வழிதேடினவுடனே, தங்கள் தம்பி இரண்டு புயங்களையுங் கொட்டி, மீசையையு முறுக்கித், தலையை யசைத்துச் செருமி, கனைத்து, பெரிய கூச்சலிட்டு, அவனைக் கிட்டிப் பிடரியைப் பிடித்துக் கீழே தள்ளி அவனைப் புரட்டினார்.

இ-ன்— சபாஷ்! சபாஷ்!, (சிரித்து) அப்பால்?

சி-ன்— அப்பால்அந்தத்துஷ்டமாயன்தங்கள்தம்பியைப்புரட்டினான்.

இ-ன்— என் தம்பியை அவன் புரட்டினானா?

பே-ன்— இல்லை இல்லை உடனே தங்கள்தம்பி, அவனைப்புரட்டினார். அவன் கீழாகவும், தங்கள் தம்பி மேலாகவும் இருக்க நாங்கள் பார்த்தோம்.

இ-ன்— சந்தோஷம்! சந்தோஷம்! அவன் கீழாகவும், என் தம்பி மேலாகவும், இருக்கப்பார்த்தீர்கள்?

(இருவரும்)— ஆம் எங்கள்கண்களாலேயே பார்த்தோம் அப்பப்பால்

இ-ன்— அப்பாலென்ன?

பே-ன்— அப்பாலந்தத் திருட்டுமாயன் மேலாகவும் தங்கள் தம்பி கீழாகவும் இருக்கக் கண்டோம்.

இ-ன்— என் தம்பி ஒருக்காலும் கீழாகவேமாட்டான். நீ கனவு கண்டாயா என்ன?

சி-ன்— இவன் பட்டப்பகலிலே விழித்துக் கொண்டிருந்துதான் கனவு கண்டிருக்கிறான். அப்படி ஒருக்காலுமில்லை. தங்கள் தம்பியும், அந்த மாயனும், கீழ்மேலாக உருண்டுகொண்டே பத்து யோசனைத் தூரம் புரண்டார்கள்.

இ-ன்— பின்பு?

பே-ன்— பின்பு இரத்தம்பெருகியோடும்படி மார்பைப் பிளந்துவிடும்படி நேர்ந்தது?

இ-ன்— யார் மார்பை யார் பிளந்துவிடும்படி நேர்ந்தது?

சி-ன்— தங்கள் தம்பிதான் இந்த வேலைக்குட்பட்டவர்.

இ-ன்— அடே நீ சொல்லுவதொன்றும் விளங்கவில்லையே! என் தம்பி எந்த வேலைக் குடன்படடான?

பே-ன்— மார்பு பிளக்கும் வேலைக் குடன்பட்டார்.

இ-ன்— அந்த மலமூண்ணும் பன்றியுருக் கொண்டவன் மார்பைப் பிளக்க உடன்பட்டானு?

சி-ன்— தாங்கள் சொல்லியது உண்மையான வாசகந்தான்.

இ-ன்— பேஷ்! பேஷ்!! மிகுந்த சந்தோஷம். மந்திரி! சந்தோஷச் சமாச்சாரம் சொல்லிய, இவர்களுக்கு வெகுமதியாக ஒரு முத்தாரங் கொண்டுவந்து கொடு.

மந்திரி— மகாராஜ்! இவர்கள் சொல்லும் வார்த்தை கவர்படு பொருளாகத் தோற்றுகிறதே தவிர உண்மை விளக்கமில்லை. இன்னுந் தெளிவாக விசாரிக்கவேண்டும்?

இ-ன்— அடே தூதர்களே! காலதாமதமாக்கி நேரத்தைப் போக்காமல் வெற்றி தோல்விகளின் விபரத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகச்சொல்லுகிறீர்களா? அல்லது இந்தக்கட்கததினுலே; உங்கள்சிரசைப் போக்கிக்கொள்ள நிற்கிறீர்களா?

பே-ன்— பிரபு! அந்தச் சுவேத வராகரூபங்கொண்ட மாயன், கொம்பாலே குத்தி மார்பைப் பிளக்கத் தங்கள் தம்பி உதிரம் வழிந்தோடப் பாதாள லோகத்தில் விழுந்திறந்தார்.

இ-ன்— ஆ தம்பி! இரணியாட்சா! இ-இ. (மூர்ச்சை)

பாட்டு.

பூவருந் திருவே என்ற மெட்டு.

இ-ம்-தேசிகதோடி-தா-ம் ஏகம்.

கண்ணி.

தம்பிபெருந் துணையாய் உனை
நம்பியிருந் தனனே தனி

இந்தமா திரி வஞ்சமாயனை ஒன்றியாய்விட நின்றபாதக
மேனெனக்கதை நீயுரைத்திட வேணுமித்தினம் நிச்சயமிங்கு (க)

பன்றிக் கொம்புபிளக்க தனால் உடல்
வெப்பி விழுக்கலையோ உயி
ரங்குநீவிட நின்றபோதுநி னைந்ததேது தெரிந்திலேனினி
யாருயிர்த்துணை யாயிருப்பவர் வாழ்வொழித்திட வுற்றதுநீங்கு (த)

உம்பர்பயந் தெளிவார் இங்கு
வந்தருகுந் திரிவார் துயர்
கொண்டுவாடுமெ னெஞ்சமோர்நிலை யின்றுசோகமு மிஞ்சலானது
நீசுகத்தொடு வாழிடத்தினி லேயெனக்கிடம் .வைத்துவைபாங்கு
அதிவிரைவி லிதுபொழுது வருகுவேன் (த)

வ-ம்— ஆ பாந்தவா! என்னைவிட்டு நீ எப்படிப்பிரிந்தாய்? அண்ணா! அரைச்சண நேரத்தில், ஹரியைக்கண்டுபிடித்துக் கொன்றுவருகிறேனென்று சொன்னசொல்லை மறந்தாயோ? கேவலம் மலமூத்திராதிகளை யாகாரமாகவுடைய பன்றியோ உனது மார்பைப் பிளந்து கொன்றது? உன்னை நீங்கி இனிநான் உயிர் வாழ்வதெப்படி? நமது தாயாதியராகிய தேவர்களும் இனிப் பயமில்லாமல் என்னெதிரே உலவுவார்களன்றோ?

விருத்தம்,

பலமிகு மெனதுதம்பி பராக்ரம னனதம்பி
கலைபல பயின்றதம்பி (என்) கண்மணி யானதம்பி
நிலைபெய ராமனாலும் நின்றிடுந் தம்பியுன்னை
மலமுண்ணும் பன்றியாகி மாயனோ கொன்றானந்தோ.

வ-ம்— ஆ! கனிஷ்ட பாந்தவா! உனது பிரிவாகிய சோகத்தை, என்னால் எவ்விதஞ் சகிக்கமுடியும்? நீ இறந்தாயென்று கேள்விப்பட்டு இன்னும் உயிரோடிருக்கிறேனே? என்போன்ற சகோதரத்துரோகி யாரிருக்கிறார்கள்? ஐயோ! நீ ஆவி விடும்போது என்ன நினைத்தாயோ? பொறு பொறு நீ இருக்குமிடத்தைத் தேடி நானும் நொடிக்குள்ளே வந்துசேருகிறேன். இல்லையேல்;

பாட்டு.

திருக்கடையூர்தனிலே என்றமெட்டு.

இ-ம் முகாரி-தா-ம்-ரூபகம்.

இனி எங்குன்னை நான் பார்ப்பேன் பார்த்து
என் துயரைத் தீர்ப்பேன்

அங்கம் பதறுதே யந்தமு குந்தனை
ஆகா கொல்லாம லடங்குமோ சிந்தனை (எ)

இங்குதனி யானேனே தோளி
ரண்டி லொன்று போனேனே
பங்கம் பிறர்சொலப் பழிக்குமுடன் பட்டுப்
பாரினுயிர் வாழு வேனோ மானங்கெட்டு (இ)

நம்பினே னெனைக் கெடுத்தாய் என்னை
நட்டாற்றில்கை விடுத்தாய்
வம்பனான மாய னோடமர் செய்போது
வாடி யிளைத்து மடிந்தாயோ மண்மீது (ந)

பன்றிக் கொம்பு மார்பில் பாய்ந்ததோ உடல்
கூறுபட வாய்ந்ததோ
செம்புருக்கி விட்டாற் போலெங்குஞ் சிவந்து
சேர்ந்ததோ ரத்தந் தரைமுற்றும் நிறைந்து (கொ)

வ-ம்— நீ இறந்தபோதே என்னிரண்டு தோளில் ஒருதோள் இழந்தவனானேன். 'உடல் பிறப்பால் தோள்வலிபோம்' என்ற நீதி மொழி இன்றுதான் அனுபவத்துக்கு வந்தது. இனிப் பூமியில் உயிர் வாழுவதற்கு எனக்கிஷ்டமில்லை. சேனாபதி ஒரு அக்கினிக்குண்டம் நிருமித்து, நெருப்பை வளர்த்துவிடு, அதில் விழுந்து என் பிராணனைப் போக்கிக் கொள்கிறேன்.

சேனாபதி— மகாராஜ்! தங்கள் தம்பியைக் கொன்றவனைப் பழிக்குப் பழி வாங்காமல், தங்கள் பிராணனை யிழப்பீராகில், நமது குலத்துக்கு இழிவு வருவதோடு, நமது பகைவராகிய தேவரும் கெக்கெலி கொட்டிச் சிரிப்பாரன்றோ? இதனை ஆலோசனை செய்யுங்கள் பிரபு!

இ-ன்— ஆம் ஆம்! அதுவுந் தக்க யோசனைதான். தம்பியைக் கொன்றவனைப் பழிக்குப்பழி வாங்கவேண்டியதவசியம். ஆகையினாலே நீங்கள் அவனைத் தேடிப்பிடித்து என் முன்னே கொண்டு வாருங்கள், அவன் மாயாவியானபடியினாலே உங்கள் நேத்திரங்களுக்குப் புலப்படமாட்டான். அதற்கு உபாயஞ் சொல்லுகிறேன். நான் சொல்லுகிற உபாய வழியில் நீங்கள் பிரவேசித்து நிற்பீர்களாகில் அந்தத் திருட்டு மாயன் அகப்படுவான் அதாவது:—

சந்தப்பாட்டு.

இ-ம்-கல்யாணி-தா-ம்-ஆதி.

ஈட்டுதானதவம் நாட்டுவாருடலை யீட்டிமீதிலுற வாட்டுவீர்
காட்டிலேயெரியை மூட்டியோமநிலை காட்டுவாருயிரை யோட்டுவீர்
மீட்டுமாமுனிவர்கோஷ்டியேபெரிய வேட்டையாகுமென மாட்டுவீர்
கூட்டமானபசு மாட்டைநேரிலிரு கோட்டைநூறிவிழ வீட்டுவீர்.

வ-ம்— ராட்சசவீரர்களே! தானதருமங்கள் செய்யும் நரர்களின் தலையைக் கட்கத்தால்வெட்டி எறியுங்கள், வேள்வி யாகாதி யெக்ய கருமச்சடங்கு செய்வோர்களைக் கொல்லுங்கள், தவரிஷி முனிவர்க்கங்களை நாசமாக்குங்கள், பசுக்கூட்டங்களைக் கால்மாடு தலைமாடாக விழும்படி வதையுங்கள், இவ்வகைகளைச் சகிக்க மாட்டாதவனாகி, அந்தக் கெடுதல்களை நிவிர்த்திசெய்ய, உங்கள் எதிரில் தோன்றினாலுந் தோன்றுவான். அவ்வகைகளின் மார்க்கமாக அவனை நீங்கள் காணாது போவீர்களாகில், அவனிருக்குமிடங்களை விபரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

சந்தப் பாட்டு

இராகம்—சங்கராபரணம்—தா-ம்—ஏகம்

எத்தான வித்தைபல கற்றேயொ ளித்தவனி
        ருப்பான தைப்பு கலுவேன்
எப்பாடு பட்டுமவ னைப்போயி ழுத்துவா
        விப்போது சித்த மிசைவீர்
தொத்தாரு நற்றுளசி பொற்பார்ப சுத்திரள்தொ
        குப்பாகு நிற்கு நிலையுள்
சட்டேது மற்றநிலை நிற்பார்ம திக்குள்மொழி
        சொற்பாடு பத்தர் குழுவுள்
சித்தாதி பர்க்குளெரி யுற்றூர்ம கத்துளுயர்
        சிட்டாச ரப்பு நிதருள்
திக்கோடு திக்கொலிப டத்தாவி யெற்றுயர்தி
        ருப்பால லைக்க டலினுள்
சத்தாமெ வற்றுளுமொ ளிப்பான்வி டிற்பொழுது
        தப்பாது கட்டி விரைவே
சற்றேனு நிற்கமன மொப்பாது கிட்டிடுமி
        னிப்போவீ ரட்டி யிலையே.

வ-ம்— எங்கே சடுதியிற்போய் கண்டுபிடித்துக்கொண்டு வாருங்கள்

(போகிறார்கள்)

ஸீன் முடிவு.

---

## ஸீன் 2.

காலம் — மாலை.
இடம் — அந்தப்புரம்.
பா-ள் — இரணியன், லீலாவதி.

லீலாவதி— நாதா! நமஸ்கரிக்கிறேன்.

இரணியன்— கல்யாண் லீலாவதி!

லீ—தி; பிராணேசா! என்றும் என்னால் கண்டிராத ஒருவிசனக்குறி இன்று தங்கள் முகத்திற் காணப்படுகிறதே காரணமென்ன?

இ-ன்— சகி! வாஸ்தவந்தான், அதாவது:— எனது கனிஷ்டபாந்தவனுக்கும், துஷ்ட மட்டிப் பிரஷ்டன் விஷ்ணுவுக்கும், பாதாள லோகத்தில் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறதென்று முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? அந்த யுத்தத்தில் எனதருமைக் கண்மணி இரணியாட்சனிறந்துபோனான்.

லீ-தி— ஆ ஆ ஆ ஆ! (மூர்ச்சையாகித் தெளிந்து)

பாட்டு.

அப்பா மகனே பாம்பு என்ற மெட்டு.

இ-ம்—செஞ்சுருட்டி—தா-ம்—அடைதாளம்.

கண்ணிகள்.

மைத்துனரே யிந்த மா நிலத்தாசைவிட்டுச்
செத்துமடிந்து போனீரோ ஐயையோ ஐ—ஐ

அண்ணருக் குதவியா யமரரைச் செயித்திட
எண்ணிவிண்புவி சென்றீரோ ஐயையோ ஐ—ஐ

மலத்தை யுண்ணும் பன்றியால் மாண்டுமடிந்தாலிந்தத்
தலத்திலுள்ளார் நகையாரோ ஐயையோ ஐ—ஐ

இரணியன் :— விருத்தம்.

சத்துரு வான மாயவ னெனது
தம்பியா மிரணியாட் சனையே
இத்தினம் வெள்ளைப் பன்றியா முருக்கொண்
டெதிர்த்துயிர் வதைத்தன னதனால்
நத்திநே னிந்தப் பகைமுடிப் பதற்கு
நான்முகத் தேவனைக் குறித்துப்
பத்திசெய் தவத்தால் வரம்பெற நினைத்தேன்
பாவை நீ விடைகொடுப் பாயே.

வ-ம்— சகி! மிஞ்சிப்போன காரியத்தைக்குறித்து வருந்துதலேயொழி என் தம்பியைக்கொன்ற மாயாவி என்னையுந் தருணம் நோக்கிக் கொல்லுவான் என்பதற்கு ஆட்சேபனையில்லை. ஆதலால், அவன் என்னைக்குறித்து யுத்தத்திற்கு முயலாமுன்னம், நான் முகத்தேவனைக்குறித்து, மகத்தாகிய தவத்தைச்செய்து, சாகாத வரம் பெற்றுவந்து, எனது குலத் துரோகியான அந்த மலமுண்ணும் பன்றியுருவெடுத்துக் கனிஷ்டனைக் கொன்ற சண்டாளனைப் பழிக்குப்பழிவாங்கிக் கொள்ளுவதற்கு விரும்பினேன். ஆகையால், நீ சற்றேனுந் தடைமொழி புகலாமல் சந்தோஷமாகத் தவஞ்செய்து வருவதற்கு விடை கொடுத்தனுப்பு.

லீ-தி:— கலித்துறை.

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மேத்தியடி
தொட்டுப் பணிபுரி யச்செய்து விட்டசிங் கத்துரையே
மட்டுக் கமலத்து நான்முக னைக்கண்டு வாரேனென்றீர்
விட்டுப் பிரிந்து புலம்புவனே யெந்த வேளையுமே.

வ-ம்— பிரியதுரையே! என்ன வார்த்தை சொல்லுகிறீர்? தம்மைப் பிரிந்து அரைட்சணந் தனித்திருக்க என்னாலாகுமா? என்னைப் பரிக்ஷை சோதிக்கிறீர்களா என்ன?

இரணியன் :— விருத்தம்.

எண்ணறப் படித்து நன்று யெழுத்தற வாசித்தாலும்
பெண்மதி பேதையென்னும் பேச்சையுன் னளவிற் கண்டேன்
மண்மிசை பகைமை நேர்ந்தால் மாற்றிடார் வாழ்வ துண்டோ
கண்மணி கவலை வேண்டாங் கருதிநீ விடையீ வாயே.

வ-ம்— பிராணசகி! உண்மையாகவே சொல்லுகிறேன் இனித் தாமதித்தால், நமக்கு ஆபத்து விளையாமற் போகாது; ஆகையால் சீக்கிரம் மணமங்களமாக விடைகொடு.

லீ-தி:— விருத்தம்.

அரைக்கண முமமை நீக்கி யாவியைத் தாங்கி யிந்தத்
தரைக்கணென் வாழு வேனே தாமறி யீரோ துன்ப
முரைக்கவோ மேலுங் கெற்ப முடையவ ளேழை யென்மே
லிரக்கமு மில்லை யோவிட் டேகநா னிசைகி லேனே.

பாட்டு.

வருவாயே வடமாலி என்ற மெட்டு.

இ-ம்—பைரவி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

சரியோ வாதுமிப் போதா
தாளேன் நா னெனது நாதா (ச)

அநுபல்லவி.

திரிலோகமும் நடுங்கும் போர்செய்
தீரரே ஜெய வீரரே யிது (ச)

சரணம்.

பூரண கெற் பத்தைக் கண்டீர்
போவதற்கு மாசை கொண்டீர்
தாரணியிற் றனித்திருக்கச்
சார்வேனோ வுடல் சோர்வேனோ விது (ச)

மலரு மணமும் போலே கூடி
வாழ்வதை விட்டுத் தவசை நாடி
அலரோனைக் கண் டுவரு மட்டு
மாறுமோ மனந் தேறுமோ விது (ச)

வ-ம்— பிராணேசா! தாங்களிப்பொழுது என்னைத் தனியாக இங்கு விட்டுத் தவத்திற்குப் போய் வருகிறேனென்கிறீர்? தம்மை என் நேத்திரங் காணுதுபோனுல், நிலை நிற்கமாட்டேனென்பதையுந் தாம் தெளிவாயறிவீர், மேலும், நான் பூரண கருப்பவதியாகவு மிருக்கிறேன். தாம் பிரிந்து போவது ஞாயமில்லை அடியாள் சொல்லை மாறுமொழி சொல்லி விலகிப் பிரிந்து போகாதிருக்க வேண்டிக் கொள்கிறேன் நாதா!

இரணியன்:— விருத்தம்.

சென்றதைக் குறித்து வருந்துவ தாலே
சிறிதள வாயினும் பயனே
மன்றலங் குழலாய் கவலைகொள் ளாதே
வனத்தினுக் கிதுபொழு தேகி
நின்றுநற் றவஞ்செய் தயன்வரம் பெற்று
நேர்ந்தவென் பகைவனை மரியைக்
கொன்றுநான் வருவேன் மனமகிழ் வாகக்
கொடுவிடை தடைபுரி யாதே.

வ-ம்— பெண்ணே! நானிங்கில்லாத கவலை உனக்கு வேண்டுவதில்லை உன் காவலுக்கும், ஏவலுக்கும் பல படைவீரர்களையும், சேடிகளையும் ஏற்படுத்திப்போகிறேன். ஆரடா சேவகர்களே! நான் தபசுக்குச் சென்று மீண்டுவருகிறபரியந்தம், எனது பத்தினியாகிய இவளுக்கு யாதொருவிக்கினமும் வராதபடி, சமீபத்திற் காவலாக நின்று, ஏவிய வேலைகளையுங்கேட்டு நடந்து வாருங்கள்.

சேவகர்— அப்படியே.

இ-ன்— சகி! போய் வருகிறேன்.

லீ-தி— சந்தோஷமாகப் போய்வாருங்கள். (போகிறான்)

ஸீன் முடிவு.

---

## ஸீன் 3.

காலம் — பகல்.
இடம் — தேவலோகம், இந்திரன் தர்பார் மாளிகை.
பாத்திரங்கள் — இந்திரன் முதலிய திக்கு பாலர்கள்.

## தேவேந்திர சபை.

இந்திரன் சுதர்மியெனும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறான். தேவர்களும், அஷ்டதிக்கு பாலர்களும், முனிவர்களும், அரம்பாஸ்திரீகளும் புடைசூழவிருக்கிறார்கள்.

வருணன், வாயு, குபேரன், எமன், நால்வரும் சேர்ந்து பாடும்

பாட்டு.

இ-ம்-பியாக்-தா-ம்-ஆதி.

பல்லவி,

தேவேந்திரா போகேந்திரா
சேகர யாகமம் நூறும்புரி (தே)

அநுபல்லவி.

பூவார்ந்துள கற்பக விருட்சமும்
காமதேனுவும் ஏறுவெள் ளானையும்
சேனையும் புண்ணியவசத்தில் கண்ணுற்ற (தே)

சரணம்.

இவணுடிய மூப்பத்து முக்கோடி
வரிசையாளர்கள் சூழ்ந்தருபீரிட
மேலாடர்காண் இன்பமிகுந்திர சம்ப்ரமனே (தே)

புலோமிசை ஊர்வசி
மேனகை சேர் (தே)

ஆசீர்வதிக்குந் தவயோகிகள்
சிவிகைதாங்கிட மேல்வரு மேகநல்வாகனு
அஷ்டதிசைக்கும் பட்டஞ்சேர் (தே)

வேறு பாட்டு.

கஜமுகதேவா என்ற மெட்டு.

இ-ம்-பியாக்-தா-ம்—ஏகம்.

கண்ணி.

போக வாசவா புண்ய ஜென்மிதா
பொருப்பை யெதிர்த்து முடுக்கி யடித்த
இறக்கை யறுத்தவா

மேகவாகனு சபா விண்டலாதிபா
விபத்தை யடுத்து இயற்று மரக்கர்
குலத்தை யொழித்தவா.

காவின் மாதவா கண்ணிறைந்தவா
கரும்பு வெறுக்க மொழிந் தசகிக்கு
விரும்பு மனத்தவா. (போ)

வ-ம்— தேவராஜா! நமஸ்கரிக்கிறோம்.

இ-ன்— கல்யாண்! உங்கள் யாவருக்கும் மங்களமுண்டாகுக.

இந்திரன் பாட்டு.

கோத்தவால் கோமளாங்கி கூறடியின்று என்றமெட்டு.

இ-ம்-பியாக் - தா-ம்-ஆதி.

கண்ணி.

அன்புடைய வருணனே நின்செய லென்ன
ஆசைகொண்டேன் கேட்டிடவு மட்டியேன் பன்ன

வ-ம்— வருணா! நீ எவ்விதம் நடந்துவருகின்றாய்?

ஷை வர்ணமெட்டு.

வருணன்— பாட்டு.

மாமறையோர் மன்னர்நீதி மாதர்கள் புக்கும்
மாதமூன்று மழைபெய்வே ஞெனென்றைக்கும்
வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினர்க் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை

என்றபடி மாத மூன்று மழையெனப் பெய்து, உலகத்திற்கு க்ஷேமத்தைக்கொடுத்துவருகிறேன் மகராஜ்!

ஷை வர்ணமெட்டு.

இந்திரன்- பாட்டு.

கலையிலேறும் வாயுவேயுன் னிலைமையும் யாது
காதுகேட்டு நான்மகிழ நீசொல்லிப் போது

வ-ம்— வாயுவே! உன் நிலைமை என்ன?

ஷை வர்ண மெட்டு.

வாயு- பாட்டு.

உத்தம நாட்டிலே தென்ற லாயடிக்குறேன்
உண்மையற்ற நாட்டிலே மடமிடிக்குறேன்

வ-ம்— உத்தமர்கள் வசிக்கும் நகரங்களில் தென்றற் காற்றுவீசியும், அதர்மர்கள் வசிக்கும் இடங்களில் மடங்களை யிடித்தும், குளங்களைத் தூர்த்தும் வருகிறேன் பிரபு!

ஷை வர்ணமெட்டு

இந்திரன்:— பாட்டு.

ஈசனுக்கு நற்றோழமை யானகுபேரா
இன்றுநின் செயலெனக் கியம்புவாய் சீரா

வ-ம்— குபேரா! உன் காரியாதிகளில் எப்படி நடந்து வருகிறாய்?

ஷை வர்ண மெட்டு.

குபேரன்:— பாட்டு.

புண்ணியவான்களுக்குப் பொன்னைக்கொடுக்கிறேன்
போக்கிரிகளை வறுமையில் விடுக்கிறேன்

வ-ம்— புண்ணியவான்களுக்கு அஷ்ட ஐசுவரியங்களைக் கொடுத்தும்; அதர்மர்களுக்குத் தரித்திரதிசையை அனுபவிக்கும்படி விடுத்தும் வருகிறேன்.

ஷை வர்ணமெட்டு.

இந்திரன்:— பாட்டு.

வைவசுதனே யுனது வண்மையும் யாது
வார்த்தையாலே நான்மகிழ நீசொல்லிப்போது

வ-ம்— எமதர்மா! நீ எவ்விதம் நடந்துவருகின்றாய்?

ஷை வர்ண மெட்டு.

எமன்:— பாட்டு.

சுத்த பத்தியோரைச் சுவர்க்கம் விடுக்கிறேன்
துஷ்டர்களுக்கு நரகத் தைக் கொடுக்கிறேன்

வ-ம்— பக்திமான்களுக்குச் சுவர்க்க முதலிய பதவிகளைக் கொடுத்தும், துஷ்டச் சண்டாளர்களைக் கும்பிபாக முதலிய நரகங்களிற்றள்ளியும் இம்சித்து வருகிறேன்

## இந்திரன் மற்றோருடன் ஆலோசனை செய்தல்.

நமது குலவைரியாகிய இரணியன் இதுவேளை தவஞ்செய்யச் சென்றிருக்கிறா னென்பதை யுணர்ந்தேன். அவனோ கொடிய சண்டாளன், மகா பலாஷ்டியன், இப்பொழுதே அவன் செய்துவரும்

உபாதை தேவர்களாகிய நமக்குப் பொறுக்கமுடியவில்லை. இன்னுந் தவப்பலனையும் அடைந்துவிட்டால், மேலும் என்ன அக்கிரமங்களைச் செய்வானோ? இருக்கட்டும் இவைகளைப் பார்க்கிலும், இரணியன் மனைவி லீலாவதி கருவுற்றிருக்கிறாள், துஷ்டனின் வீரியம் நற்குண சாந்தத்தையடைந்து நமக்கு இதத்தைச் செய்யமாட்டாது, விரையொன்று போட சுரையொன்று முளைக்குமா? இந்தக் கருவினுற்பவிக்கும் சிசுவாலே, நமக்குப் பலநாளும் துன்பமாகிய அனர்த்தத்தையே விளைவிக்கும். ஆதலால் தருண உசிதத்தை நாடி லீலாவதி கருப்பத்தை அழித்தல் வேண்டும். உங்களின் கருத்தென்ன?

மற்றோர்.

ஆம் கொடிய முள்ளினுடைய மரவிதையை விதைத்தால் முள்ளுள்ள மரமே முளைத்துப் பிறருக்குத் துன்பத்தை விளைவிக்குமாதலால் அதனை முளைக்கும்போதே நகத்தால்கிள்ளித் தூர எறிந்துவிட்டால் பின்னால் அவஸ்தையில்லை இதற்குத் தக்க உபாயம் தேட வேண்டுவதுதான.

இந்திரன்— நல்லது நானே சென்று லீலாவதியின் கருப்பத்தைச் சிதைத்து வருகிறேன் நீங்களிங்குதானே யிருங்கள்.

(இந்திரன் புறப்படுகிறான்)

ஸீன் முடிவு.

---

## ஸீன் 4.

காலம் — முற்பகல்.
இடம் — இரணியன் அரண்மனை
பாத்-ள் — லீலாவதி, இந்திரன், நாரதர்.

இந்திரன்— அண்ணி! இந்திரன் வந்திருக்கிறேன்

லீலாவதி— பாட்டு.

என்ன கேள்வி முறை என்ற மெட்டு

இராகம்-பிலஹரி—தாளம்-ரூபகம்.

பல்லவி.

வந்ததென்ன இந்திரா உன்றன்
வளமாகிய அமராவதி
நகர் நீங்கியே விரைவாகவே (வ)

அநுபல்லவி.

எந்த ஞாதனு ரிங்கு மில்லே
எப்படி வர லாமிவ் வெல்லே
மந்தி மதி தானோ மூல்லே
மலரானிறை குழலாரிடம்
மறு ஆடவர் வரலாகுமோ (வ)

வ-ம்— இந்திரா! நீ தேவராஜனாக விருந்தும் ஆலோசித்து உணர்ந்து பாராமல், எனது நாயகரில்லாமல், தனியாக விருக்குமிடத்துக்கு நீவந்தாயே இது நியாயமாகுமா? தனித்திருக்கும் பெண்களிடத்தில், வேற்றுப் புருஷர் வரலாகுமா? இருக்கட்டும் நீ வந்த காரியந்தானென்ன? அதனை முன்பு சொல்

இந்திர— பாட்டு.

தாகவிடாயு மாகுதே என்ற மெட்டு.

இ-ம்-ஸ்ரீராகம்—தா-ம்-ஆதி.

பல்லவி.

வந்த காரிய மிதுதான் அடி
மட நடை கொடி யிடை
யுடைய பெடை மயிலே (வ)

அநுபல்லவி.

சந்தத முங்கள்குலந் தன்னாலச்சே சஞ்சலம்
நொந்தினிச் சகிக்கிலம்
நொடிதனி லதுவக லவுமிது சமயமே (வ)

சரணம்.

சண்டாள னுன்கணவன் கொண்ட மதத்தினாலே
அண்டரோ டனுதினந் திண்டாடி னோனதாலே
ஒண்டொடி நீயவனின் பெண்டுன் வயிற்றின் சூலே
உண்டானாய்ப் புவிமேலே
உரிய சிசுபெறாமல் விடுவேனோ யினிமேலே (வ)

வ—— லீலாவதி! நீ இப்பொழுது உண்டாயிருக்கும் கருப்பத்தில் உற்பவிக்கும் சிசுவினாலே, பிற்காலமெங்களுக்கு அவஸ்தை நேரிட்டாலும் நேரிடும்; முன் நகத்தாலே கிள்ளி எறிவதற்கு எளிதான முட்செடி பின் கண்ட கோடாரி முதலான ஆயுதங்

களைக் கொண்டு சிரமப்படும்படியான செயலைக்கொடுக்குமாகை யாலே, முளையிலே கிள்ளும் நிலையை நான் எண்ணி வந்திருக் கிறேன். இதனாலே உனக்கு யாதொரு அவஸ்தையும் உண் டாக்க மாட்டேன். நீ இந்தச் சிசுவைப் பெறுகிறவரை எனது காவலுக்குளிருந்து, குழந்தை பிறந்தவுடனே அதை யென்னி டங் கொடுத்துவிட்டுச் சுகமாக வந்துவிடலாம், ஆகையாலிப் பொழுது என் பின்பற்றி வருவாயாக.

லீ-வதி— வெண்பா.

பொல்லாப் படுபாவி போக்கிரிநீ வந்துநின்ற
தல்லாம லென்னை யதட்டுகிறாய்—கல்லாத
மூடனே வல்லால் முடிவுகா லம்வந்து
கூடநீ கொண்டதுவோ கூறு.

வ-ம்— அடே பொல்லாதபடுபாவியான சண்டாளா! உனக்குக்கேடு காலம் வந்து கிட்டிக் கொண்டதா என்ன? எனது கருப்பச் சிசுவைச் சின்னா பின்னப் படுத்தவா நினைத்தாய்? அடே சிசு காதகா! இங்கு நிற்காதே அப்பாலே விலகிப்போய் விடடா அசட்டு மடப்பயலே!

இந்திரனுக்கும் லீலாவதிக்கும்

தர்க்கப் பாட்டு.

இ-ம்-கமாசு—தா-ம்-ரூபகம்.

கண்ணி.

இந்திர— அடடி நானுன்னை விடுவேனோடி போடி
அநியாய மென்று
அவனியிற் பயப்படு வேனோடி வாடி
கடையனாகுமுன் கணவன் வருமுன்
கதறிநீ யழுகினும் வருந்தி
இதமுடன் மனமது பொருந்தி (அ)

லீ-தி— கெடுமதி கொண்டு பட வெண்ணினாயோடா
அடடா முழு மூடா
கெருவமாக யோசனை பண்ணினாயோடா
சடுதியிலோடிச் சாரில்லா விடில்
தலைதனை யசுரர்க ளுடைத்துக்
கொலைபுரி குவாரு கடுத்து (கெ)

இந்திர— அசுரர்கள் வலி யறிவேனடி நானே
வர அட்டி செய்திடில்
அட்டி யவஸ்தைப் படுவாய் நீ தானே
சிசுவை வதைத்து என் சினத்தைத் தணித்துத்
திருவமராபதி சென்று
நிலை பெறுவேனடி இன்று (அ)

லீ-தி— கொடிய சண்டாளா நினைவேண்டா கொண்டாய்
குழந்தையை வதைக்கக்
கூடுமோ வுன்னால் பேடியே வண்டா
தடிமரம் போல் வளர்ந்த முரட்டுத்
தறுதலை மடையனே மூடா
அறிவிலி வெறியனே போடா (கொ)

வ-ம்— அடே மடையா! வாயில் வந்தவாறு பேசி வாதாடுகிறாய், இது நியாயமல்லாத காரியம், என்னையகனில்லாத சமயம் நோக்கி யிங்கு வந்து, என் கருப்பச் சிசுவை நாசஞ் செய்வதற்குடனழைக்கிறாய், நீ சரியான மீசை முளைத்த ஆண்பிள்ளையாகவிருந்தால், ஒரு பெண்ணிடத்தில் வந்து வீரப்பிரதாப வார்த்தைகள் பேசமாட்டாய். நீ ஆணுமில்லாத பெண்ணுமில்லாத பேடியென்றே நினைக்கிறேன். உனக்கு ஸ்திரீஹத்தி தோஷமும், சிசு ஹத்தி தோஷமும் நேரிட வேணுமா? அல்லது அகன்று போகின்றாயா? எது இஷ்டம்?

இந்திர— சந்த விருத்தம்.

விரைத்தமலர் தொடுத்தமுடி தரித்திடம
ரருக்கு மிறை, வீர னெனின்
றுரைத்தமொழி தடுத்ததென விடுப்பனென
நினைத்தமதி, யோடி, யல்லால்
நுரைத்தமது குடிக்கவரு குலத்தினிலு
முதித்தவலி. நோக்கி யோடி
வரைத்தபடி யிழுத்துமுனை வயிற்றினிட
முளைத்தசிசு, வாங்கு வேனே.

வ-ம்— நானுன்னை மிக மரியாதையான மொழிகளினாலே அழைக்கிறேன். நீ அவைகளைக்கவனிக்காமல், என்னைநிந்திக்கின்றாய்? இந்தக் கருப்பச் சிசுவாலே நேரிடும் அவஸ்தைகளை உத்தேசித்தே

யிக்காரியத்தில் பிரவேசித்தவனாக விருக்கிறேன். நினைத்த காரியத்தை நிறைவேற்றாமல், இடை நடுவில் விட்டுப் போகப் பட்டவனானல்லன். எவ்விதத்திலும் உன் கருப்பத்திலிருக்கும் சிசுவை நான் சேதப்படுத்தாமல் போகமாட்டேன். இதனை உறுதியாக நம்பு, என்னை யாரென்று நினைத்தாய்? (புயந்தட்டுகிறான்)

வீ-தி— கலித்துறை.

கொட்டிப்பு யங்களைத் தட்டிவந் தேபெருங் கூச்சலிட்டு
வெட்டிச் சிசுவை வதைத்திடு வேனென வீண்மொழிகள்
எட்டிக் கனியென என்செவி கேட்கவு மின்றுரைத்தாய்
மட்டிப் பயலுனக் குத்தகு மோவிந்த வாய்மதமே

வ-ம்— அடே மடையா! நீ தோள்தட்டிக் கர்ச்சித்து நிற்கும் படாடோபங்களுக்குப் பயப்படுவேனென்று நினைத்தாயோ? பனங்காட்டு நரி சலசலப்புக்கு எங்கேயாவது பயப்படுமோடா? வாய்மதம் பேசும் வார்த்தையை விட்டு வந்தவழியே மீளவுந் திரும்பிப் போய்விடடா மானங்கெட்ட மதிமந்தா!

இந்திர— தர்க்கப்பாட்டு,

மகனே மகனே யென்று சேகசாலி என்ற மேட்டு.

இ-ம்-மோகனம்—அடதாளம்.

கண்ணிகள்.

மதமாக என்னொடு எதிர் வாது பேசிடும்
விதமேது அதனையே சொல்லடி பெரு
மிதமனு வேனு நன் றல்லடி என்ன
கெருவித முனக்கிந்த மல்லடி எனக்
கேது போனாலுங் கெற்பச் சிசுவைநான் விடமாட்டே
னதனை நீ தந்துபின் செல்லடி

வீ-தி— ஷை மேட்டு பாட்டு.

அழையாத வீட்டிலே நுழைகிற நாய்போலே
பழிகாரா நீ நுழைந் தாயடா . சிசு
வதைசெய்வே னெனமொழிந் தாயடா முன்ன
மகவிகையி லைழிந் தாயடா என்னைத்
தழுவிய நாயக னிதுவறிந்தா லந்த
க்ஷணமே யுயிரொழிந் தாயடா

இந்— தாறுமாருய் மொழி கூறுகிருயுன்றன்
தலைமயிர் பற்றிப் போ வேனடி இல்லால்
அமரேந்த்ர னுவேனே நானடி மிக்க
இறுமாப்புக் கொள்வது மேனடி ஆர்க்கும்
ஆறிலுஞ் சாவுண்டு நூறிலுஞ் சாவுண்டு
அதனை லசுரர்க் கஞ்சி லேனடி

வீ-தி-- பாபமென் றெண்ணுமல் கோபங்கொண்டு மிக
பரபரப் பாகவே நடிக்குருய் மனப்
பாலைக் குமட்டாமல் குடிக்குருய் உந்தன்
பவுஷாகளைச் சொல்லிப் படிக்குருய் ராஜ
பூப னென்னுதனிச் சேதி கேட்டு விட்டால்
போச்சேயுன் சிரமேண்டா துடிக்குருய்

வ-ம்— அடே சண்டாளா! எனது பிராணேசர் இது சமாசாரத்தை யறிந்தால், உனது கெதி என்னவாக முடியும்? ஏண்டா இக்கொடிய பாவத்துக்கு ஆளாக நிற்கிருய்? வேண்டாம் என்னைவிட் டகன்றுபோ.

இந்திர— விருத்தம்.

இதுவரை யபலையென்று இதமான வார்த்தை சொன்னேன்
மதமது கொண்டுநீயு மறுத்தனை யினிச் சகிக்கேன்
அதமனின் வீரியத்தா லானவுன் சிசுவைத் தந்தால்
கொதிமன மடங்கு மில்லால் கூந்தல்பற் றிப்போவேனே.

வ-ம்— நீ பெண்ணென்பதாக நினைத்து இதுவரை இதமான வார்த்தைகள் சொல்லி உடனழைத்தேன். நீ அவைகளைக் கவனிக்காமல், என்னை நிந்தித்துப் பேசிவிட்டாய், போகட்டும் இப்பொழுதும் சொல்லுகிறேன், நீ உண்டாயிருக்கும் சிசுவைத் தருகின்ருயா? அல்லது உன்கொண்டையிற் கைபோட்டுஇழுத்துக்கொண்டு போகவேண்டுமா? பதிலென்ன சொல்லுகிருய்?

வீ-தி— விருத்தம்.

ஒருயோனிக் காசைப்பட்டு உடம்பெல்லாம் யோனியானுய்
வருபாப மதுவெண்ணுமல் வதைத்திடச் சிசுதா வென்ருய்
எருதாநீ பேயாசற்று மிரக்கமில் லாததென்ன
கருதாதே யருகுருதே கள்ளனே யகன்று போடா.

வ-ம்— அடே நீ ஆதிகாளில் ஒரு யோனிக்காசைப்பட்டு உடம்பு முழுவதும் யோனியாகினுய். அக்கிரம நிலைப்பாவத்தைக்கூட ஆலோசித்துப்பாராமல், நானுண்டாயிருக்குஞ் சிசுவை வதைக்கக்கருதிக் கொடுவென்கிருய். நீ மனுஷனு? மாடா? புத்தி சிறிதேனு மில்லவேயில்லையா? எட்டியப்புறம் அகன்றுபோடா வெடகங்கெட்ட வெறிநாய்ப்பயலே!

தர்க்கப் பாட்டு.

தந்திடு தந்திடு தையலே என்றமெட்டு.

இ-ம்-பியாக் - தா-ம்-ஆதி-

கண்ணி.

என்னடிஎன்னடி எதிர்வார்த்தை பேசுருய்
எற்றபடி வாயில் வந்ததெல்லாஞ்சொல்லி யேசுருய்

லீ-தி— மூடா குடிகேடா ஆகுமோடா
முசுவே வயிற்றுச்சிசுவை வதைக்கத் தகுமோஉனக்கு

இந்தி— அட்டிநீ செய்திடில் வெட்டுவேனுன் பாரடி
அண்டருக் கரசனென்னை யாவர்தடுப் பாரடி

லீ-தி— மதமா என்ன விதமாக மொழிந்தாய்
மலடனைப்போல் என்குல விளக்கைநீ கொலைசெய்யவந்த

இந்தி— கொஞ்சமு மஞ்சாமல் வாய்மிஞ்சுவது மேனடி
கொண்டையிற் கைபோட்டு முன்னைக்
கொண்டுபோவே னுனடி

லீ-தி— ஆளனில்லா வேளைவந்து நின்று
அதட்டி யளகம் பிடித்திழுத்திடத்
துடிக்கின்றமுழு மூடா

வ-ம்— அடே துஷ்டா! என் கூந்தலிலே கைபோடுவாயாகில் உடனே நீ நாசமாய்ப்போவாய். கணவனை தெய்வமாக நினைக்கும் காரிகையார் சாபம் பலனைக் கொடுக்காமல் போகாது, வேண்டாம் அக்கிரமப் பிரவிர்த்தியை விட்டுவிடு.

இந்தி— சந்த விருத்தம்.

செருக்கடி மனத்தினி லிருக்கடி உனக்கது
செழித்தபுக ழைக்கொடாது
திருக்கடி விடுத்திடி லுனக்குயர் சிறப்படி
சிறுக்கிவல ரக்கியேயுன்
கருக்கடி தில்வைத்திடி லெடுத்தடி பெயர்ப்பனடி
கற்றமொழி வித்தையெல்லாந்
தருக்கடி யெதுக்கடி நிறுத்தடி அடிக்கடி
சவுக்கடிகொ டுப்பேனடி.

வ-ம்— அடி உன் வயிற்றிலிருக்குஞ் சிசுவை என்னிடங் கொடாது போனால், உன்னைவிடமாட்டேன். இதை நிச்சயமாக நம்பு. இந்தச் சவுக்குப்பூசை வேணுமா? அல்லது என்பின்தொடர்ந்து வருகின்றாயா?

லீலாவதி— விருத்தம்.

மாட்டைமேய்ப் பவனைப்போல வந்தொரு சவுக்கை நீட்டிக்
காட்டுறாய்க் கடினவார்த்தை கனைக்கிறாய் கழுதைபோல
கூட்டுறாய் சுருதிபாடிக் குதிக்கிறாய் அடடாஇந்த
மேட்டிமை செல்லாதிங்கு வீணனே யகன்றுபோடா.

வ-ம்— மாடு மேய்ப்பவனைப்போல சவுக்கொன்றை நீட்டிக்காடிட் மிரட்டுகிறாய்; உனது பட்டி மிரட்டுகள் இங்கு பலிக்காது. நீ வாவாவென்று உடனழைக்குங் கழுதைக்குரலைக் காட்டாமல் இப்பொழுதே அகன்றுபோய்விடு.

இந்தி— சே சே துஷ்டே! வாடி என் பின்பற்றிவா! (கூந்தலைப் பிடித்திழுக்கிறான்)

லீலாவதி— பாட்டு.

பாலா என்னகாலம் வந்ததடா மகனே என்றமெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி - தா-ம்-ரூபகம்.

கண்ணி.

ஐயோ இந்தப்பாவி யிழுக்கிறான் தெய்வமே
ஆகா தெய்வமே என்றன்
அங்கம் பதறி நடுங்கி வருந்துதே
பங்க மடையாம லெங்குபோய்த் தங்குவேன் (ஐ)

இந்தி— பாட்டு.

ஏதுக்கிந்தச் சரப்பளியினால் என்ற மெட்டு.

கண்ணி.

தெய்வ மென்னடி செய்யு மென்னொடு
சேயிழாய் வந்து சேரடி
வைய மழிக்குஞ் சிசுவைத் தந்திட
மாட்டே னென்றாயுனை வாட்டுவேன் பாரடி (தெ)

4

லீ-தி— ஆணை யொருவரையுங் காணேன்
ஐயோ தெய்வமே ஆ ஐயோ தெய்வமே
துஷ்ட சண்டாளனுங் கெட்ட பயலிங்கு
மட்டிப் புத்திகொண்டு கிட்டிக் கொண்டை பற்றி (ஐ)

இந்தி— தடுத்து மொழிந்த வாயைக் கிழித்துப்
படுத்தும் பாடினிப் பாரடி
திடத்துடன் வயிற்றி லிருக்குஞ் சிசுவை
இழுத் தறுத்துயிர் வதைப்பே னித்ததி (தடு)

வ-ம்— அடி! தடுத்துப் பேசும் உனது வாயைக் கிழித்தெறிவேன் என்னை யாரென்பதாக இன்னும் எண்ணி நிற்கிறாய்?

விருத்தம்.

பூனைவா யெலிதப்ப வகையேது புலிவாயின்
புல்வாய் தப்பாது மதமே
ஞானைவா யதிலுற்றி டுங்கரும் போமீளும்
ஆரடி யெனைத் தடுப்பார்
மான மானதுசற்று வேண்டுவ துனக்கெனில்
மரியாதை யோடு சிசுவைத்
தானிதே க்ஷணமிக்க மகிழ்வோடு கரமீது
தந்திடு விடேனனடி.

வ-ம்— அடி பூனைவாய் எலி மீண்டாலும், புலிவாயி லகப்பட்ட மான் மீண்டாலும், ஆனைவாயிற்போன கரும்பு மீண்டாலும், என் கைவசமானவர் மீளார். நான் திரிலோகாதிபதியாகையா லென்னைத் தடுப்பவர் எவரேனுமில்லை. உன் வயிற்றிலிருக்கும் சிசுவை என்வசந் தந்துபோ இல்லையேல் உன்னை விடமாட்டேன்.

லீ-தி:— விருத்தம்.

பத்துமா தத்தோடு கிரகமுஞ் சமராசி
பகர்யோக கரணம் நன்னாட்
சத்திரா திக்கமும் நிறைவாகி யீசனின்
றன்னருள் சுரந்திடாமல்
புத்திரா னுற்பவித் திடவேனு வழிகெட்ட
புலையனே என்றும் வேலை
சித்தியோ பெற்றநா னெப்படி யளிப்பது
சிறப்பிலை யகன்று போடா.

வ-ம்— அடே மூடா! நினைத்த வேளையில் பிள்ளையைப் பெறுவாரோ? பத்துமாதமும் பூரணமாக நிறைந்து, நட்சத்திரம், ராசி, லக்கினம், யோகம், கரணம், திதி முதலான கால அளவு, நன்மை தீமை விளக்கும் கஷ்டசுக லாலனபாலன நிலைகளெல்லாம் பூர்வவினைப்படி யமையப்பெற்று, ஈசுரனியதிப்படி யல்லவோ குழந்தை பிறக்கவேண்டும். இவ்வகைகளைச் சற்றேனும் ஆலோசித்துத் தெளியாமல், சிசுவைக்கொடு, சிசுவைக் கொடு வென்று கேட்கிறாயே உன்புத்தி யென்ன தென்னைமரமேறிப் புல் பிடுங்கிவரப் போயிருக்கிறதோ? அகன்று போடா அறிவுகெட்ட மூடா!

## நாரதர் வருகை.

பாட்டு.

ஆனலவனுக்கோ அற்ப பிராயமே என்ற மெட்டு.

இ-ம்-நாதநாமக்கிரியை—தா-ம்-ஆதி.

பல்லவி,

சங்கீத சாரமே
சாற்றவு மபார மாமே (சங்)

அநுபல்லவி.

ஜதி சுதி லயவகை மனமதை யொருநிலை
தனிலுற நிலை நாட்டும் மதி
தரும் நிஜமது காட்டும் சிவ
ஸ்தல மதிலருள் கூட்டும் ஒரு
சஞ்சல மில்லாம லோட்டும் (சங்)

சரணம்.

பிறவி யெனு மரிய பிணி விலகிட விது
பெரிய அவிழ்த மாகும் வந்து
பெருகிய வினை போகும் செய்த
பிழை விலகியு மேகும் ஆசை
பித்த மென்னுங் காடு வேகும் (சங்)

இந்திர— சுவாமி நமஸ்கரிக்கிறேன்.

நா-ர்— கல்யாண்! இந்திரா! இது என்ன தகாத காரியத்தில் பிரவேசித்து ஸ்திரீஹத்தி தோஷத்தை ஏற்றுக்கொள்ள முயன்று நிற்கிறாய்?

பாட்டு.

வரவிதுசமையம் வா வா வா அரசனறியநேரே என்றமெட்டு.

இ-ம்-பியாக்—தா-ம்-ஆதி.

பல்லவி.

அதம மிதல்லவோ அமரர்க ளிறையே
அகல் வாயிது ததியே பொல்லாத தாம் (அ)

அநுபல்லவி.

இதமில்லை யதனால் இவள்மீ தடமேன்
இனி நீ விடுவா யில்லையே லழிவாய் (அ)

சரணம்.

வேதநெறி மாறுதல் தீ ததன வேதெரி
யாதவித மேது முறையா—சொல்லாடி
வேளையிதில் நீதியை நீ நினைகிலாமலும்
வேதை செய்ய நாடுகிறையா
பாதக தாகிய வேலை செய்யலேன் மொழி
பகர்வே னதுகேள் நலம் நீ யடைவாய் (அ)

வ-ம்— அமரேந்திரா! வேதாகம உபநிடதங்களை நீ கற்றுணர்ந்தும் மற்றோருக்குப் போதித்தும், செய்கையில் மாறுகொண்டு நடந்தால், உனக்குப் பெருமையைக் கொடுக்குமா? இவள் மகா பதிவிரதை, ஒரு குற்றமுமில்லாதவள், இவள் மீது உனக்கிவ்வளவு கொடிய கோபமுண்டாகக் காரணமேன்?

இந்திர— சுவாமி! இவள் இரணியன் மனைவி, அவனோ எங்கள் குலவைரியாகி, நாடோறும் எங்களுக்கு அனர்த்தத்தை விளைத்து வருகிறான். அந்த வேதையைச் சகிக்கமாட்டாதவர்களாகி, நாங்கள் தத்தளித்து வாடிக், திக்கு முக்காடிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், இவளும் கருப்பமடைந்து விட்டாள். இக்கருப்பத்திலுதிக்குஞ் சிசுவானது கொடிய துஷ்டனின் வீரியமானதால், பின் இச்சிசுவாலும் எங்களுக்கு அநேக அனர்த்தங்கள் விளைய நேரிடுமென்று பயந்து, இப்பொழுதே இக்கருப்பச்

சின்னத்தை ஒழித்துவிட நினைத்துவந்தேன். வேறு விசேஷமொன்றுமில்லை. இதில் தோஷமென்ன? தேவமானுஷிய பிராணி வர்க்கமனைத்திற்கு மிடுக்கண் விளைவிக்கும் ஒருசிசுவை ஒழித்து விடுவது சர்வஜீவ சம்ரட்சண தருமந்தானே?

நா-ர்— யாகபதே அப்படியில்லை. நான் சொல்வதைக் கேள். இவளது கருப்பத்திலிருக்கும் சிசுவினுடைய மகத்துவத்தை யறியாதபடியால், பயப்பிராந்திகொண்டு உளறுகிறாய். நீ யாதொன்றுக்கும் இனி வருத்தமடையவேண்டாம்.

பாட்டு.

இ-ம்-சாவேரி —தா.ம்-ஆதி.

பல்லவி.

இந்தச் சிசுவினாலே யிந்திரா உங்களுக்கு
இன்பம் வருந்தப் பாது

அநுபல்லவி-

சிந்து சயனனடி தினமு மறந்திடாமல்
புந்திதனை யொடுக்கிப் பூசை செய்யுமதனால் (இ)

சரணம்.

மூங்கிலி லேயிருந்து முளைக்கும் நெருப்பினாலே
முழுது மதன்குலமே மோசமா மது போலே
தாங்கிய விரணியன் தமரோடு மாலாலே
சாவதுவே நிச்சயம் தடையில்லை யினிமேலே (இ)

வ-ம்— ஆகண்டலா! இவள் கருப்பத்திலே நின்றும் பிறக்குஞ் சிசுவினாலே உங்களுக்கெல்லாம் க்ஷேமமுண்டாகும். ஸ்ரீ விஷ்ணு பகவானுக்குப் பரம பக்தி செலுத்தும் ஜீவாத்மாவே இவள் வயிற்றில் தங்கியிருப்பதாக நினைப்பாய். துஷ்ட ராட்சசரெல்லோரும் நாசமடைவதற்கு ஏதுவானது இவள் கருப்பம். மூங்கிலிலே பிறந்த நெருப்பு, தன்னினமாகிய மூங்கிலை யெல்லாம் சுட்டெரித்து அழிப்பதுபோல் இக்கருப்பச் சிசுதோன்றித் தன் குலத்தினரை யெல்லாம் நாசப்படுத்துமென்பதற்கு ஆட்சேபனையில்லை. ஆதலால், இவளை யென்னிடம் விடுத்து நீ உன்னிடம் போய்ச்சேர், நான் இவளை நாயகன் இரணியனிடம் சேர்த்து விடுகிறேன்.

இந்திர— சுவாமி! நான் இவ்வித தகாத கர்ரியத்தைச் செய்தே னென்று, இரணியன் கேள்விப்பட்டால், என்னை எளிதில் விடமாட்டானே இதற்கு நானென்ன செய்வேன்?

நா-ர்— மேகவாகனு! அஞ்சாதே, இவ்விஷயங்களினுலே உனக்கு ஒரு துன்பமும் வராமல் நான் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்கிறேன் நீ உன்னிருப்பிடம் போய்ச்சேர். (இந்திரன் போகிருன்) [லீலாவதியைப் பார்த்து]

அம்மா! உனது நாயகனே தவசு செய்யப் போயிருக்கிருன். அவன் வரம் பெற்று மீண்டு வருகிறவரை எனது ஆச்ரமத்தில் சுக சௌக்கியமாக வசித்திருப்பாயாக வா போகலாம்.

லீ-வதி—சுவாமி! அப்படியே போகலாம்.

(போகிருர்கள்.)

ஸீன் முடிவு.

---

## ஸீன் 5.

காலம் — பிற்பகல்.
இடம் — மலைச்சாரல்.
பா-ள் — இரணியன், பிரமா.

### இரணியன் தவ நிலை.

பாட்டு.

முத்திநெறி யறியாத என்ற மெட்டு.

இ-ம்-ஆரபி-தா-ம்-ஆதி.

கண்ணி.

வெண்கமலந் தங்கிகித மன்பருளுஞ் சுந்தரியாம்
பெண்கொடியின் பங்கருது மெண்கண்ணு நின்சரணம்
மண் புவனங் கண்டுதொழ வந்து தவங் கொண்டதனல்
பண்புடனின் றேன்றனெதிர் வந்துதவும் பங்கயனே.

பிரமன் பிராப்தம்.

வ-ம்— வரம்ப் ரோகி பக்தா! வரம்ப் ரோகி.

இரணியன்— பாட்டு.

அண்டர்பகை யின்றுகெட வென்றுஜெயங் கொண்டிடவும்
பண்டெமது தந்தைமுதல் வந்தவாகள் நிறைநிலை
கண்டவர்க ளும்பணிய நன்குபுகழ் கொண்டிடவும்
வண்டுபல கிண்டுமலர் வந்தவனே தந்தருளே.

பிர-வ-ம்— பக்தா! உனது தவத்திற்கு மெச்சினேன். நீ யாரைக் குறித்துத் தவஞ்செய்து நின்றுயோ அந்த நான்முகன் ப்ரத்தியட்சமாக வந்திருக்கிறேன்.

இர-வ-ம்— அடே துஷ்டா! நீ யாவன்? எனது தவநிலையைக் கெடுக்க மாருட்டமான மொழியோதுகிருய், அப்பாலே யகன்று போய்விடு, இல்லையேல் இப்பொழுதே உனது பிராணனை எமலோக மனுப்பி விடுவேன். போ, போ, நிறகாதே.

பிர-வ-ம்— வத்சா! மாறுபாடுடைய ஒருவன் உனது தவநிலையைக் கெடுக்க வந்திருக்கிறுனென்று நினையாதே, கண் விழித்து என்னைப்பார், நானே உன் லட்சியத்தில் நிற்கும் பிரமன்.

இரணியன் (கண் விழித்துப் பார்த்து)

பாட்டு.

கண்டேன் கோபாலா அந்த என்ற மெட்டு.

இ-ம்-கமாஸ்-தா-ம்-ஆதி.

பல்லவி.

உண்டு பண்ணு கின்ற தொழி
லுள்ள பரனே

அநுபல்லவி.

அண்டர் பதம் அண்டிப் பணி
நான்கு சிரனே (உண்)

சரணம்.

கல்விக் கிறைவள் கலவிக்கு இதனே
செல்வத் திருமால் புகழுந் திவ்ய சுதனே (உண்)

பாதமலர் மீதுபணி யோதி நின்றேனன்
வேத மறையோனேயாசி பேசுவாய் நீதான் (உண்)

வ-ம்— தேவா! உண்மை தெரியாமல் வேற்றுன தேவரிலெவனே எனது தவத்தைக் கெடுக்க வந்திருக்கிறுனென்று நினைத்துப் பலவாறு நிந்தித்துவிட்டேன். அந்தக் குற்றத்தை முற்றிலும் பொறுத்து என்னை யாட்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

பிர-வ-ம்— பக்தா! உனது திடச்சித்த வைராக்கியத்தை மெச்சிப் புகழ்ந்தேன். உன்நிந்தை மொழிகளையெல்லாம் அன்பிஞலென் புருகும் தோத்திரமாகச் செவியேற்றேன் உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்.

இரணியன்— பாட்டு.

எப்படி யிருந்தால் நமக்கென்ன என்ற மெட்டு.

இ-ம்- தர்பார்— தா-ம்-ஆதி.

பல்லவி.

இந்தவர மொன்றெனக்குத் தருவிர் நீர் (இ)

அநுபல்லவி.

மிகு- கந்தமல ராசனத்தில் வந்தவும தாதரத்தில் (இ)

சரணம்.

மந்திர வலியுடைய மாமுனிவர் தேவரிஷி
வர்க்க முதலியோர் படை யாலும் கெட்ட
மாரண ஓமயாகங்கள் கோரமுள சூனியங்கள்
வஞ்சனைசேர் பில்லிவகை யாலும்
தந்திர மாயங்களறி யும்பகைவர் போரிஞலும்
சாகு மார்க்க மில்லாமலே யிருக்கவே யெந்நாளும் (இ)

வ-ம்— தேவா! இந்திராஸ்திரம், சந்திராஸ்திரம், வருணுஸ்திரம், வாயுவாஸ்திரம், நாகாஸ்திரம், கெருடாஸ்திரம், இடியாஸ்திரம் நாராயணுஸ்திரம முதலான எய்படைகளாலும்; சக்கரம், தண்டம், இருப்புக்குண்டு, வளைதடி முதலான எறிபடைகளாலும், வாளாயுதம், சந்திராயுதம் வீச்சரிவாள், கண்டகோடரி முதலான வெட்டுப் படைகளாலும்; பிண்டி, பாலா, சூலம், வேல், ஈட்டி; கட்டாரி முதலான குததுப்படைகளாலும்; உரகர், பன்னகர், சித்தர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர், விஞ்சையர், கந்திருவர்களாலும்; பூமி, அந்தரம், சுவர்க்கங்களி

னும், இரவிலும், பகலிலும், உள்ளிலும், புறம்பிலும் நான் சாகாதிருக்கும்படியான ஒருவரத்தை யெனக்குக் கிருபை பாலிக்க வேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடுங் கேட்டுக்கொள்கிறேன் அநுக்கிரகிக்கவேண்டும்.

பிரமன்— வத்சா! புவியிற்பிறந்தோரெல்லோரும் இறக்கும் நிலை வாய்ந்தவர்களே. ஆகையால் நீ விரும்புஞ் சாகாவரம் கிடைக்காது. 'அமரத்வ' வரத்தைக் கொடுத்திருக்கிறேன். அதாவது:—நீ கேட்டவைகளினுலே உனக்குச் சாவு நேராது. ஆயினும், இதுவரை உலகிற்காணக்கூடாத அபூர்வ உருவத்தாலும் சேர்க்கையில்லாத காணு ஆயுதத்தாலும், இராப்பகலில்லாக் காலத்திலும், உள்ளும் புறம்புமில்லாத இடத்திலும், உன் சரீரம் துண்டுதுண்டாக அழியினும். அத்தோடுமாய்ந்துபோகாத அமரத்வவரத்தை நான் அனுக்கிரகித்திருக்கிறேன். பூரண ஆசிர்வாதம்! பூரண ஆசிர்வாதம்.

இரணி— இப்பொழுது இவர்கொடுத்த வரத்தை நான் பரிசோதித்தறியவேண்டும்

ஏ நான்முகத்தேவா! நீ கொடுத்துவிட்டாய் ஆகையால், என்புயபலப் பிரதாபத்தையடையும்பொருட்டு என்னேடு யுத்தஞ்செய்வாயா? (புயந்தட்டல்)

பிரம— இவன் முழுமடையனென்பது தெரிந்தும் நாமிவனுக்கு வரங்கொடுத்துவிட்டோம். இவனும் தீட்டிய மரத்திலேயே கூர்மைபார்க்க ஆரம்பித்துவிட்டான். என்னசெய்யலாம்?

இரணிய மகாராஜா! உம்மோடு யுத்தஞ்செய்யும் வல்லமை எனக்கில்லை.நான் இவ்வேளை உமக்குத் தோல்வியடைந்தவனே, ஆதலால், உமதிஷ்டப்படி நடந்துகொள்கிறேன்.

இரணி— ஆனல் நாள்தோறும் எனது சயனக்கிரக வாசலில்வந்து காத்திருந்து நான் நித்திரைநீங்கிவெளிவரும்போது அன்றன்று நடைபெறும் பலாபலன்களைப் பஞ்சாங்கம் பார்த்துச்சொல்லி விடைபெற்றுப்போகவேண்டும். இந்தப் புரோகிதத்தொழிலை ஒருநாளேனும் தவருமல் நீ பார்த்துவரவேண்டும். சிறிது தவறினுலுந் தண்டனையடைகுவாய் சாக்கிரதை.

பிரம— உத்திரவு. (போகிருர்கள்)

லீன் முடிவு.

---

## ஸீன்—6.

காலம் — மாலே.
இடம் — அரண்மனே.
பாஎ் — இரணியன், காவலர்.

இரணியன் வந்தவுடன் அந்தப்புரமுதலியஇடங்களில் தனது மனேவி லீலாவதியைத் தேடிப்பார்த்துக் காணுமல்வந்து

அடே சேவகர்களே! அரண்மனே முழுதும் தேடிப்பார்த்துவிட்டேன். என்மனேவியைக் காணவில்லே அவளெங்கே போனுள்?

மூத்த சேவகன்— வாயை மெல்லுகிருன்.

இரணி— என்னடா நான் கேட்பதற்குப் பதிற்சொல்லாமல் வாயை மெல்லுகிருய், (இளேயசேவகனேப்பார்த்து) நீ சொல்லடா?

இளேய சேவகன்— உளறுதல்.

இரணியன்— அடே நீயும் பதில் விபரமாகச் சொல்லாமல் மிரள மிரள விழித்து உளறுகிருயா? நடந்ததென்ன?

மூ-சே— ஐயா! தாங்கள் தவசுக்குப்போனவுடனே இந்திரனிங்கு வந்து நாங்களெவ்வளவோ பிரயாசைப்பட்டுத்தடுத்தும், கைமிஞ்சித்தங்கள்தேவியாரை இழுத்துக்கொண்டுபோய்விட்டான்.

இரணி— அடே கையாலாகாத பேடிப்பயல்களே! நானில்லாத தருணத்தில் என் மனேவியை ஒருவனிழுத்துப்போக நீங்கள் உங்கள் வல்லமையா லவனேக்கொன்று மீட்காமல் உயிராசைகொண்டு சும்மாநின்றீர்களோ? சேச்சே! என்முகத்தில்விழிக்க வேண்டாம் அப்பாலே போய்விடுங்கள்.

இனி நாம் சும்மா இருக்கலாகாது, இப்பொழுதே அமராவதி புகுந்து இந்திராதி தேவர்களே நாசஞ்செய்குவேறன்.

(போகிருன்)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-7.

காலம் — அதிகாலை.
இடம் — நாரதர் ஆச்சிரமம்.
பாத்-ள் — நாரதர், லீலாவதி.

ஆச்ரமத்தில் லீலாவதி நித்திரை செய்யும்போது நாரதர் அவள்வயிற்றிலிருக்கும் கருப்பச்சிசுவுக்கு ஞானோபதேசம் செய்கிறார்.

நாரதர்— பாட்டு.

சும் சும் சும் பியாரி-என்றமெட்டு.

இ-ம்-இந்துஸ்தான்தோடி - தா-ம்-ஆதி.

பல்லவி.

உத்தமலீ லாவதிகற் பத்திலிருக்கு ஞ்சிசுவே
உண்மைஞான மோதுகிறேன் கேள் கேள் கேள்

அநுபல்லவி.

நித்தியம் வாழும் நிலைதவ றாது
நிலத்தினி விறப்பொரு நாளுமே ராது
நிஜமா மரிநா ரணனர் பதமே
நீமறவாமற் சிந் தித்து
நாமமோது வாய்வந்தித்து (உ)

அரிஓம் நாரா யணநம வென்று
அனுதின மோதிற்றுன்ப மணுகாதே யொன்று
அலைசா கரவா விலைமீ தழகா
யற்புத நித்ரை புரிவான்
பொற்பத சித்தி தருவான் (உ)

வ-ம்— ஏ! லீலாவதியினது கருப்பாம்புயத்திலிருக்கும் சிசுவே! நான் உனக்குப் போதிக்கும் உண்மை ஞானத்தைக்கேள். நீ சருவ காலமும் ஸ்ரீ பரந்தாமனைக் குறித்துச் சிந்தித்து. 'அரி ஓம் நாராயணாய நம' என்று வாக்காற்றுதிப்பாயானால், மலைபோல் உன்னை நெருங்கிவருகின்ற துன்பமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் விலகி, நித்ய கைவல்ய பேரின்பானுபவ பரமபதம்

வீற்றிருப்பை. எடுத்த தேகமழியாமல் எளிதிலடைவாய். இதோ எனது பூரண ஆசீர்வாதம். அஷ்டாட்சரத்தினுடைய அநுக்கிரகமடைவாயாக.

லீலாவதி நித்திரை தெளிந்து பாடுகிறாள்.

இஸ்கேபூ ராஞ்சேஞ்சல் - என்றமெட்டு.

இ-ம்-பியாக் - தா-ம்-ஆதி-

பல்லவி.

நாதனை என்றுகாண்பேன் தவநிலையை
நாடிவனத்தின்வழி தேடிமுன் சென்ற (நா)

அநுபல்லவி.

வேதனையைப் பொறுக்கவில்லை யென்னெஞ்சம்
வேறு ரிவ்வேளை தஞ்சம் ஒருவரில்லை
வேந்தரைக் கண்டால் சாந்தமாவேனென் கொஞ்சம் (நா)

இராணி— இதென்ன எனது நாயகி குரல்போல் கேட்கிறது. இது நாரதர் ஆச்ரமமல்லவா? நல்லது இங்கு போய்ப்பார்ப்போம். (உள்ளே போகிறான்)

லீலா— நாதா! நமஸ்கரிக்கிறேன்.

இராணி— கல்யாண், லீலாவதி! (நாரதரைப்பார்த்து) ஓய் நாரதரே! என்ன காரியஞ் செய்தீர்? நான் இல்லாதவேளை தெரிந்துஎனது தேவியைக் கூட்டிவந்து உம்முடைய இடத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீரே இது நியாயமா?

நாரதர்- இதுதான் பாவமொருபக்கம் பழியொருபக்கமென்பது, உபகாரம் செய்பவருக்கு அபகாரமேற்படுவது மிப்படித்தான். இந்தப்பழிக்கும், இராணியன் கோபத்திற்கும் நான் ஆளாகவேண்டுமா? இவ்விதம் வருமென்று முன்பின் அறியாமல் எத்தனையோ காரியங்களில் மாட்டிக்கொண்டு முன்னமே தலை மொட்டையாய்ப் போனேனே, இப்பவும் ஏன் இந்தச் செய்கைக்குடன்படவேண்டும்? யார் எப்படிப் போனாலும் நமக்கென்ன இந்திரன் இவளுயிரைக் கொன்றாலென்ன? இவள் காட்டில் மாண்டால் நமக்கென்ன? நாம் ஒரு காரியத்திலும் பிரவேசியாதிருந்தால் இவ்வித மனப்புண் நமக்குண்டாவதற்கு நியாயமில்லையே?

இராணி— ஓய் நாரதரே! என்ன நான் கேட்குறேன் நீரென்ன ஆலோசித்துத் தானு உளறிக்கொண்டு நிற்கிறீரே?

லீலா— பிராணேசா! இந்த மகான்மீது ஒரு தோஷமுமில்லை. நானிங்கு இருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன் செவி கொடுத்துக் கவனமாகக் கேளுங்கள்.

நாரதர்— அம்மா! நீதானே நடந்த சம்பவங்களை உன் கணவனுக்கு விளக்கமாகச் சொல்.

லீலாவதி— பாட்டு.

எப்போத்தான்ரங்குமோ-என்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம் - தா-ம்-ஆதி.

பல்லவி.

செப்புவ தெப்படி நான்
தேவேந்திரன் கொடுமை (செ)

அநுபல்லவி.

மப்பாகவே கெர்வித்து மாதென் மயிர்பிடித்து
பற்பல தப்பிதம் பாடிஞனே எடுத்துச் (செ)

சரணம்.

வாடியென்றே யிழுத்து மதத்திஞலே கொழுத்து
தாடிச்சிசுவை யென்று தனித்த வனத்தினின்று
தாங்கிவாள் ஓங்கிஞன் தடுத்து அழைத்துவந்தார் (செ)

வ-ம்— பிராணபதே! தாம் தவஞ்செய்யப் போனபோது தனித்திருந்த என்னிடம் இந்திரன் வந்து, நான் உண்டாயிருக்குங் கருப்பச் சிசுவைக் கேட்டான். நான் எவ்வளவோ நீதி சொல்லியுங் கேளாமல், என் கையைப் பற்றியிழுத்து ஆரணியத்தில் விட்டுச் சிரசைச் சேதிக்கவுமுயன்முன். அவ்வேளை இப்புண்ணிய முனிவர் பிரவேசித்து அவனுக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துப்போக்கி, என்னைவிடுவித்தார் நான் அரண்மனையில் போயிருப்பேஞகில், மீண்டுந்தேவரால் இவ்வித ஆபத்து எங்கே நேரிட்டுவிடுமோ என்றுபயந்து, தாங்கள் வருகிறவரை இவ்விடத்தில் வைத்து ரட்சியுமென்று இவரைக் கேட்டுக்கொண்டேன். ஆகையால் இவர்மீது சற்றேனும்

பிழைகிடையாது பிராணேசா! இவரில்லாவிடில், என் சரீரத்தை இப்பொழுது நீங்கள் பார்க்கமாட்டீர்கள். மகா சண்டாளனாகிய அந்தத் தேவேந்திரன் செய்த கொடுமையைச் சொல்ல நாவுமஞ்சுகிறது. நானென்ன செய்வேன்?

இரணி— சகி! நீ யாதொன்றுக்கும் கவலைப்படவேண்டாம். இதே க்ஷணத்தில் அமராபதிக்குப்போய் இந்திரனையும், அவனுக்குச் சகாயர்களாகிய திக்குப்பாலர்களாகிய தேவர்களையுஞ் சிறைபிடித்துவந்து காராக்கிரகத்திலடைத்துத் தண்டனை செய்விக்கிறேன். நீ அரண்மனையிலிருப்பதற்கு விட்டுபோகிறேன் வா.

(போகிறார்கள்)

ஸீன் முடிவு.

---

## ஸீன்—3.

காலம் —பகல்.
இடம் —தேவலோகம்.
பா-ள் —இந்திரன் முதலிய திக்பாலர்கள்.

## இந்திரன் தர்பார்.

திக்பாலர் முதலியோர் கூடியிருக்கிறார்கள்.

இந்திரன்— நண்பர்களே! நான் செய்துவந்த தகாதசெய்கையை இரணியனறிந்தால், என்ன அனர்த்தம் விளையுமோ? தெரியவில்லை?

எமன்— அமரேந்திரா! எதற்காகக் கவலைப்படுகிறாய்? துஷ்டதுராத்மாவினால் என்ன அனர்த்தம் நேரப்போகிறது? வந்தால் பார்த்துக்கொள்ளலாம்.

வருணன்— எமதருமா! அப்படிச் சொல்லாதே, அவனோ பொல்லாத சண்டாளன், தன் பத்தினிக்கு அவமானம் விளைவித்ததைக் கேள்விப்படுவானாகில், நம்மீது படையெடுத்துப் போருக்கு வருவான்.

வாயு— வந்தாலென்ன? நமது புயவலியால் அவனை அபஜெயப் படுத்துவோம்.

(இரணியன் படைகளுடன் சபையிற் பிரவேசிக்க)
எல்லோரும் ஓடுகிருர்கள்.

அடே துஷ்டத்தேவர்களே! ஓடாதிர்கள் நில்லுங்கள்! நில்லுங்கள்! நில்லுங்கள்!! படைவீரர்களே! இவர்களைப்பிடித்துக்கட்டுங்கள்

(தூதர்கள் திக்பாலகர் முதலியோரைக்கட்டி)
முன்னுல் நிறுத்துகிருர்கள்.

இரணி— (இந்திரனைப் பார்த்து) அடே இந்திரா! என்ன காரியத்தைச் செய்தாய்? நானில்லாத வேளை என் மனைவியைச் சிறைபற்றி யிழுக்க, உனக்கு அவ்வளவு மமதையா?

இந்திர— பிரபு! என்குற்றத்தைப் பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன். (விழுந்துபணிகிருன்)

இரணி— நல்லது நீ நாள்தோறும் உன்னினத்தாரோடு நான் குடிப்பதற்குக் கள்ளுக்குடம் சுமந்து கொண்டுவந்து கொடுக்கவேண்டும்?

இந்திர— அப்படியே.

இரணி— போ நிற்காதே, (வாயுவைப்பார்த்து) நீயாரடா?

வாயு— நான் வாயு (பணிகிருன்)

இரணி— நீ அநுதினமும் எனது நகரத்தெருக்களில் சிறுதுங் குப்பையில்லாமல் கூட்டித்தள்ளிச் சுத்தம் செய்யவேண்டும்.

வாயு— அப்படியே.

இரணி— ஓடிப்போ (வருணனைப்பார்த்து) நீயாரடா?

வருண— நான் வருணன் (பணிகிருன்)

இரணி— நீ எனது நகரவீதி முழுவதும் சாணந்தெளிக்க வேண்டும்.

வருண— அப்படியே,

இரணி— அப்பாலே போய்விடு (அக்கினியைப்பார்த்து) நீ யாரடா?

அக்கினி— நான் அக்கினி பகவான் (பணிகிருன்)

இரணி— பகவான், உனக்கென்ன பகவான் என்றுபெயர்? நான் இதுமுதல் ஈசுவரப் பட்டமுடையவனுகவிருக்குறேன் நீ பகவான்? சேச்சே! உனக்கு அப்பெயர் தகாது, நீ நாள்தோறும் எனதரண்மனையிலுள்ள மடைப்பள்ளியிற் புகுந்து போஜன வர்க்கங்களைப்பாகஞ்செய்து சித்தமாக வைக்கவேண்டும்.

அக்கி— அப்படியே.

இரணி— விழிக்கவேண்டாம் ஓடிப்போ. ஆரடா தூதர்களே! மற்றுமுள்ள தேவர்களை யெல்லாம் கூட்டி பிழுத்துக் கொண்டு வாருங்கள் சிறையிலடைக்க வேண்டும்.

தூதர்— அப்படியே (மற்றோர்களையும் பிடித்துக்கொண்டு போகிறார்கள்)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-9.

காலம் — காலை.
இடம் — திருப்பாற்கடல்.
பா-ன் — பிரமா, இந்திரன் முதலிய தேவர்கள்.

திருப்பாற்கடலில் சேஷ சயனத்தில் விஷ்ணு சயனித்திருக்கிறார். ஸ்ரீதேவி பூதேவிமார் பக்கத்திலிருக்கிறார்கள். பிரமா முதலிய தேவர்கள் முறையிடுகிறார்கள்.

பாட்டு.

பருவகாலத்தை வீணாய்-என்றமெட்டு.

இராகம்-பிலஹரி—அடதாளம்.

கண்ணிகள்.

சர்ப்பா சனத்தினிலே சயனித்திருக்கின்ற மாலே உம்
தாளிணை பணிகிறோம் ஏழைகள்துயர்தீரு மாலே
உற்பாத விரணிய னுபத்திரம் பொறுக்கிலோ மாலே வேத
மோது மறையவர்கள் வேள்விகளொழித்தானே மாலே
தர்மச் சத்திரமெல்லாந் தரைமட்டமாச்செய்தான் மாலே ரம்பை
தையலர் களைச்சிறை தன்னிலும் வைத்திட்டான் மாலே
கர்மக் கிரியைகளைக் கைக்கொள்ளா தகற்றினன் மாலே எதிர்
காணும் பசுக்களையுங் கண்டதுண்டஞ்செய்தான் மாலே
துளசிப் பத்திரங்களின் றாரில்லாது வெட்டினன் மாலே துதி
சொல்லு மாலையங்களைத் தூளாகப் பொடித்தானே மாலே

களவுபொய் மதுக்குடி காமமதி கமாச்சு மாலே எங்களைக்
காத்தாலும் நீகரை சேர்த்தாலும் நீயேயெம் மாலே
தேவர்களைத் துரத்திச் செயஸ்தம்பம் நாட்டினன் மாலே என்
சிகைபற்றிப்பணிசெய்யத்தினமுற்றுமிழைத்தானேமாலே
கூவங்குளங்கிணறு குப்பைமே டாக்கினன் மாலே மதங்
கொண்டு இரண்யநமோ வென்றுசொல்லவுஞ் செய்தான்மாலே.

பிரமா-வ-ம்—ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே! யெளியேங்கள் நமஸ்காரம் செய்கிறோம்.

விஷ்ணு— கல்யாண்! தேவர்காள்! நீங்கள்யாவரும் ஒருங்குசேர்ந்து வந்த காரணம் யாது?

இந்திரன்— சாட்சாத் எம்பெருமானே! எளியேங்கள்படும் அவஸ்தையைத் தெரிந்தும் தெரியாதவர்போலே வினவினல், நாங்கள் எவ்விதம் உஜ்ஜீவிக்கப்போகிறோம்?

தேவர்கள்— பாட்டு.

பாராமுகமேனையா இன்னமும் சும்மா-என்ற மேட்டு.

இ-ம்-ஆனந்தபைரவி - தா-ம்-ஆதி.

பல்லவி,

தேவாதிதேவ சீதரா எங்களுக்கருள்
செய்யவேணுந்தா மோதரா திவ்ய சுந்தர (தே)

அநுபல்லவி.

பாவுரூப விரண்ய நாமனுக்கும நேக
ஏவல்செய்து மெலிந்து கூவியழுதோமுகம்
பாரா பெழுந்தருளி வாராய் வேண்டியவரந்
தாராய் பதமலரிற் சேராய் துயரந்தீராய் (தே)

சரணம்.

வாடி மதியுங் கலங்தோம் அசுரருக்கு
மச்சமதுங்கொண்டலைந்தோம் மானங்குலைந்தோம்
ஓடிய பாதகர்கள் கூடிவாழும் நிலையைத்
தேடியவர்களிடம் கோடிகோடி யூழியம்

ஒன்றும் கெடாதுசெய்து நின்றும் தீவினைகள்பு
சன்றும் கொல்கின்றூர்மனங்கன்றும் தாங்கோமென் றென்றும் (தே)

பிரமன்-வ-ம்— தந்தையே! துஷ்ட இரணியனுனவன் தேவர்களுக்குப் பலவிதமான இம்சைகளைச் செய்துவருகிறுன். யாக எக்கியங்களை நாசஞ்செய்தழிக்கிறுன். பசுவினங்களைவதைக்கிறுன், கோவில்களை யிடித்துத் தூளாகத் தூற்றிவிடுகிறுன். குளம், தடாகங்களைத் தூர்த்துத் தரைமட்டமாகச் செய்விக்கிறுன். யாராவதொருவர் எக்காரியத்தைத் தொடங்கினுலும், முதலில் 'ஓம் இரணிய நம:' என்று தன்னுமத்தைத் துதித்தபின்னர் தமது காரியத்தில் பிரவேசிக்கக் கட்டளையிட்டிருக்கிறுன்; இதற்கு மாறு செய்வோருக்குப் பிராணுபத்து நேருமென்பதற்கு ஆட்சேபணையில்லை. உலக நாசமான பிரளய காலத்திலும், பிராணிகோடிகள் இவ்வளவு துயரமடையமாட்டாது. ஆகையினுலே ஏழைகள்மீது கிருபா நோக்கம் வைத்து ஜீவராசிகள் யாவற்றையும் ரட்சித்தருளவேண்டும் பிதா!

விஷ்ணு— வத்சா! நான்முகா! எல்லா விபத்துக்களும் நீ அவனுக்குக்கொடுத்த வரத்தினுற்றுன் விளைந்தன. இப்பவுமென்ன நீங்களொருவரும் அஞ்சவேண்டியதில்லை, அவன் மனைவி கெற்பத்தில் உற்பத்தியாயிருக்குஞ் சிசு, நமது பக்தியிலே மிகுந்த பரம பாகவதோத்தம சிகாமணியாகும். அக்குழந்தையின் மூலமாக அந்தக் கொடிய விரணியனை வதைத்துஉங்களைக் காப்பாற்றுகிறேன். கவலையடையாமற் போய்வாருங்கள்.

தேவர்— ஓ எம்பெருமானே! அப்படியே செய்யவேண்டும்.

நமஸ்காரம்! நமஸ்காரம்!! (போகிறுர்கள்)

ஸீன் முடிவு.

---

# ஸீன்-10.

காலம் — முற்பகல்.
இடம் — சபாமண்டபம்.
பா-ள் — இரணியன், சுக்கிராச்சாரி, காவலர்.

## இரணியன் தர்பார்.

பாட்டு சந்தம்.

இங்கிலீஷ் நோட்.

இ-ம்-பியாக்—தா-ம்-ஆதி.

கண்ணி.

உலகுக்கதிபதி நான் ஜெய
மோடா சாளும காபலவான் என
துரையிப் படியினி லிலவிப் பெயர்பெறு
மொருகட் டளையிட லானதனாலே
விலகிச் சுரர்முதலோர் பதி
மேவில ராயமு தேயகல்வார் பணி
விடையத் தினமவர் புரியப் பலபல
விதமுற் றெனதடி யேதொழ நேர்வார்
மலையைப் பொடிபடவே அலை
வாரியு நீர்கெட மாறிடவே பெரு
வலியிற் புரிகுவ னெனிலெற் கெவர்பகை
வகையுற் றமருவர் பூதல மீதே
இலகித் ததியினிலே என
தேவலி னுளர்கள் வேலையிலே குறை
எதுமுற் றிலரென அறியச் சபையினில்
வாலுற் றதுநினை வானதனாலே
இடையுறவு கெடமுழுதும் வினவுவேன்

வ-ம்— அகில லோகங்களுக்கும் நானே இறைவன். என்னையன்றி வேறு கடவுள் கிடையாது, சகல தத்துவங்களும் என்னிடத்திற் பொருந்தியிருக்கின்றன, உண்டாக்கல், நிலைநிறுத்தல், நாசஞ் செய்தலாகிய முத்தொழில்களும் என்னாலேயே நடைபெறச்செய்ய வல்லமையுள்ள எனது ஏவலைக்கேட்டுத் தேவர்கள் தினப்பணி செய்து வருகிறார்கள். எக்காரியத்தை எவர்செய்யத்

தொடங்கினாலும், ஆரம்பத்தில் 'ஓம் இரண்யாய நமஹா' என்று என்னை வணங்கியே தொடங்கி வரும்படி எனதாக்ஞா சக்கரம் செலுத்தி வருகிறேன். நல்லது இன்று அதிகார சட்டத்தை விசாரித்துக் கவனிக்கிறேன்.

மந்திரி— பிரபு! நமஸ்கரிக்கின்றேன்.

சேனா— மகாராஜ்! சேனாபதி நமஸ்கரிக்கின்றேன்.

பிரதா— பிரதானி போற்றி செய்கின்றேன்.

இரணி— மந்திரி பிரதானிகளே! நானின்று நமது சட்ட திட்டங்களைக்கவனிக்க இச்சைகொண்டிருக்கிறேன். ஆகையால், கேட்குங் கேள்விகளுக்குத் தக்க பதிலைச் சொல்லி வாருங்கள்.

மந்திரி— அப்படியே.

இரணியன்— பாட்டு.

இ-ம்-சுருட்டி - அடதாள சாப்பு.

கண்ணி.

மந்திரிமாரே கேட்கும் வார்த்தைக்குப் பதில்சொல்லுவீர்
சந்ததந் தேவர்வந்து தாழுகின்றாரா பணிந்து

வ-ம்— மந்திரி! நமது தாயாதியராகிய தேவர்கள் நமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அனுதினமும் அவரவர்களுக்கு நாம் நியமித்திருக்கும் பணிவிடைகளைத் தடையில்லாமல் நிறைவேற்றி வருகிறார்களா?

மந்திரி— பிரபு! நம்மாலிடப்பட்ட நியமவேலைகளையே அல்லாமல் அப்போதைக்கப்போது சமயோசிதமாக ஏவுந்தொழில்களையுந் தேவர்கள் வெகுசாக்கிரதையாகச் செய்துமுடித்துவருகிறார்கள்

இரணியன்— பாட்டு.

வாயுமுத்தம் பெருக்க வருணன் சாணந்தெளிக்க
ஒய்வு மில்லாமல் சித்த முற்றிருக்கின்றாரா நித்தம் (ம)

வ-ம்— சேனாபதி நிகும்பா! அனுதினமும் வாயுவென்பவன் நமது நகரவீதிகளிற் குப்பையில்லாமற் சுத்தஞ் செய்து பெருக்கவும், வருணன் அங்கங்கு சாணந்தெளித்துப் புதிதப்படுத்தவும், நாம் நியமித்தவகையில் குறைவுகாட்டாமல் நடந்துவருகின்றார்களா?

சேனா— மகாராஜ்! வாயு, வருணன் இருவர்களும் தங்களுக்கு நாம் நியமித்திருக்கும் கட்டளைப்படி, நமது நகரிலுள்ள தெருக்கடோறும் புகுந்து, அங்கங்குள்ள அசுத்தங்களைச் சுத்தஞ் செய்தும், வாசனை கமழும்படிக் குளிர்ச்சி பொருந்தத் தெளித்தும், தங்கள் பணிகளைக் கிரமமாக நடத்தி வருகிறார்கள்.

இரணியன்— பாட்டு.

வெள்ளையானையிற் சேரும் வேந்தன் சுரரெல்லோரும்
கள்ளுக்குடங்கள் தூக்கிக் கால்தொழு கின்றாரா வந்து (ம)

வ-ம்— பிரதானி வலிமுகா! ஐராவதமென்னும் தவளநிறத் தந்தி மீதிவரும் இந்திரன், தனது இனத்தாரோடு நமக்கு அனுதினமுங் கள்ளுக்குடஞ் சுமந்து கொண்டு வந்து கேட்கும்போது. தயாராகக் கொடுத்து வருகிறார்களா?

பிரதா— மகராஜ்! இந்திரன் இனத்தாரோடு நாமிட்ட கட்டளைப்படி நாடோறுங் கள்ளுக்குடங்களைத் தூக்கிக்கொண்டு வந்து சேர்ப்பிக்கிறான்.

இரணியன்— பாட்டு.

அக்கினி தேவன் வந்து அடுக்களையிற் புகுந்து
தக்கவிதமா யுண்டி தான் சமைக்கின்றானா அண்டி (ம)

வ-ம்— ஹே, ரணமஸ்தா! அக்கினிதேவன் அனுதினந்தவறாது, நமது மடப்பள்ளியிற் புகுந்து, அன்னபான உணவுகளைச் சித்தப்படுத்தி, அந்திவேளையில் நகரவீதிகள் பாக்கியில்லாமல் தீபமேற்றி வேண்டும்போது, நடைவழிப்பந்தம் பிடிப்பதற்கும் ஏவலை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றானா?

ரணமஸ்— மகராஜ்! அக்கினிதேவன் தன் ஊழியத்தில் சாக்கிரதையாக விருக்கிறான்.

இரணியன்— பாட்டு.

கந்திருவர்கள் பாடக் கண்டரம்பைய ராட
வந்த வழக்கமொன்று மாறவில்லையே யென்றென்றும் (ம)

வ-ம்— மந்திரி! நமது சபாமண்டபத்தில் நாம் ஆலோசனைக்குக் கூடும்போதெல்லாம், கந்திருவர்கள் வாத்தியங்களை யொலிப்பிக்க, அரம்பா ஸ்திரீகள் நடனமாடி ரஞ்சிதப்படுத்தி வருகிறார்களா?

மந்திரி— பிரபு! தாம் கொலுவீற்றிருக்க விஜயம் செய்யும் வேளை யெல்லாம், கந்திருவர்கள் வீணை முதலிய வாத்தியங்களைக் கோஷிப்பிக்கவும், ஜதி சுதி பிசகாமல் அரம்பா ஸ்திரீகள் ஆடல் பாடலோடு, அபிநயித்துக் கேட்போருக்குங் காண்போருக்கும், பிரமானந்த சுகத்தை விளைத்து வருகிறார்கள்.

இரணி— மிகுந்த சந்தோஷம்! மிகுந்த சந்தோஷம்! நல்லது நமது ராச்சிய க்ஷேமலாபங்கள் என்றுங் குறைவில்லாமலே நடப்பதற்குத் தடையென்ன? இருக்கட்டும் நேசப் பிரியப் பரிவார வீரரே! எனது வத்சன் பிரகலாதனுக்குப் பிராயம் ஐந்து நிரம்பியது. ஆகையால் நம் குலகுருவிடம் வித்யாப்பியாசம் செய்விக்கவேண்டியது அவசியம். யாரடா வலிமுகா! நீ சுக்கிராச்சாரியாரை யழைத்துவா, அடே கோரதந்தா! நீ வத்சனை யழைத்துவா.

சுக்கிராச்சாரியார் வருகிறார்.

இரணி— வாரும் வாரும், சுக்ராச்சாரியாரே! இவ்வாசனத்திலுட்காரும்.

சுக்ரா— வந்தேன், வந்தேன், என்னையழைத்த காரணம் யாது?

இரணி— சுக்ராச்சாரியாரே! எனது செல்வக்குமாரன் பிரகலாதனுக்கு, ஐந்து வயது நிரம்பலானது, ஆதலால் தாம் எங்களுக்குத்தலைமுறை தத்துவமாகத் தாம் வித்துவ பாராங்கதர்களாகுவண்ணம் போதனை செய்து வந்தது போலே, அவனுக்கும் சத்போதம் செய்து வித்துவ பாராங்கதனுக்குவிப்பதற்காகத் தம்மை வரவழைத்தேன். வேறு விசேஷமில்லை.

சுக்ரா— மிகுந்தசந்தோஷம்! மிகுந்தசந்தோஷம்! வத்சன் எங்கே?

இரணி— இதோ வந்துவிடுவான்.

பிரஹலாதன் வருகிறான்.

பாட்டு.

இகத்திலில்லறம் நடத்தினோருக்கு-என்ற மேட்டு.

இ-ம்-எதுகுலக்காம்போதி—தா-ம்-ஏகம்.

கண்ணி.

நாரா யணன்திருப் பாதார விந்தமே
நாளும் நமக்குண்டு தஞ்சம்

நாகருந் தேவரு மானிட தேகரும்
நாடாமல் வாழ்வாரோ கொஞ்சம்
பாராயணமே பணியன்றி வேறில்லைப்
பக்தியை மேலுமுண் டாக்கும்
பாரளந் தானும தேயமகத்துவம்
பாவ வினைகளைப் போக்கும்

வ-ம்— பிதா! வந்தனஞ் செய்கின்றேன்.

இரணி— கல்யாண்! கண்மணி!

பிரக— தந்தையே! என்னையழைத்த காரணம் யாது?

இரணி— வத்சா! உன்னை வித்துவ பாராங்கதனுக்கும் நிமித்தம் நமது குலகுருவினிடம் ஒப்புவிக்க அழைப்பித்தேன். இவர்தான் நமது குரு, நீ அவர் சொற்படி கேட்டு நடந்து எந்த எந்த விதமாகக் கற்றுக்கொடுக்கிறாரோ அந்த அந்த மார்க்கத்தின் நெறிக்கு மாறுசெய்யாமல் நடந்து, கல்வியில் பிரபலனென்று மற்றோர் புகழும் வண்ணம் படிப்பில் தேர்ச்சியடைந்து வரவேணும் தெரியுமா?

பிரக— பிதா! அப்படியே, குருவே! நமஸ்கரிக்கிறேன்.

சுக்ரா— கல்யாண்! கல்யாண், பாலகா!

இரணி— ஆச்சாரியாரே! இனித்தாமதிக்காமல் நீர் சிறுவனைக் கழகத்திற்கு அழைத்துப் போகலாம்.

சுக்ரா— அப்படியே, கண்மணி! வா போகலாம்.

(போகிறார்கள்.)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-11.

காலம் — காலை.
இடம் — வித்தியாசாலை.
பாஃ-ள் — சுக்கிராச்சாரி, பிரஹலாதன் முதலிய பிள்ளைகள்.

வித்தியாசாலையில் சுக்கிராச்சாரியார் பிரகலாதனுக்குக் கல்வி பயிற்றுவிக்கிறார்.

சுக்ரா— ஓம் இரண்யாய நமஹ:

பிரக— ஹரி ஓம் நாராயணாய நமஹ

சுக்ரா— பிரகலாதா! நான் சொல்லுகிறபடி சொல் ஓம் இரண்யாய நமஹ:

பிரக— ஹரி ஓம் நாராயணாய நமஹ:

சுக்ரா— இதென்ன கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதைபோ லிருக்கிறதே? இம்மொழி கேட்டால், இரணியன் நம்மையல்ல வோ தண்டிப்பான்.

அடே சிறுவனே! சகல லோகங்களுக்கும் உனது பிதாவே யீசுரனாகவிருக்கிறான். அவன் நாமதேயத்தை ஆரம்பத்தில் உச்சரித் துத் தோத்திரம் செய்துகொண்டு, சகலதேவர்களும் தங்கள் காரிய சித்தி செய்துகொள்ளுகிறார்கள். நீ அவனது வீரிய புத்திரனை விருந் தும், அவனது ஜென்ம சத்துருவின் நாமத்தைத் துதிக்கிறாயே, இது நியாயமில்லை. உன் பிதா இந்த வார்த்தையைச் சொல்லுவோர் நா வையுந் துண்டிக்குங் கோபமுடையவன், ஆகையால், வேண்டாம் நான் சொல்லுகிறபடி சொல். ஓம் இரண்யாய நம:

பிரக— ஓம் நாராயணாய நம:

சுக்ரா— அடே! நான் சொல்லுகிறபடி சொல்லமாட்டாயா?

பிரக— பாட்டு.

முருகன் திரு மால்மருகன் பெருமை-என்ற மெட்டு.

இ-ம்-அடாணா—தா-ம்-ரூபகம்.

பல்லவி.

குருவேயுமக் கென்ன மதி மந்தமோ மதங்
கொண்டீர் செவிகளுக் கண்டா மொழிசொன்னீர் (கு)

அநுபல்லவி.

அறிவாகு மரிபரந் தாமனின்
அடி சந்தத முடி கொண்டம
ரரு மண்டுவ ரது கண்டிலீர் (கு)

சரணம்.

செத்துப் பிறப்பவர் நாமந் துதிப்பதால்
சேர்ந்திடுமோ லாபம் இந்தச்
செய்கையினுலே யிவ் வையகமேல்வரு
மை யையோவிண் பாபம்
நத்திப் பிடித்திடு நாராயணனே நாம்
நாடு ஞான தீபம் என்று
நன்ரு யறிவீ ரெனச் சொன்ன தாலிந்த
நாயேன் மேலேன் கோபம்
பித்துப் பிடித்தவென் தந்தைபிர தாபம்
பேசு வதால் வருமே நரகக் கூபம்
சித்தத்தில் யோசியும் வேறுண்டோ ஆட்சேபம்
செகமுற்றிலும் மிக நற்றுதி
செயு மற்றவர் பதபத்மமே (கு)

வ-ம்— ஓ குருவே! என்ன வார்த்தை யியம்புகின்றீர்? அநாதியாகிய சாட்சாத் பரமாத்மாவின் நாமதேயத்தை வித்தியாரம்பத்தில் ஓதும்படிச் சொல்லாமல், செத்துச் செத்துச் செனனமெடுக்கும் ஜீவாத்மாக்களில் ஒன்ருயுதித்த எனது பிதாவின் பெயரைச் சொல்லச்சொல்வது உமக்கு நியாயமோ? நீரெப்படிச்சொன்ன போதிலும் அரி பரந்தாமனுடைய சரண கமலத்தை மறவேன் உமக்கு வீண் பிரயாசை வேண்டாம்.

சுக்ரா— அடே சட்டாம்பிள்ளை! நான் மாத்யான காலத்திற்குச் சென்று வருகிறேன். நான் வரும் வரை பிரகலாதனுக்கு ஓம் இரண்யாய நமஹ: என்று பாடஞ்சொல்லிக் கொடு.

சட்டாம்பிள்ளை... ஊம் ஆகட்டும் போய்வாருங்கோ, அப்பா ராஜா மகனே! ஊம் சொல்லு! ஓம் இரண்யாய நமஹ: ஓம் இரண்யாய நமஹ: சொல்லு சொல்லு! அப்பனுத்தா ஒனக்கு அவல் கடலை வாங்கித் தருவேன்.

பிரக— சிநேகிதர்களே! நான் சொல்லுகிறபடி அரி ஓம் நாராயணுய நமஹ: என்று சொல்லுங்கள். இன்னும் நான் சொல்லுவதை நன்ருய்க் கவனித்துக் கேளுங்கள்.

காயாபுரியென்னும் பட்டணமும் அந்தர சூக்திரமென்னும் உட்கோட்டையும், நவத்துவாரமாகிய வாசல்களும், இரணமென்னு முகப்பும், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் அரண்களும், அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம், ஆகிய சொர்க்க மத்திய பாதலமாகிய லோகங்களும், அங்கராஜன், மூர்க்கராஜன், என்னும் இரண்டு ராஜர்களும், மூலப்பிரகிருதியென்னும் துன்மந்திரியும், பஞ்சபூதங்களென்னும் பிரதானியர்களும், அலகையென்னும் வீதிகளும், இச்சாசத்தி கிரியாசத்தி, யோகசத்தி, ஞானசத்தி, பராசத்தியெனனும் ஊழியக்காரிகளும், அசவையென்னும் அடப்பக்காரனும், கெருவிதனென்னும் காளாஞ்சிக்காரனும். காலகர்மனென்னும் தளவானும், மனம் புத்தி சித்தம் அகங்காரமென்னும் காணிக்காரனும், மாயா பிரபஞ்சமென்னும் வன்னிநாயக பாடிகரும், சப்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும் கொல் நாயகர்களும்; காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரிய, இடும்பை, டம்பமென்னும் கள்ளரும்; இதமகிதமென்னும் மல்லர்களும்; ஆணவம், மாயை, காமியம் என்னும் கோட்டைக்காரரும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, யோனியென்னும் கன்னக்காரரும்; சாக்கிர, சொர்ப்பன, சுழுத்தி, துரியம், துரியாதீதமென்னும் தலையாரிகளும்; அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னும் காலாட்களும், வாயு, வேயு வென்னும் புரவிகளும்; மனோபதி யென்னும் கருணீகனும், நவகோடி என்னும் ரூவுத்தனும், இருதயபாதரென்கிற தானாபதிகளும், சதகோடி மகா மந்திரமென்னும் உபதளமும், வாதபித்த சேத்தும மென்னும் பரிவாரமும், அஷ்டமத மென்னும் யானைகளும், நாலுவேதமென்னும் ரதங்களும், அசுத்தம் சுத்தமெனனுந் தேவியரும், இருவினை யென்னுந் தோழிகளும், இவர்கள் யாவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு, தங்களில்தாங்களே ஒருவர்க்கொருவர் ஒப்புரவற்றவர்களாய், முன்னுரைத்த காயாபுரிக்கோட்டையை வளைந்துகொண்டு ஒன்பது வாசல்களுக்கும் அஷ்டமதமென்னும் யானைகளை விடுத்து யுத்தம் செய்கையில். ஒருவர்க்கொருவர் தங்களால் இந்தக் கோட்டையை யாளுகிறதற்குச் சாத்தியப் படாமல், காரிய உபாதியாலும், காரண உபாதியாலும், ஸ்தூல சூக்மாதி தேகத்தினாலும், சதுர்வித உபாயத்தினாலும், ஆராய்ந்து இந்தக் கோட்டையைக் கைக்கொள்ளும்படி, இதயமென்னும் வில்லுக்குப் புரியென்னும் நாணியைப்பூட்டி, அறிவென்னு மம்பைத்தொடுத்து, குருவென்னும் இலக்கு நோக்கி, மூலாதாரத்தின்

இரண்டு நாகு நெட்டெழுத்தின் நடுவெழுத்திலே யிருந்து, வங் என்று வளைத்து, சங் என்று சன்னிதனைய் அங்கிஷா வென்றியங்கு வித்து சங் என்று ஆக்ஞாசக்கரத்திலே புகுந்து, அக்கினிமண்டலத்தில் அனைவரையுங் காண்பித்துக்கொண்டு, ஆயாவாளென்னும் இடைபிங்கலை இரண்டுக்கும் படிக்கதவிட்டு, ஆதிமூலமென்னும் யானையின் மேற்கொண்டு, தண்டுக்குந் தனுவுக்கும் நடுக் குத்தென்னுங் குரசுக்கயிற்றுக் குள்ளாக, அன்னதானத்திலுற்றளவில், அங் என்று மேனோக்கி, ஆகி காலமும், அவ்வையும் பதியுங்கொண்டு நடுவணையென்னும் ருத்ராக்கினியான, பன்னிரு சமுத்திரத்திலே ஆனையை நீராட்டுவித்து, ஞானபரமென்னுங் காவணமிட்டு, அங், என்று மேனோக்கி யுற்றளவில், சித்திர நாடிவழியேசென்று சந்திராபுரியென்னு மண்டலமுங் கொண்டு, அக்கினி மண்டலத்தில் அஞ்சௌழுத்திலேயும், ஆதித்த மண்டலத்தில் மூன்றெழுத்திலேயும், சந்திரமண்டலத்தில் ஒரெழுத்திலேயும், ஆசனமாயிருந்தபிறகு திருமண்டலாதிபன் பின்னிட்டு, மந்திரி யுபதேசப்படி வைத்துக், காயாபுரியென்னும் பட்டணத்தைக் கொள்ளாமற்கொண்டு அதிகாயனென்னும் பிரபஞ்சங்களை எல்லாம் கருவோடறுத்துப் பின்பு, சத்திய ஞானப்பிரகாசமென மனத்திருத்தேரிலே யெழுந்தருளி, அறிவுகந்து நரகலோகங் கொண்டருளிய பின்பு, காயாபுரியை நோக்கி நின்று நகைசெய்தளவில், காயாபுரிப் பட்டணத்தின் யோகாதியுங்கெட்டு, இரவகந்தருவ பதாதி சேனையும்பட்டு, ஆயாக்கினி வேந்தனும், சிறப்புண்டு போய், காயாபுரி யென்னும் பட்டணத்தில் சொர்க்க, மத்திய பாதாளலோக மளவாக திருவடி வைத்துக்கொண்டு ராச்சியபாரஞ் செய்தபடி சித்தாந்தமும் வேதாந்தமுங் கடந்த, நாதாந்த முடிவான அமூர்த பஞ்சாட்சரத் துருவநிலையில், சூக்கும பராபரத்தில் உத்தரங்களும், வெளியாயிருக்கும் பிண்டத்திற் கண்ட பொருள் அண்டத்திற் காணலாம், அண்டத்திற்கு முள்ளது பிண்டத்து முண்டெனக் கொள். நிற்க,

வண்ணம்.

ஒருமட மாது ஒருவனு மாகி
யின்பசுகந் தரு மன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து

97729.

பனியி லோர்பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய் வாய்செவி கால்கைகளென்ற

உருவமு மாகி யுயிர் வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
உதர மகன்று புவியில் விழுந்து
யோகமு வாரமு நாளு மறிந்து

மகளிர்கள் சேனை தாவணை யாடை
மண்டட வுந்தி யுதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளிநகை யூற லிதழ்மட வாரும்
வந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப

உடைமணி யாடை யறைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரோ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே.

உயர்தரு ஞான குருவுப தேச
முந்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறுபி ராயமும் வந்து

மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொனி லங்கு பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க

மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மனது பொருமல் அவர்பிற கோடி
மங்கல செங்கலசந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி

ஒரு முதலாகி முது பொருளாவி
ருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயதுமு திர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோத குரோத மடைந்து
செங்கையினி லோர்தடியு மாகியே.

வருவது போவ தொருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமன் மொழிந்து

துயில்வரு நேர மிருமல் பொருது
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கலியுகமீதி லிவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

தெளிவு மிராம னுரைதடு மாறி
சிந்தையு நெஞ்சு முலைந்து மருண்டு
திடமு மலைந்து மிகவும லைந்து
தேறிந லாதர வேதென நொந்து

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற

கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வைந்து
பூதமு நாலுசு வாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே.

வளர்பிறை போல வெயிறுமு ரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனது மிரண்ட வடிவ மிலங்க
மாமலை போலெம தூதர்கள் வந்து

வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே யிவர் காலமறிந்து

பழையவர் காணு யெனுமய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்த
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று

பலரையு மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களப மணிந்து
பாவகமே செய்து நாறு முடம்பை

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகிடை மூடி யழல்கொடு போட
வேந்து விழுந்து முரிந்து நிணங்கள்
உருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறுமி லாதவுடம்பை
நம்புமடியேனை யினி யாளுமே.

---

வேறு பாட்டு.

ஆனலவனுக்கோ அற்பப்பிராயமே - என்ற மெட்டு.

இ-ம்-நாதநாமக்கிரியை—தா-ம்-ஆதி.

பல்லவி.

நாராயணன் பதம் நம்புவீர் நீர் நிதம்

அநுபல்லவி.

காரண காரிய மூறுபிறவியி லலே
கனதுய ரது தீரும்
கதிபெற இதுவல தொருநெறி பிறிதிலே
கருதி யுறுதி பாரும் வரு
கவலைகள் விட நேரும் உயர்
கடவுளினடி சேரும் இரு
கைகொட்டி நீங்களெல் லோரும் (நா)

சரணம்.

வஞ்சனை பில்லிய சூனிய மாரணம்
வந்துமை யணு காது
வடவனல் வளர்வொடு மூடுகி வரினுமும
துடல் சுட விய லாது வரு
மறுதுய ரிணி யேது சுகம்
வதி வது தவ றுது இங்கு
வந்து கூடி நின்று பாடி (நா)

வேறு பாட்டு.

இ-ம்-பியாக்-தா-ம்—ஏகம்.

கண்ணிகள்.

நாராயண ஹரி நாராயணஹரி
நாராயண ஹரி கோவிந்தா
பேராயிர முள மாலே யருள் கொடு
பேணு யிது தகி கோவிந்தா
தோரா தல மா லானே முன தடி
சேரா தர வருள் கோவிந்தா
மாயா வமரர்ச காயா மலர் மகள்
மார்பா தயவு செய் கோவிந்தா
தாயா யுலகினை யாள்வாய் திருவருள்
தாதா மகிழ்வொடு கோவிந்தா

(பிள்ளைகளெல்லாம் பாடியாடுகிறார்கள்)
சுக்கிராச்சாரியார் வருகிறார் வந்தும் அவரைப் பார்த்தும் கைகொட்டிப் பாடி ஆடுகிறார்கள்.

தக்க தக்க தேக்கோ சுந்தரியான் ஜான் - என்ற இந்துஸ்தான் மெட்டு.

தாடியிலே தீப்பிடிக்க நாராயணா உன்
தலை மொட்டையாப் போக நாராயணா
கோடி வேட்டி பாழாக நாராயணா நீர்
குப்புற விழுந்து சாக நாராயணா
பாடையிலே யும்மை வைக்க நாராயணா இந்தப்
பள்ளிக்கூடந் தீப்பிடிக்க நாராயணா

சுக்ரா— அடே பிரகலாதா! உன் தந்தையிடம் போய்ச் சொல்லுகிறேன் வா!

(போகிறார்.)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-12.

காலம் — பகல்.
இடம் — அரண்மனை.
பா-ன் — பிரகலாதன், இரணியன் முதலியோர்.

இரணியன் தர்பார்.

இரணி— நேசப்பிரிய பரிவார வீரரே எனது வத்சன் பிரகலாதன் வித்தியாப்பியாசம் பயின்றிருப்பான், அவனுடைய வித்தியாப்பியாச நேர்மையைப் பரீட்சித்தறிய வேண்டும், ஆகையினாலே ஆரடா கோரந்தா நீசென்று வத்சன் பிரகலாதனை யழைத்துக் கொண்டுவா.

(பிரகலாதனை அழைத்து வந்து இரணியன் முன் விடுகிறான்)

பிரக— பிதா! நமஸ்கரிக்கின்றேன், எதற்காக என்னையழைத்தீர்கள்?

இரணி— வத்சா! மங்களமுண்டாகுக. உனது வித்தியாப்பியாச நேர்மையை பரீட்சித் தறியவேண்டி உன்னை யிங்கு வரவழைத்தேன்.

பிரக— பிதா! நமது குலகுரு போதனு முறையில், ஒழுங்காகப் பயின்று, நுண்பொருள் கருத்தை ஆராய்ந்து, ஐயந்திரிபற உண்மையுணர்ந்தேன். அவ்வுண்மையானது நிலைபெற்ற பொருளே. "நில்லாதவற்றை நிலையென வென்றுணரும், புல்லறிவாண்மைகடை" யன்றோ? வேண்டுமாயின் வினவுங்கள்? அவ்வினுக்களுக்குச் சாரமான வினுப்பொருள்களை மிகு தெளிவாக மொழிந்துவருகிறேன்.

பத்யம்-ஆனந்தபைரவி.

அழியாத நிலைமையும் அதிகார முறைமையும்
அருவான உருவமும் ஆன பொருளைப்
பழியாத நெறியிலும் பாஞான நிலையிலும்
பகர்வேத முடியிலு மேவு பொருளைக்
கழியாத பொழுதிலும் மரமாதி யுருவிலும்
கடல்மேரு மலையிலும் நாடு பொருளைக்
ககனவெளி பூத நிலையான பொருளைக்
கலைமுதலில் நாமநிலை யோது பொருளை
யுகமுடிவி லுறுதியக லாதபொருளை
ஒருமையொடு நிறைவுகுறையாத பொருளை.

பாட்டு.

பல்லவி.

உற்றறிந்தேன் யாவையும் நான் கற்றறிந்தேன்
வேதசார முற்றறிந்தேன் உண்மைநிலை
ஓதுவேன் நீரது காதுகொண்டுகேளும் (உ)

அநுபல்லவி.

ஓசையொடு உருவாகி முதல் முதல்
ஓதி எவர்களும் நாடு பொருளதை (உ)

பிதா— கவி.

மறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு

என்பது வேதாகம சாரநீதி மொழி ஆகலால், அவ்வறிவும், அவ்வறிவுக்குக் காரணமானதும், அக்காரணம் தனக் கன்னியமில்லாததும், ஆகவே காரண காரிய மொழியா லிரண்டும்

பொருளா லொன்றுமாக நின்றதும் இதனுல் சிந்தை செல்லாத நிலைகொண்டு தூரமானதும் அன்பினுலே ஆராதிக்குங்கால், ஐக்கியப்பட்டு அணுகுவதாலும், அவ்வன்பே வடிவாகக் காணப் படுவதாலும், சமீபமானதும், நால்வகையோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்குலட்ச ஜீவ பேதங்களின் உள்ளும் புறம்பும் நிறைந்து சர்வ வியாபகமானதும், தேவ, கந்திருவ, சித்த, சாரண, உரக, பன்னகராதி கணத்தினருஞ் சேவை செய்ய அதிகாரஞ் செலுத்துமுன்னத நிலையிலிருப்பதும், திகாம் பரங்களைத் தன் வயப்படுத்திக்கிரகாதியினுல் முறைப்படி இயக் குவிப்பதும், விகார சொரூப ஐம்பூதாதிக் காதாரமாகி, உற்பத்தி யில்லாததும், மனு வந்தா கற்பாந்த யுகாந்தா சர்வசம்மார முடிவிலும் நாசமற்றதும். வேதசிரசில் ஒளிர்ந்து விளங்குவத ஞல் கலை யாகமாரம்பத்தில் ஓம் என்னும் சொல் முன்னர் தொ டங்கு முடிவில் நம. என்னும் சொல்லோ டுறுவதுமாகிய உண் மை ஞான சொரூப நிலைப்பொருளை நன்கு தெளிந்திருக்கிறேன் சந்தேகம் வேண்டுவதில்லை பிதா!

இராணி— மிக்க சந்தோஷம். நேசப்பிரிய பரிவார வீரரே! சகல லோகாதிகார நிலையிலுள்ள என்னுடைய சொரூப லட்சணங் களை யெல்லாம் வத்சன் பிரகலாதன், இச்சிறு பிராயத்தில் நுட் பமாக ஆராய்ந்திருப்பது மிகவும் வியக்கத்தக்கதே.

சந்தப் பாட்டு.

மைந்தா வென திரு கண்மணி
மானீள் குலதீபா
மதிமேவிய நிதியே மன
மகிழ்வாயிது ததியே
நந்தா துயர் குருபா லுணர்
ஞானக்கலை யதனுள்
நன்றூர் கவி யொன்றே தின
விந்தை புதை பொருளே
முந்தே யியல் நெறிசேர் பத
முடிவோடு விளக்கி
மொழிவா யுரை விரிவாய்முறை
முறையாக வடுக்கி

வந்தா"லென திருகாதணி
மணியாமென விளேயும்
மதித்தேகவி யுரைத்தே பொருள்
விரிப்பாய் மகிழ் மனத்தே.

வ-ம்— மிக்க சந்தோஷம் உலகத்தில் உண்மையான பொருள் எது?

பிரக— சந்த விருத்தம்.

பாலாழி யூடுதுயில் வோனுதிமூல முயர்
பாராதி பூத முதலா
மேலான யாவும்நிலே தாமாக வாழுமுதல்
வேறுன பேத வுருவார்
மாலான தேவனெரு மீனுகி ஞெனரிய
மாயாவ தார னவனே
நாலான வேதமுடி மீதேற லான பொருள்
நாராய ணுய நமவே.

இரணியன்— பாட்டு.

என்ன கேள்விமுறை - என்ற மெட்டு.

இ-ம்—பிலஹரி—தாளம்—ரூபகம்.

பல்லவி,

போதித்ததா ருனக்கு
பூமி வாழ்வினி லாசை யற்றிப்படிப் (போ)

அநுபல்லவி.

பொல்லாத பகைச் சொல்லாகு மிது
வல்லால் வேறில்லே (போ)

சரணம்.

வாதித்துப் பகை சாதித்துப் படை
மோதித் தம்பியைச் சேதித்தான் பெயர்
ஓதிச்சத்துரு பாதத்தைப் புகழ்
சேதிச் செய்கையைப் (போ)

தாக்கி யுயிரைப் போக்கியவனே
மாய்க்க வின்னுநான் நோக்கியுங் காணேன்
வரக்கிலப் பேர்சொல் வார்க்கும் வாளினுல்
போக்கு வேன் தலே (போ)

வ-ம்— அடே துஷ்டா! இக்கர்ணகடூரமான மொழியை உனக்கு எவர் போதித்தனர்? எனது ஆத்ம சகோதரனை இரணியாட்சனை, மலமுண்ணும் பன்றியுருக்கொண்டு மார்பைப் பிளந்து கொன்று மறைந் தொளிந்து திரியும் மாயாவியான ஜென்மத் துரோகியின் நாமத்தைத் துதித்துப்புகழ்ந்து நிற்கின்றாய்? இது வரை இவ்விதமான ஓர் சொல்லேனும் என் செவியில் விழக் கேட்டிலேன். திக்காம்பரங்களில் எனது ஆக்ஞா சக்கரம் செல்லும் வரையில், இவ்விதமொழி புகலுவோருக்குத் தண்டனை யுண்டென்பது பிரசித்த மாயினமையால் எவரும் கூறு வாரிலர். நீ அறியாத சிறுவனானமையால் பொறுத்தேன். மறு முறை இம்மொழியை உரைப்பாயானால், என் கோபத்திற்குப் பாத்திரனாகுவாய், ஜாக்கிரதை.

பிரக— பிதா! என்னையா அறியாதவனென்று சொல்லுகிறீர்கள்? தாமே அறியாமை யென்னும் மாயா சம்பந்தத்திலகப்பட்டு மயக்குற்றிருக்கிறீர், அதனாலேதான் உண்மை யின்னதென் றுணராமல், லோக நிந்தனைக்காளாகும் நெறியில் வாதிக்க முயலுகிறீர். இது தகாது நான் சொல்லுவதைக் கேளும்.

இச்சரீரம் நிலையில்லாதது சுக்கில சுரோணித சம்பந்தத்தால் உற்பத்தியாயினமையின், எது உற்பத்தியாயினதோ அது அழியுமென்பது கண்கூடாகக் காணற்பாலது, அதனாலன்றோ 'புணர்ந்தன பிரியும்' என்றார் பெரியோரும்.

நெருநல்லுள னொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

அதாவது;— 'காத்திருந்தவர் கால்வாங்கப் பார்த்திருந்தவர் பாழானார், நேற்றிருந்தவ ரின்றில்லை' என்று மிவ்வளவு பெருமையை யுடையது இச்சரீரம்.

கணப்பொழுதும் நிலையாத இச்சரீரத்தைத் திரமென எண்ணிக் காமக் குரோதாதியி லீடுபட்டு, மதங்கொண்டு, தனக்குரிய தலைவனை நாடாமலழிவது பகுத்தறிவுடைய ஜென்மவாகியருக்காகா. அது மிருகப் பிராயத்தின் செய்கையினும் கீழாக மதிக்கப்படும். பஞ்சேந்திரிய அறிவோடு பகுத்தறியும் அறிவாகிய மன்னுணர்வையும் பெற்றவர். அவ்வகை ஆறறிவின் பயனைக் கொள்ளாராயின் அதன் பிரயோசன மடைவதற் கில்லாத

குங்குமஞ் சுமந்த கழுதையே யாவர். ஆகையால் அவ்வாறு வகை அறிவின் பயனைக்கொள்ளு முபாய நெறியை முதலிற் சொல்லுகிறேன். கவனித்துக் கேளும்,

பத்யம்.

இ-ம் — ஆனந்தபைரவி.

சத்துவ குணத்தினி ஹுற்றதிரு வத்சலன்
தாளிணைகள் தாழ்கின்ற சென்னி சென்னி
நத்துடைய கைத்தலன் உத்தம முகத்தினை
நாடியெழில் கொள்கின்ற கண்கள் கண்கள்
தத்துமலை யிற்றுயில் கர்த்தனது நற்பதி
சார்ந்தபணி செய்கின்ற கைகள் கைகள்
தொத்து துளவக்கணி பெற்றிடு புயத்தனல்
தோயுமுயர் கோயில்சூழ் கால்கள் கால்கள்
புத்தமுதுகதை மேவு செவிகள் செவிகள்
போதமுறு புகழ்பாடு கின்ற நா நா
நித்தமவ னடிநினையும் நெஞ்சம் நெஞ்சம்
நேமமொடு பணிசெய்யும் அடிமை யடிமை

பாட்டு.

நிலையாது வேறு பொருள்
வகையேது தேடினுலுங்
கிடையாது ஆதலினுல்
நிதமவன்பாத மோது மறவாது. (நி)

தேகமதோடு பிதாவனை சோதரர்
சேர்கிளை மாதுலன் மாமி சினேகிதர்
சேகரமாகிய ஆடுகள் மாடுகள்
தேடியமா நிதி யாவையும் நேடிடில் (நி)

வ-ம்— இந்தத் தேகமும் செல்வமும் போக சுகாதி சகல அதிகார வாழ்வும், நிலையாம லழிவதால், இவ்வகையைச் சர்வ சுதந்தரனுகக் கொண்டு, யாவற்றிலுங் கலந்தும், அவற்றில் தர்க்கக் கற்றுநிற்கும் பரம புருஷோத்தமனுன ஸ்ரீஹரியை ஆராதித்துப், பேரின்பவாழ்வைப் பெற்றுக்கொள்ளும் நெறிக்கண் நில்லாமல்.

கவி.

பித்த மேறிமெய்ஞ் ஞான நிலைப்பொருள்
பேத மாக நினைக்க விடாங் தருஞ்
சித்த மாமயல் கொண்டுநீ ரிவ்விதந்
தெய்வ நிந்தனை செய்வது ஞாயமா.
அத்த மேவுமை யாயுத நாரணன்
அம்புவிக்கவ னேதெய்வ மாதலால்
இத்தி னந்தொழு துய்யுமில் லாவிடி
லிந்த வாழ்வு மழிந்திடுந் தந்தையே.

வம்— பிதா! நான் இப்பொழுது சொல்லவந்த ஞான மார்க்கங்களை நன்கு தெளிந்து, இனியேனும் ஸ்ரீவாசுதேவன் மீது துவேச புத்தி கொள்ளாது அந்தரங்க பத்தியோடு ஆராதனை செய்யும் இல்லையேல், இந்தவாழ்வாதி சுகபோகங்களை யிழந்து சீரழிந்து போவீர் மேலும்,

பாட்டு.

ஏதுக்கிந்தச் சரப்பளியினுல்-என்ற மெட்டு.

இ-ம்-பூரிகல்யாணி. தா-ஏகம்.

பல்லவி.

தெய்வ நிந்தனை செய்வதால் வருஞ்
சேத மானவை கேளும்

அநுபல்லவி.

திட்டமாய் நர கத்துயரி லிருக்க
நேரு மெந்நாளும் (தெ)

சரணம்.

கைவளைந்து முறிந்து முடம் படும்
கா லொடிந்திடுங் கண் குருடாய் விடும்
மெய்புகுந்து பிணிபலமே விடும்
மேலுந்துர்நாற்றங்கொண் டிங்கவத்தைப்படும் (தெ)

கால தூதர்கள் தண்டா லடிக்கவும்
கட்டப்பாரை கொண்டு நெஞ்சி லிடிக்கவும்
ஓலமிட்டழ நாய்கள் கடிக்கவும்
ஊற்றுமுதிரத்தை வாயால் குடிக்கவும் (தெ)

பொல்லாப் புழுக்குழிக் குள்ளே யழுந்தவும்
போசனத்துக்கு மலத்தை யருந்தவும்
நில்லா தோடிச்செக் கிழுத்து வருந்தவும்
நேரும் விஷந்தீண்டித் துன்பம் பொருந்தவும் (தெ)

வாயிலாப்பைக் கடாவி யிறுக்கவும்
வாள் கொண்டுடலைப் பிளக்க அறுக்கவும்
தோயுங் கடாரத்தி லிட்டு வறுக்கவும்
சொல்லிச் சொல்லித்தூதர் கொல்ல வுருக்கவும் (தெ)

வம்— பிதா! தெய்வ நிந்தனையால் நேரிடும் அனர்த்தங்களை யெல்லாம், இப்பொழுது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்திருப்பீரென்று நினைக்கிறேன். ஆகையால் அந்தப் பக்தவத்சலன் பாதாம் புயத்தைப் பணிந்து பாவபந்தங்களை நீங்கிப் புநிதமடைவீராக.

இரணியன்— பாட்டு.

சிவனுமைசுதவிநாயகாநம என்ற-மெட்டு.

இ-ம்-பியாக்கடை. தா. அடதாளம்.

பல்லவி.

எனக்குப் புத்திமதி யுரைக்கத் துணிந்தனையே
சின்னப் பயலே
எதிர்த்த சத்துருவைத் துதித்துப் புகழ்ந்தனையே
சீ சீ நிந்தனையே. (எ)

பிரகலாதன்— பல்லவி.

சினத்தைப் பொருளென்று நினைத்துப் பேசுறீர்
ஜெகரட்சகன்
திறத்தைத் திரமின்றி மதப்பட்டேசுகிறீர்
கைவீசுகிறீர். (சி)

இரணியன்— அநுபல்லவி.

தனக்குப் புகலிட மதனை நாடி
தரணி மலை கடல் முழுது மோடி
மனக்கிலேச மொடு தினமு வாடி
மறைந்திருக்கு மவன் திறங்குறித்துப் பாடி (எ)

பிரகலாதன்— அநுபல்லவி.

அனைத்துயிர்களையும் படைத்துக் காப்பான்
அன்பு கொண்டவரை யருட்கண் பார்ப்பான்
தினைத்துணை துன்பின்றிப் பதத்திற் சேர்ப்பான்
தீய பாதகரைப்போ யொழியத் தீர்ப்பான். (சி)

இரணியன்— பல்லவி.

குறித்து மெதிர்மொழி தொடுத்து முரைத்தாயே
ஆராய்ச்சியின்றி
குலத்து மகிமையை யழிக்க நினைத்தாயே
ஆனாலும் நீயே

அநுபல்லவி.

மறுத்து மறுத்தினிப் பேசி வாது
வழக்கிடுவ துனக்குத்த காது
பொறுத்திருக்கவு மென் மன மொப்பாது
புறத்தி லொளித்தவன் சிறப்புரைத்திப் போது (கு)

பிரக— பல்லவி.

மதத்தி னாலுரை பிதற்ற லாகாது
நாரணன் செயல்
மறுத்துலகி லொன்றும் நடக்க வலாது
உண்மையா மிது

அநுபல்லவி.

எதற்கு மவனரு ளன்றி யில்லை
எழுலகுமவ னடியி னெல்லை
வதைக்க நேர்ந்திடு முமக்குத்தொல்லை
வாழவெண்ணினாற் கேளுமென் சொல்லை (ம)

வ-ம்— தந்தையே! மதத்தினா லழிந்தவர் மாநிலத்திலநேகர், ஏன் விருதாவாகக் கோபங்கொண்டு அகங்கரிக்கிறீர்?

கவி.

சீற்றந் தன்னுடன் அகந்தை சென்றடையினும்
நெருப்புங் காற்றுங் கூடினும்
நிகரது கடிமனைச் சுட்டுச் சாற்றும் பக்கமுஞ்சுடும்
இதுதன்னுடல் சுட்டுத் தோற்றும் பக்கமுஞ்
சுட்டடுத்த வரையுஞ் சுடுமால்.

வ-ம்— அதாவது கோபம் நெருப்பினுங் கொடிது, அதற்கனுசரணை யான அகங்காரம் காற்றிலுங் கொடிது, எவ்விதமெனில்:— நெருப்போடு காற்றுக் கூடினல், ஒரு வீட்டைச் சுட்டெரித்துப் பக்கத்திலுள்ள வீடுகளையும் கரியாக்கியமையும், கோபத்தோடு கூடிய அகங்காரமோ கொண்ட ஒருவனைக்கெடுத்து அவன் பக்கத்தினராகிய பந்துஜனங்களைக் கெடுப்பதோடு அமையாமல், அவனுக்குச் சகாயமான நட்பினர்கள், அவர்கள் சுற்றத்தினர் முதலான யாவரையும் கெடுக்கும். ஆகையால் இக்கோப அகங்காரங்களை விட்டு, என் சொற் குடன்பட்டு, நன்மையைத் தொட்டு நாராயணனைக்கிட்டும், அதனுல் பேரின்பம் எட்டும் தடையில்லை.

இராணி— சந்தப்பாட்டு.

இப்போது மிப்பால னுக்கா ருரைத்தா
ரெனக்கே வெறுப்பான சீர்பேசவே
அப்பாவி யர்க்காவி தக்கா தினத்தான
தற்கே யெடுத்தேனிவ் வாள்வீசவே

வ-ம்— இவன் சிறுவன், இவனுக்கு இச்சிறு பிராயத்தில் அறிதம் வருவதற் கேதுவில்லை, ஆகையால் இங்குள்ளவர்களில் எவரோ இவனுக்குப் பாரபட்சமான போதனையைப் போதித்திருக்கிறுர்கள் அவர்கள் யார்? அவர்கள் சிரசை இந்த வாளாயுதத்தால் சேதிப்பேன். அவர்கள் யார்? [கையில் வாளையுருவுகிறுன்]

பிரக— தந்தையே! அவர்களை யேன் கோபித்துக் கொள்கிறீர்கள்?

பாட்டு.

எத்தனை நேரமாக இப்படிநீர் - என்ற மெட்டு.

இ-ம்-தன்யாசி-தா-ம்-ஆதி.

பல்லவி.

எனக்குச் சொல்லிக்கொடுத்தா ரெவருமில்லையதனு
லிவர்மீது கோபங் கொள்ளாதீர்

அநுபல்லவி.

மனக்கலக் கத்தால் குற்ற மற்றவரைக் கொல்ல வீசும்
வாளைப்பூமி மீதி லெறிந் தென்னிடம் வழக்குப் பேசும் (எ)

எண்பதோடு நான்கு லட்சம் பிராணிகளைத் தன்வயிற்று
ளேயடக்கிக் காத்து ரட்சிக்கும்
ஈசனொருவனுண்டென்று மங்கவனு ரணனென்று
மெண்ணிப் பார்க்கி லுண்மை விளங்கும்
விண்பதியி லுள்ளவர்க்கும் வேதாந்த முடிவினுக்கும்
மேலான பொருளை வாக்கால் விள்ளலாமோ யாவருக்கும் (எ)

வ-ம்— பிதா! கண்கூடாகக் காணும் உலகானுபவத்தை ஒருவர் சொல்லிக் கொடுக்க வேண்டுமோ? தன்னையுணரத் தலைவன் தோன்றுவானன்றோ, என்னை யாளுக்கி யென்னுள்ளிருக்கும் இறைவனாகிய அந்தப் பரந்தாமனே யெனக்குப் போதித்தான். இவர்கள் போதித்ததாக நினையாதீர். இவர்கள் அந்த ஞானபோதஞ் செய்ய உரியராவரோ? இவரும்மைச் சேர்ந்தவ ரன்றோ? பன்றியோடு சேர்ந்த கன்று மலமுண்ணும் என்னும் பழமொழியால், இவர் போதிப்பாராயின் உமதறிவு போலன்றோ? நிலையில்லாதவற்றை நிலையெனப் போதிப்பார், இவருக்கு ஞானபோத மெங்கிருந்துவரும்?

கவி.

பாரினிற் பிறந்தபோ தெவரும் பண்பினாற்
பூரிய ரெனப்பெயர் பூண்ட தில்லையால்
சீரிய ரென்னலுந் தீய ரென்னலும்
சேரினத் தியற்கையாற் சேர்ந்த நாமமே.

என்பதால் உம்மைச் சேர்ந்தவருக்கு உமது அறிவில்லாது வேறறிவு வருவதற்கு ஞாயமேது? இதற்கன்றோ ஆகாயத்திலிருந்து விழும் மழைஜலம் ஒரே தன்மை யாயினும், பூமியின் வேறுபாட்டால் நிறமும், குணமும், வேறுபடும் உவமானத்தோடு,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

என்று மிகுதெளிவாக ஆன்றோரு முரைப்பாராயினர். ஆகையால் தாமதகுணமதி மேவி, அறிவு சூன்யரான இவர் மீது சினங்கொள்ளவேண்டாம். சந்தேகமிருந்தால், என்னிடம சாஸ்திரவாதஞ் செய்யும், தாம் தெளிவடைய நானின்னும் போதுமான நியாயம் சொல்லி வருகிறேன்.

இரணி— ஆகா! இதுவென்ன ஆச்சரியம்? கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதைபோல், ஒருபோதனை யார்சொல்லிக் கொடுத்தாரென விசாரிக்கு முன்னமே சாங்கோப சாங்கமாகப் பிரசங்கம் செய்து, வாதஞ் செய்யப் போதுமான ஞாயம் சொல்லி வருகிறேனென்கின்றான்; ஏதேது இது மகத்தான குரோதமாக முடியும்போலக் காண்கிறது? ஓகோ! அறிந்தேன்! அறிந்தேன் இவனுக்கு இவ்வளவு நீதிபோதஞ் செய்தவர் சுக்ராச்சாரியாராகவே யிருக்கவேண்டும். நல்லது ஆரடா தூதர்களே! நீங்கள் சென்று சுக்ராச்சாரியரை நான் அழைப்பதாக அழைத்து வாருங்கள்.

தூதர்— அப்படியே பிரபு!

தூதர்கள் சுக்கிராச்சாரியாரை யழைத்து வந்து விட்டவுடன் இரணியன் கேட்கிறான்.

நமது நாடுகளில் விளைவிலாத தோருபவ - என்ற மெட்டு.

சந்தம்.

அறிவிலே தெளிவை யடைய வேணுமென
அருமையா மெனது சிறுவனை
நெறியி னேடுகலை பயிலுமாறு மதி
நிலையிலே விடவு மிவனைநீர்
வெறியணுகி மதி குலையவேறு மொழி
வினைய மோதிவர வுதவினீர்
செறியலான பிழை தகுதியா நிலைமை
தெரியவேணு மிது புகலுவீர்.

வ-ம்— ஓய் சுக்ராச்சாரியாரே! என்ன காரியம் செய்தீர்?

சுக்ரா— நான் ஒன்றும் செய்யவில்லையே!

பிரக— பாட்டு.

சுகப்பாரி ரேங்கரலியாம் - என்ற மெட்டு.

இ-ம்-பியாக்-தா-ம்—ஏகம்.

பல்லவி.

குருவால் தோஷ மொன்று மில்லை
கொற்றவா சொல்லுகிறேன்
நிச்சயங் கேளு மென் சொல்லை

அநுபல்லவி.

குட்டிச் சுவரினிலே தேள் கொட்ட
கூன் தென்னை மரத்தில் நெறி கட்ட
கொண்ட கதைபோ லுவமை கிட்ட
கோபமிவர்கள்மேல் கொள்ளுவதாற் பலனில்லை (கு)

சரணம்.

அண்டையிலே யெய்தவ னிருக்க
அம்பை நொந்தார் தன்மையை நிகர்க்க
ஆகுமிந்தக் கதையை விரிக்க
ஆனதினா லிவர் மீது கோபம் வேண்டாமையா (கு)

வ-ம்— ஐயா! இவர்மீது தோஷமொன்றுமேயில்லை. எனக்கு மெஞ்ஞானபோத மருளியவர், என்னுள்ளிருக்கும், அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகரான ஸ்ரீஅரிவாசுதேவரென்று பூர்வத்திலேயே நான் மொழியலானேனே. அவ்விதத்தைச் செவியாரக் கேட்டிருந்தும், தாம், எய்தவரிருக்க அம்பை நொந்தது போலவும், குட்டிச்சுவரில் தேள்கொட்ட தென்னைமரத்தில் நெறி கட்டியதென்று சொல்லுங் கதையைப் போலவும், நிராபராதியாகிய இவரைக் கடிந்து பேசி வினவுகிறீர்? இது நியாயமில்லை இன்னும் சொல்லுகிறேன், உமக்கு உண்மை தெளிய வேண்டுமானால் என்னோடு சாஸ்திரவாதம் செய்யவாரும், இவரைக் கோபிக்கவேண்டாம்.

இரணி-வ-ம்— அடே சிறுபயலே! நீ சகல கலா விற்பனன் போலச் சாஸ்திர வாதம் செய்ய அழைக்கிறாய்? ஆனால் நித்தியப் பொருளை விஸ்தரிக்கும் திட்பமுனக்குண்டாயின், உன் சித்தாந்தத்தை நானிப்பொழுதே யறியவேண்டும்?

பாட்டு.

இப்படிப் புலம்புவதுமேன் - என்ற மெட்டு.

இ-ம்-ஸ்ரீராகம்-தா-ம்-ஆதி.

பல்லவி.

ஆனல் நீ என்ன சொல்கின்றாய் இந்த
அகிலமு மிரணிய நமவென வுரை செய்யும் (ஆ)

அநுபல்லவி.

வானோர் பாதாள லோகத் தானுநிபர் துதிக்க
லானார் நீ யென் பெயரை யானு யவமதிக்க (ஆ)

பிரக— ஷை பல்லவி.

நீர் வாழ நீதி சொல்கிறேன்
நெறிமுறை வகைகொடு நிதமன மகிழொடு (நீ)

அநுபல்லவி.

பார்விண் வாயு தேயுதண் ணீரொன்று பஞ்சபூதம்
சேருந் தேகத்தை நம்பி னோர்துன்பங் கொள்வாரென்று (நீ)

இரணி— சரணம்.

ஞான போத மெனக்குத் தானுரைக்க வந்தாயோ
ஈன முனக்குநேர லேலே வாது செய்கின்றாய் (ஆ)

பிரக— சரணம்.

எத்தனையோ வும்மிலும் சுத்த வீரர் புவியில்
செத்தார் முன்னே யறிந்தும் பித்தானீ ராதலாலே (நீ)

வ-ம்— பிதா! தோன்றி நின் றழியப்படும் கொடும் பிறப்பு என்பதை நன்கு கவனித்துணருங்கள் இல்லையேல், ஆத்ம ஞான மலர்ந்து பரவாது ஞான முணரில் அறியாமை நீங்கும், அறியாமை நீங்கில் வினையகலும், வினையகன்றால் அவாவறும், அவா வற்றால் அற்றது பற்றெனில் உற்றது வீடென்பதனால், நித்தியசுக பேரின்பமுண்டாம். இப்பேரின்பமே அழியா நிலையென்பதாம், ஆகையால் தொன்று தொட்டுத் தொடர்ந்துவரும் பிறவியாகிய சாகரத்தை நீந்துதற்குரிய இந்த உபாய நெறியைக் கடைப் பிடித்து நன்னிலை யெய்துவீராக.

இரணி— சந்தம்.

சற்றுநெஞ்சி லச்சமின்றி யுற்றடைந்து கிட்டிவந்து
தர்க்கமிங்கி யற்றிநின்ற கெட்டவம்ப னிவனைநீர்
பற்றியங்க முற்றுரைந்தி ரத்தம்வந்தி டப்பிளந்து
பக்கமெங்கும் விட்டெறிந்து அட்டியின்றி வருகுவீர்.

வ-ம்— அடா கொலைஞர்காள்! இவனைக் கொண்டுபோய் நிறுக்கி வெட்டி மாமிசாதிகளைப்பறவை மிருகினங்களுக்கு இரையிட்டு வாருங்கள். (போகிறான்) [லீலாவதி இதைக் கேள்வியுற்று வருகிறாள்.]

லீலாவதி— பாட்டு.

எஜி மோரிஜான் சாவரி பியாராரே - என்ற மெட்டு.

இ-ம்--பியாக்—தா-ம்-ஆதி.

பல்லவி.

என்னசெய் வேனினிமே லென் மகனே

அநுபல்லவி.

மன்ன வரான தந்தை மனம் போலவே நடந்து
வந்தால் வருமோ துன்ப முனைத் தொடர்ந்து (எ)

வ-ம்— கண்மணி! உனது பிதாவின்மனம்போல் நடந்திருந்தால் இவ்வித துன்பம் உனக்கு நேர்ந்திராதே? 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை' என்ற வாக்கியத்தை நீ அறிந்திருந்தும் ஏனடா பிடிவாதம் செய்கிறாய்?

பிரக— ஷை பாட்டு மெட்டு.

பல்லவி.

அன்னை யென் னம்மா மனம் வருந்தாதே பெற்ற

அநுபல்லவி.

என்னை நினைந்துமன மேங்கியழுவ தேனோ
ஈசன் தாசரைக் காக்கா திருப்பானோ (அ)

வ-ம்— அம்மா! எவ்வுயிருங் காக்க ஈசனொருவரிருக்கிறார், அவ்வுயிரில் நானொருவன்றானே இதுதாமறியாததா? விடைகொடுங்கள்.

லீலா— சரணம்.

உன்னைப் பறிகொடுத்து வாழுவேனோ
அன்னையே தாயேயென்று அனுதினம் நீயழைக்கும்
அன்பான சொல் லெவ்வித மன மறக்கும் (உ)

வ-ம்— கண்மணி! நீ அனுதினம் நினது பவளவாயால், அம்மா தாயே! என்றழைக்கும் உன் மதுரமான மொழியை நான் எவ்விதம் மறப்பேனடா?

பிரக— சரணம்.

முன்னை விதியின்படி முடியுமம்மா எல்லாம்
பன்னக சயனனின் பதத்துணை யுண்டெனக்குப்
பாரில் நீ சோகித்தழு வதுமெதற்குப் பெற்ற (அ)

வ-ம்— ஆபத்பாந்தவன், அநாதாட்சகன், பன்னசயனன், பாதாரவிந்தமே கெதியென்ற எனக்காக ஏன் துக்கம் கொள்ளுகிறீர்கள்? வேண்டாம் விடை கொடுங்கள்? கொலையாளிகளும் காத்திருக்கிறார்கள்.

லீலா— பாட்டு.

இந்தவாறு நடப்ப தேனோடா பாலா
தந்தை சொல்லுக்குமேலா மந்திர மில்லையென்று
சாற்று முலக நீதி கடந்து நின்று (எ)

வ-ம்— கண்மணி! உலகநீதி வாக்கியத்தை மறந்து, தந்தை சொல்லை மறுத்து, இந்தவிதம் நடப்பது கூடாதடா கண்மணி! நீ கொண்ட பிடிவாதத்தைவிட்டு உன் தந்தைமனப்படி நடப்பாய்.

பிரக— பாட்டு.

அந்தமாயவன் செய லறியாயோ அம்மா
தந்தையென்றால் தேகத்தைத் தந்தவனோ அருத்தம்
தாமோ தரனென்பதே பொருள் பொருத்தம் பெற்ற (அ)

வ-ம்— அம்மா! தாங்கள் ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள்? இத்தேகம் நிலையில்லாதது, ஒருநா ளழியும்படியான, இத்தேகத்தைப் பற்றித், தாங்கள் கவலைப்படுவதிலென்னபிரயோசனம்? அன்றியும் நான் தங்களுக்குப் பிள்ளையென்றும், தாங்களெனக்குத் தாயென்றும் சொல்லுவதெல்லாம் மாயாசம்பந்தமேயன்றி எனக்குந் தங்களுக்குமென்ன சம்பந்தமிருக்கின்றது? இவையெல்லாம் சந்தைக் கூட்டம்போல் ஒன்று சேர்ந்து பிரிந்து போகும் நிலைமையுடையவர்களேயன்றி, தங்களுக்குமெனக்கும் என்ன சம்பந்தம்? என்ன சொந்தம்? இதற்காகத் தாங்கள் கவலைப்படுவதிற்பிரயோசனமில்லை. இதோ இக்கொலைஞர்களைப் பாருங்கள், ராஜகட்டளைக்குப் பயந்து மிரள மிரளப்பார்க்கிறார்கள். ஆகுவதும் அழிவதும் அவன்செயலேயன்றி வேறில்லை. எனக்கு விடைகொடுங்கள்; நான் போய்வருகிறேனம்மணி!

லீலா— விருத்தம்.

பத்துமா தங்கள்மட்டும் பாவியென் பாழ்வயிற்றில்
வைத்துனைச் சுமந்துபெற்றேன் மைந்தனே யுனைவிடுத்தால்
இத்தினம் வாழுவேனோ எதனைவிட் டெதனைச் செய்வேன்
சித்தமுங் கலங்குகின்றேன் சேயனே தேறிடேனே.

(லீலாவதி மூர்ச்சையாகிருள்.)

பிரக— அன்னையாரோ மூர்ச்சையாகி விட்டார்கள். இதுதான் தக்க தருணம் போய்விடவேண்டும். அப்படி யில்லாது இங்கயே யிருப்போமாகில் பின்னும் மூர்ச்சை தெளிந்து துன்பமுறுவார்கள். (கொலைஞரைப் பார்த்து) கொலைஞர்களே! வாருங்கள் போகலாம்?

(போகிருர்கள்.)

ஸீன் முடிவு.

---

## ஸீன்—13.

காலம் — நண்பகல்.
இடம் — கொலைக்களம்.
பா-ள் — பிரகலாதன், கொலைஞர்கள்.

ஒத்த நின்னே நிம்டின் காவானி - என்ற ஜாவளி மெட்டு.

இ-ம்-காபி—தா-ம்-ஏகம்.

பிரக— பாட்டு.

என்னைக் கொல்லத் தாமதஞ் செய்ய வேண்டாம்
தன்னைத் தெய்வமாய் மதித்துத் தண்டிக்கச் சட்டம் விதித்து
சொன்ன கட்டளை மறந்து சோகித்து (எ)

பாலனுகு மெனை நினைத்துப் பார்த்து மனம் பரிதபித்துச்
சிலமெண்ணிப் பார் நன்ருய் ஆலோசித்து (எ)

உங்கள் கடமைப் படிக்கு ஒதுராஜ கட்டளைக்குப்
பங்கமின்றித் துணிவுகொள்ளும் வெட்டுதற்கு (எ)

வ-ம்— கொலையாளிகளே! உங்களரசரிட்ட கட்டளைப்படி என்னை வெட்டுங்கள் தாமதிக்கவேண்டாம்.

பாட்டு.

திருக்கடையூர்தனிலே - என்ற மெட்டு.

இ-ம்-முகாரி—தா-ம்-ரூபகம்.

பல்லவி.

நாரண மாதவனே நால்வேத
ஆரண ஆதவனே

அநுபல்லவி.

காரண மணமலர்க் கண்ணனே வெண்ணிற
வாரணனே கரு வண்ணமா மொண்ணிற (நா)

சரணம்.

நந்த முகுந்த கோ விந்தா அமரர்கள்
எந்த வேளையிலும் வந்து துதிசொல்லும்
கந்த மிகுந்த மணந்தருகு மர
விந்தபத மிந்த வேளை தந்து நில்லும் (நா)

கொலைஞர்கள் பிரகலாதனை வெட்டும்பொழுது
வெட்டானது தவறிக் கீழேவிழுந்து முனை
மழுங்கிப் போகின்றன இரணியனிடம்
போய்ச் சொல்லுகிறார்.

ஸீன் முடிவு.

---

## ஸீன்-14.

காலம் — பிற்பகல்.
இடம் — சபாமண்டபம்.
பாத்-ள் — கொலைஞர்கள், பிரகலாதன்.

தூதர்கள்— பிரபு! நமஸ்கரிக்கிறோம்.

இரணி— அந்தச் சிறுவனைக் கொலைசெய்து விட்டீர்களா?

தூ-ர்— பிரபு! நாங்கள் வெட்டும்பொழுது கத்தியானது கீழே தவறி விழுந்து முனை மழுங்கிப்போய்விட்டது. சேதமொன்றுமில்லை.

இரணி— இது என்ன ஆச்சரியம்? இவர்கள் அச்சிறுவனை வெட்டி னும் தவறி ஆயுத மழுங்கிப் போயினவன்றி சற்றேனும் சேதத்தை விளைவிக்கவில்லை என்கின்றார்களே?

பிரக— பிதா! நமஸ்கரிக்கின்றேன்.

இரணி— பாட்டு.

அடைக்கலமே அடைக்கலமே - என்ற மெட்டு.

இ-ம்-ஆரபி—தா-ம்-ஆதி.

பல்லவி.

இனியேனு மெனது பெயர்
இரணிய நமவென உரைசெய் மனமகிழ்வாய்

அநுபல்லவி.

முனியாதியமரர் தினமோதிடுமொழி
தனைநீ புகல்வதில் எனவோ கெடுவழி (இ)

பிரக— பல்லவி.

பரந்தாம னொருவனன்றி
வரந்தந்திடுந் தெய்வ மிருந்தால் புகன்றிடுவேன் (ப)

அநுபல்லவி.

சிரந்தா னொழியினும் அறந்தா னழியினுங்
கரந்தான் குன்றினு மனந்தான் றூண்டினும் (ப)

இரணி— சரணம்.

தந்தையாகு மேலுமித் தரணிக்கு ராஜன்
சகல லோகம் புகழ் தழைக்கும் பிரகாசன்
சிந்தையின் முரணமர் செயும் பகைநாசன்
தேவருந் தாள்பணிந்து சேவிக்குமீசன் (இ)

பிரக— சரணம்.

ஓங்கிவா ளாயுதத்தி னால் வெட்டினாலும்
உதிர மழிய விண் ணகன்று நின்றாலும்
பாங்கிலவன் பெயரன்றி வேறு பெயர்சொல்ல
பார்த்திடேன் மனப் பூர்த்தியுட னிமைவெல்ல (ப)

இரணி— பகைவன் சொல்லைத்துதித்துப் பணிவதை விடுத்து
பகரு மெனது சொல்லுக் குள்செவி கொடுத்து
மிகமன மழுகிட னருகினி லெடுத்து
விளம்புவாய் நல்லபிள்ளை யெனப் பெயரெடுத்து (இ)

வ-ம்— கண்மணி! இனியாவது எனது பெயரைச் சொல்?

பிரக— விருத்தம்.

வேதத்துக் காதியாக விளங்கிய பகவான் திவ்ய
பாதத்தைப் புகல்வதல்லால் பாரிலே மதம்பிடித்து
வாதத்தைப் புரிந்ததங்கள் வார்த்தை யெள்ளளவுங் கொள்ளேன்
சேதத்துக் குரியவார்த்தை செப்பிட வேண்டாமையா.

வ-ம்— தந்தையே! தாங்கள் என்னை எவ்வளவு வற்புறுத்திச் சொல்லச் சொல்லினும் ஒருக்காலுந் தங்களைத் துதிக்கமாட்டேன்.

இரணியன்— பாட்டு.

எட்டி நில்லும் நாரதரே - என்ற மெட்டு.

இ-ம்-அடாணு—தா-ம்-ஆதி.

பல்லவி.

மலையிலேற்றி விழ வுருட்டுவீர்
இந்தப் பயலே (ம)

அநுபல்லவி.

தலை கீழாகக் கால் மேலாகத்
தான் சிதைந் தழிந்து சாக (ம)

சரணம்.

கலையிலே தெளிந்து ஞானங் கற்றுணர்ந்தது போலிங்கு
காரண காரிய னரிதானே ஆதி மூலமென்று
பல பல நீதி ஞாயங்கள் பாங்குட னிங்கேபுகன்று
பக்திசெய்யப் புத்திசொன்ன பித்தனைப் பிடித்துச்சென்று (ம)

வ-ம்— அடே தூதர்களே! இச் சின்னப்பயலை மலைமீதிலேற்றித் தலை கீழாகவுருட்டித் தள்ளுங்கள்.

தூதர்— அப்படியே பிரபு! (கூட்டிக்கொண்டு போகிறார்கள்)

ஸீன் முடிவு.

---

## ஸீன்—15.

காலம் — மாலை.
இடம் — மலையின் உச்சி.
பாத்-ள் — ஏவலர், பிரகலாதன்.

தூதர்கள் பிரகலாதனை மலைமேற் கொண்டுபோய் நிறுத்துகிறார்கள் தோத்திரம் செய்கிறான்.

விடலால வாயிலா - என்ற மெட்டு.

இ-ம்—தோடி—தாளம்—ரூபகம்.

பாட்டு.

வானவர்க்கமு தேயளித்திடு மாதவா மதியாதவா
கானுனைத்தொழு தேனெனக்கருள் நல்கிட க்ஷண வேணுமே
கானமெய்த்திரு மாதுநத்திடு காரணாதுள பாரனே
ஞானமுற்ற கலாதனித்தவென் னாதனே மலர்ப்பாதனே.

பிரகலாதன் துதிசெய்தவுடன் தூதர்கள் மலைமேல் நின்றுருட்டுகிறார்கள். பூமாதேவியானவள் வந்து தாங்கி யெடுத்துச் செல்லுகிறாள்.

வ-ம்— குழந்தாய் பிரகலாதா! நீ யாதொன்றுக்குங் கவலைப்பட வேண்டாம். நீ சாட்சாத் பரந்தாமனையே சதாகாலமும் துதிப்பாயாக. உனக்கெவ்வித துன்பமு மேற்படாது நான் பூமாதேவி. பூரண ஆசீர்வாதம்.

(போகிறார்கள்.)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-16.

காலம் — மாலை.
இடம் — அரண்மனை.
பாத்-ள் — இரணியன், காவலர், பிரஹலாதன்.

இரணியன் முன்போய்த் தூதர்கள் நிற்கிறார்கள். இரணியன் கேட்கிறான்.

இரணி— அடே உருட்டிக் கொன்றுவிட்டீர்களா?

தூதர்— ஆம் பிரபு!

பிரக— பிதா நமஸ்கரிக்கின்றேன்.

இரணி— அடே தூதர்காள்! உருட்டிக் கொன்றுவிட்டோமென்றீர்கள் இதோ வந்துவிட்டானே என்ன?

தூதர்— பிரபோ! என்னவோ தெரியவில்லை?

இரணியன்— பாட்டு.

இருவருக்கும் தர்க்கம்.

ஏனோ என்மேல் பழிசுமத்துறீர் - என்ற மெட்டு.

இ-ம்-காபி—தா-ம்-ஆதி.

துக்டா.

இரணி— என் பேரைச் சொல்நீ இலையெனிற் கொல்வேனான்

பிரக — எதுக்கோ இம்மதம்

இரணி— இல்லையோ சம்மதம்

பிரக — ஈசனினும மலாது மொழிகிலேன்

இராணி— கொஞ்சமும் நெஞ்சினி லஞ்சுதலின்றி
எதிர்த்து மொழிந்தனை வாதே-

பிரக — கும்பிடுகின்றது நந்தனிரண்டு
பதங்களையன்றி யடாதே

இராணி— குத்திநான் கொல்லவோ

பிரக — புத்திதா னில்லையோ

இராணி— கோபமு மாகுது நீயழி வாயினி (எ)

பிரக — செத்துதித்த லைந்துழ லப்படு மும்மதுபேர்
செப்பிடி லிகபர நலனேது

இராணி— தேவரு மெனதுபேர் ஓதியே நலமது
சேருகிறு ருனக்குத் தெரியாது

பிரக — செப்புத லொப்புமா

இராணி— கொல் விப்பது தப்புமா

பிரக — திருமா லருளா எழியேன் விடுவீர் மதமே (எ)

இ-ன்-வ-ம்— இப்பொழுதாவது என் பெயரைச் சொல்?

பிர-வ-ம்— பிதா! மறுபடியும் உமது பெயரைச் சொல்லச் சொல்லுவதால் இலாபமென்ன? எதற்காகக் கருவங்கொள்ளுகிறீர்கள்? நான் அந்த அரிபரந்தாமனின் நாமமன்றி வேறு வார்த்தை என்னுவில் நின்றும் வெளிவராது. நீர் என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம். அப்பரந்தாமனுடைய நாமத்தைச் சொல்லுவேனன்றிச் செத்துச் செத்து ஜெனன மெடுக்கும் ஜீவாத்மாக்களில் ஒன்ருகிய உமது பெயரைச் சொல்லுவது சரியா? ஆகையால், சொல்லவே மாட்டேன். அம்மொழியைத் தாங்கள் விட்டு அவ்வனந்த ரூபியை நினைத்து வாழ்வீராக.

இராணி— அடா சிறுபயலே! என்னெதிரியை நீ துதிப்பதுமல்லாமல் என்னையும் சொல்லித் துதிக்கச் சொல்கிருயா சொல்லடா என் பெயர்?

பிரக— ஏன் என்னை நிர்ப்பந்தம் செய்கிறீர்கள்? வேண்டாம் விட்டு விடும் உமது பெயரைச் சொல்வேனென்பதைக் கனவிலும் நினைக்காதீர்? அப்படியன்றி ஏதாவது நினைத்தால், உமது வாழ்வுக்குத் தாழ்வு வந்து நேர்ந்துவிடும். என்னைத் திரும்பித் திரும்பிக் கேட்பதினுலே அறியாதமடமைக்குக் கிழாகமதிக்கிறேன்.

இரணி— அடே! அற்பப் பிராணனுன மதிமந்தா! என்னையா அறிவில்லாத மடமையை உமைமானிப்பதுபோல் குரங்கென்று பரிகாசம் செய்கிருய்? இரு இரு அடே தூதர்களே! இந்தச் சிறுவனுடைய உன்மத்தமான மொழியைக் கேட்டீர்களா?

வாசமாமலரில் வாழும் நான்முகன் - என்ற மெட்டு.

இ-ம்-சங்கராபரணம்—தா-ம்-ஆதி.

சந்தப் பாட்டு.

வம்பினு லிங்கு வாதுகள் புகன்று
வார்த்தைக ளாடிய கொடியா
அம்பினு லென்றன் காது புண்ணுக்கு
மறிவிலா விச்சிறு பயலை
கம்பினு லடித்துப் பற்களை யுதிர்த்துக்
கைகளை முறித்து நீர் யானைக்
கொம்பினுற் குத்திக் காலினுல் மிதித்துக்
கொல்லமுன் கொண்டு செல்வீரே.

வ-ம்— அடே தூதர்களே! இச்சிறுபயலை நமது பட்டத்தி யானையின் காலால் மிதிக்கச் செய்து கொன்றுவிட்டு வாருங்கள்.

தூதர்— அப்படியே பிரபு!

(போகிருர்கள்.)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-17.

காலம் — காலை.
இடம் — நகர் வெளிப்புறம்.
பாத்-ள் — பிரகலாதன், யானை, யானைப்பாகன்.

பிரகலாதன் நாராயணனைத் தோத்திரம் செய்கிருன்.

பாட்டு.

சங்கரா கேங்காதரா - என்ற மெட்டு.

இ-ம்-முகாரி—தா-ம்-அடதாளம்.

பல்லவி.

சங்கு சக்ராயுதனே தாசரை யாளுந்
தாமோதர மாதவனே

அநுபல்லவி.

எங்கும் வியாபகமா யிருந் லைகைக் காக்கும்
மங்கை மணவாளனே மாயா குணளனே (ச)

சரணம்.

தன்பெயரைச் சொல்லென்று மறுத்ததாலே
தண்டிக்கச் சொன்னாரின்று
வன்மனங் கொண்டின்னும் வருக்கினுலுங் கோபமா
யென்மனம் பதைக்காமலே வகதருள் நேயமாய் (ச)

தூதர்கள் பிரகலாதனைப் போட்டலில் நிறுத்தி யானையைக் கொண்டு மிதித்துக் கொல்ல முயலும்போது கவானருள ல் ஓர சிங்கமானது வந்து யானையை யடித்துக்கொண்டு போயிற்று. இதைக்கண்ட தூதர்கள் இரணியனிடம் போய்ச் சொல்லுகிறார்கள்.

ஸீன் முடிவு.

---

## ஸீன்-18.

காலம் — பகல்.
இடம் — அரண்மனை.
பாத்-ள் — இரணியன், காவலர், ஏவலர்

இரணி— அடே! அந்தச் சிறுபயல் ஒழிந்தானா?

தூதர்— யானை மிதித்துக் கொன்றுவிட்டது பிரபு!

பிர-ன்— பிதா! நமஸ்கரிக்கிறேன்.

இரணியன்— பாட்டு தர்க்கம்.

என்னடிநீ மேத்த மேத்த குலுக்குறாய் - என்றமெட்டு.

இ-ம்-ஆரபி - தா-ம்-சாப்பு.

பல்லவி.

இன்னமுனக் கிந்தவிதம்
வந்தமதமே னேடா.

அநுபல்லவி.

முன்னவன் ஹரியென மொழிகின்றாய் குல
முறைகெடப் பிரசங்கம் பொழிகின்றாய்
இன்னுமின்ன மாகவுன் தேகத்தை வெட்டிக்கொல்வேன்
சிறுவா சிறுவா சிறுவா பயமில்லாமல் (இ)

பிரகலாதன்— பல்லவி.

என்னை யென்ன செய்யவும்மா
லிங்கே முடியுமையா

அநுபல்லவி.

தன்னையறியாமலே மயல் கொண்டு இங்கு
தாண்டிக் குதித்தால் பயனேதுண்டு
அன்னவர கனின்றந்தை யவரைப் பணிவீராகில்
அருள்வான் அருள்வான் அருள்வான் ஆகையினாலே (எ)

இரணியன்— சரணம்.

எதிரியைப் புகழ்ந்திட லாகுமா வந்தா
லென்கோபம் லேசிலே போகுமா
[illegible]யாம விளியேனும் வாதுபுரிவா யானால்
வதைப்பேன் வதைப்பேன் வதைப்பேன் அச்சமில்லாமல் (எ)

பிரகலாதன்— சரணம்.

பழுது தருஞ்சின மேனையா அந்தப்
பரந்தாமனே தெய்வந் தானையா
தொழுது வாழுவீராகில் சுகமாக வாழுவீர்
சொன்னேன் சொன்னேன் சொன்னேன் பயமில்லாமல் (எ)

இரணி— அடா! சிறுபயலே! எதிர்த்தெதிர்த்துப் பேசிவாதாடுகிறா யா சிறிதும் பயமில்லாமல்?

சந்தப் பாட்டு.

இ-ம்-சங்கராபரணம் - தா-ம்-ஏகம்.

விருப்பை யகற்றி வருத்த முருத்தும்
வெறுப்பு வரச்சொ லுரைப்பதோ
வெளுத்த கடற்கு ளொளித்த பயற்கு
மிகப்ப ணிபக்திவி ளைப்பதோ
நரிக்கு மிளைத்த புலிக்கு நிகர்க்கும்
நகைப்பு விளைக்கு விடுப்பதால்
நமக்கு மனர்த்த விளைக்கு வதைக்கு
நவிற்று விதத்து நடத்துவீர்
பொருப்பி லுருட்டி விடுத்த முயற்சி
புகழ்ச்சி தனக்கு நிலைக்கவே

புதுக்கு பிறப்பை நிகர்த்து விளக்க
புலிக்கு ளெதிர்த்து முரைப்பதால்
நெருப்பை வளர்த்த குழிக்கு ளிறக்கி
நிறுத்தி யெரித்து வதைத்துநீர்
நிலத்தி லெனக்கு மகிழ்ச்சி கொடுக்க
நினைத்து நொடிக்கு ளடுத்திடீர்.

வ-ம்— அடா! தூதர்காள்! இச்சிறுபயலை ஆகாயத்திற்கும் பூமிக்கும் நன்ருக நெருப்பை வளர்த்தி அக்குழிக்குள் தள்ளிவிட்டு வாருங்கள்.

தூதர்— அப்படியே (போகிருர்கள்)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-19.

காலம் — முற்பகல்.
இடம் — நகர்க்குவெளிப்புறம்.
பாத்-ள் —— பிரகலாதன், ஏவலர்.

தூதர்கள் ஆழமாகக் குழிவெட்டி அதில் கட்டைகளைப் போட்டு எரித்து நெருப்பு வளர்க்கிருர்கள்., பிரகலாதன் அரியைத் தோத்திரம் செய்கிருன்.

பாட்டு.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் - என்ற மெட்டு.

இ-ம்-சங்கராபரணம்-தா-ம்-ஆதி.

கண்ணி.

நீருண்ட மேகமென நேர்ந்தவுரு வோனே
நெஞ்சுருகு மன்பர்க்கு வைகுந்தந் தருவோனே
பாருண்ட உமதடியைப் பைந்துள வினுனே
பண்புருவாய்ப் பணிகின்றேன் பாதுகாப்பீர் தானே
இந்நிலத்தி லென் றன் தந்தை ஏற்றியுனையே தொழ
பொன்னடியைப் போற்றிநின்றே னின்னருள் செய்வாயே

தூதர்கள் எரிகின்ற அக்கினிக் குண்டத்துள் பிரகலாதனைத் தள்ளுகிருர்கள்.
அக்கினிபகவான் பிரசன்னமாகித் தாங்குகின்ருர்.

அக்கினி-வ-ம்— வத்சா! கவலைப்படாதே, நீ பகவானையே மனதிற் றியானித்தும் நம்பியிருப்பதினாலும் உனக்கு யாதொரு துன்பமும் ஏற்படாது நான் போய்வருகிறேன். உனக்கு மங்களமுண்டாகுக.

இதைக்கண்ட, தூதர்கள், இரணியனிடம் போகிறார்கள்
பிரகலாதனும் போகிறான்.

ஸீன் முடிவு.

---

## ஸீன்-20.

காலம் — நண்பகல்.
இடம் — அரண்மனை.
பாத்-ள் — இரணியன், பிரகலாதன், ஏவலர்.

இரணி— அடே தூதர்காள்! அத்துஷ்டப்பயல் மடிந்துபோனானா?

தூதர்— ஆம் பிரபு! அக்கினிக் குழியிற்றள்ளி எரித்துவிட்டோம்

பிரக— பிதா நமஸ்கரிக்கின்றேன்.

இரணி— அடே! இனியாவது என்பெயரைச் சொல்.

பிரக— ஒருக்காலுந் தங்கள் பெயரைச் சொல்லமாட்டேன்.

இரணி— பாட்டு தர்க்கம்.

சத்யவான் மீதுனக் காசையேன் - என்ற மெட்டு.

இ-ம்-ஆனந்தபைரவி—தா-ம்-ஏகம்.

பல்லவி.

வேண்டாமிந்தமொழி தீதடா
வீணையழிந்து போ காதடா

பிரக— பல்லவி.

அழிந்து போவது நானில்லை
ஐயா நீர்தா மடைவீர் தொல்லை

இரணி ன்— அநுபல்லவி.

ஆண்டருள் செய்குவா னீ நின்று
ஆதிமூல மவன் றானென்று
ஆராயாமற் சொல்லுகிறா யின்று
அறிவில்லாதவனே ஒன்றும் (வே)

வ-ம்— ஆனுல் எவனே அண்ட பிண்ட சராசரங்களனைத்தையுங் காப்பாற்றும் ஆதிமூலமே தெய்வமானவனென்று சொல்லித் துதிக்கிருயே, இதுவரைநீ அவனைத் துதிப்பதனுல் அடைந்தது இம்சையே யன்றி,

ரவிகுல திலகா - என்ற மெட்டு.

இ-ம்-மோகனம்—தா-ம்-ரூபகம்.

பல்லவி.

நீ பெற்றதென்ன நன்மை சொல்
பேணுது சாதித்து வீணுக வாதித்து (பெ)

அநுபல்லவி.

சற்றுமெனது மகிமை தெரியாமல்
தாளில் விழுந்து வணக்கம் புரியாமல்
தர்க்கம் நீ செப்பியே நிற்பதால்
சஞ்சலம் நெஞ்சினில் மிஞ்சினை அன்றி (பெ)

சரணம்.

கற்றமதத்தினுற் கண்ணன் றெய்வமென்று
கள்ளனவனைப் பல புகழ்ந்தும் நின்று
காதகா வாது நீ யோதலால்
கண்டசு கந்தனை விந்தை படும்படி (பெ)

பிரக-வ-ம்— அந்த காரணனைத் துதித்ததால் நானடைந்த பலன் என்னவென்று கேட்குறீர்? கத்தியாலெனது தேகத்தை வெட்டி வெட்டிக் காக்கைகளுக்கு இரையாக்கச் சொன்னீர், அதற்கும் உயிர் பிழைத்தேன்; மலையிலிருந்து என்னைத் தலை கீழாக உருட்டிக்கொல்லும்படிச் செய்தீர், அதற்கும் பிழைத்தேன்; யானைக்கொம்பினுல் குத்தி என்னை இம்சைப் படுத்தச் சொன்னீர், அதனின்றுந் தப்பித்தேன்; அன்றியுந் தீக்குழியி லென்னைநிறுத்தி யெரித்து விடும்படியாகவும் சொன்னீர், அதற்கும் நான் பயப்படவில்லை; இன்னும் தாம் இடுகின்ற கட்டளை களுக்கு அஞ்சாத நெஞ்சு படைத்தவனுகவே யிருக்கிறேன். அன்றி நான் கொஞ்சமாவது மனக்கிலேசப்படவில்லை தாம் அந்தப்பிரம சொரூபியாகிய காரணன் செயல்களை நன்கு தெரிந் திருந்தும் தெரியாததுபோல் வினவுகிறீர்கள்.

இரணி— சே துஷ்டா! இன்னுமுன் மாறு மொழியை விட்டாயில்லையே? ஆரடா தூதர்களே! நீங்கள் சென்று பாம்புப் பிடாரனை யழைத்துக்கொண்டு வாருங்கள்.

தூதர்— பிரபு! அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறேன்.

(தூதர்கள் பாம்புப்பிடாரனை யழைத்து வருகிறார்கள்.)

பா-ன்— பிரபு! நமஸ்கரிக்கிறேன்.

இரணி— பாம்புபிடாரா! உன்னிடம் விஷமிருக்கின்றதா?

பா-ன்— இருக்கிறது பிரபு!

இரணி— இருந்தால் இப்படிக்கொடு

பாம்புப்பிடாரன் விஷங்கொடுக்க வாங்கிக் கொண்டு அந்தப்புரம் போகிறான்.

ஸீன் முடிவு.

---

## ஸீன்-21.

காலம் — பிற்பகல்.
இடம் — அந்தப்புரம்.
பாத்-ள் — லீலாவதி, இரணியன், பிரகலாதன்.

இரணியனுக்கும் லீலாவதிக்கும் தர்க்கம்.

பாட்டு.

கூட்டடிநீ பரிசுத்தமாக - என்ற மெட்டு.

இ-ம்-பியாக்—தா-ம்-ஆதி.

இரணியன்— பல்லவி.

கொஞ்சமேனு மன்புநீ யெண்ணாமல்
கொல்லவேணு மிப்பயலைச்
சொல்லு மென் வார்த்தையைக் கேளு (கொ)

லீலா— பல்லவி.

மைந்தனாகுஞ் சிறுவன்மேல் கோபம்
வந்தது மேது பொருந்த இந்த வேலைக்
கொல்லச் சொந்தம் (மை)

இரணி— அநுபல்லவி,

வஞ்சக னம்பகைவன் மாயனைத் துதித்தான்
வணங்கச் சொல்லியுங் கேளா தெனையவமதித்தான்
பிஞ்சிலே பழுத்தவன்போல் ஞானம் போதித்தான்
பெற்றதுகுல காசமே மற்றிலை யிது நிசமே (கொ)

லீலா— அநுபல்லவி.

குழந்தை பிழைக்குத் தந்தை கொள்வாரோ கோபம்
கொல்ல விஷங் கொடுத்தீ ரிதுபரி தாபம்
தொழுந் தெய்வம் நீருமது சொற்கே தாட்சேபம்
சொல்லுமென் வார்த்தையைக் கேட்டுத்தள்ள வேண்டா
மிது பாபம் (மை)

இரணி— சரணம்.

கணவன் சொற்றடுப்பது மாதர்க்குத் தீது
கருதிப் பார்நீ யென் சொல் மறுக்க லாகாது
குணமனு வில்லாவிந்தப் பயலையிப் போது
கொல்லவிஷங் கொண்டு வந்தேன் மெல்லியுன்றன் கையிற்
றந்தேன் (கொ)

லீலா— சரணம்.

விளையாட்டுக் குழந்தை யறியுமோ புத்தி
வேண்டா மையையோ கொன்றால் வரும்சிசு ஹத்தி
எளியபாலரை வதைப் பதோ திட சக்தி
ஏதுக்கு மனம்வருந்த வாதிப்பது விடுமிந்த (மை)

வ-ம்— பிராணேசா! சிறுவன், அறியாக்குழந்தை, பிள்ளை குற்றம் செய்தால், தந்தை பொறுக்க வேண்டியதிருக்கக் கொல்ல முயல்வது ஞாயமில்லை பிராணபதி! (அழுகிறாள்)

இரணி— லீலாவதி! என்ன சொன்னபோதிலும், குலத்தைக்கெடுக்க வந்த இந்தக் கோடாரிக் காம்பான இந்தப்பயலை நான் உயிர் போக்காது விடமாட்டேன். ஆகையினாலே,

இரணி— பாட்டு.

இ-ம்-கமாசு—தா-ம்-ரூபகம்.

பல்லவி.

என் சொல்லுக் கிணங்கு வாயா இல்லையா
இதுவேளை லீலாவதி (என்)

அநுபல்லவி.

அன்னியனைத் துதிசெய் சின்னப் பயலே
அவனியி னிலைபெற ஆவியொடு விடமனமிலே (எ)

சரணம்.

சிந்தையில் நந்தனையே சந்ததம் வந்தனையே
செயுமிவ னிலை பெறத் தேகமொடு விடமனதிலே (எ)

வ-ம்— ஏ லீலாவதி! பதிசொல்லை மீறிப் பேசுவோர் பத்தினிப் பெண்டாகார், ஆகையால், என் மொழிப்படி இந்த விஷத்தை யூட்டி உயிர் போக்குவாய்.

ஆரடா தூதர்களே! இங்கு நடக்கும் விதத்தை அறிந்து வந்து என்னிடத்திற் சொல்லுவீராக.

(போகிறான்)

லீலா-வ-ம்— ஆ என் செல்வமே! ஏன் இன்னும் தாமதிக்கிறாய்? அப்பா! உனது மிருதுவான மொழிகளால் உன் தந்தையின் பேரைச் சொல்லடா! பிள்ளையைப் பெற்றெடுப்பதெதற்கு? தந்தையினுடைய மகிமையை வெளிப்படுத்துவதற் காகவல்லவா? அப்படியிருக்க, நீயேன் உன் பிதாவின் பெயரைச்சொல்லமாட்டேனென்கிறாய்? அப்பா! வீண்காலதாமதஞ் செய்யாதே, தந்தை நாமதேயத்லதச் சொல்லி, என்னை மனமகிழச் செய்யடா கண்மணி!

பிரக— அம்மா! தாங்களும் என்ன அறியாமை யென்னு மாயா சம்பந்தத்திற்குள் அகப்பட்டு வருந்துகிறீர்? தந்தை யென்றுலென்ன? என் சடலத்தைத் தந்தவரா? அதற்குத் தாங்கள் கவலைப்படுவானேன்? "பாரினிற் பிறந்தபோ தெவரும் பண்பிறைற், பூரியரெனப் பெயர் பூண்டதில்லையால்" என்பதற் கிணங்கத் தாங்களும் என்ன எனக்குப் புத்தி சொல்லுகிறீர்கள்? எல்லாம் அந்த மாயா சொரூபியான மாதவன் செயலே யல்லாமல் நாம் வருந்தி யென்ன பயனிருக்கிறது? 'கடந்த ஞானியுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்' என்பதற்கிணங்க தாங்கள் வருந்துகின்றீர் போலும், ஏன் என்னைப்பற்றிய கவலை தங்களுக்கு? நான் ஆதியிலேயே தங்களுக்குச் சொல்லவில்லையா? அவையெல்லா மாயாசம்பந்தமேயன்றி வேறில்லை யென்று, சீக்கிரம்

எனக்கு அந்த விஷத்தைக் கொடுப்பீர்களாக. தந்தையின் கட்டளை தாங்கள் மீறக்கூடாது, மகத்தான பாவமுண்டாகும். ஆகையால் சீக்கிரம் விஷத்தைத் தாருங்கள். எல்லாவற்றிற்கும் என்னை யாட்கொள்ளும் பரம கருணாநிதி யிருக்கிறார்.

லீலா— பாட்டு.

இ-ம்-தன்யாசி—தா-ம்-ஆதி.

பல்லவி.

ஏண்டா மறுத்துரைப்பதும் தந்தைபேர் சொல்லத்
தாண்டாபிள்ளை பிறம்பதும்

அநுபல்லவி.

வேண்டா மிந்தப் பிடிவாதம் விட்டு விடடா அப்பா
தூண்டா மணிவிளக்கே சொன்னே னுனக் கொப்பார் (ஏ)

பிரக— பல்லவி.

தாயே நீ யறியாததோ பகவான் செய்தி
தானேது முணராததோ

அநுபல்லவி.

மாயவுலகத்துள்ள வாழ்வைச் சதமாய் நம்பும்
தீய தந்தைபேர் சொல்ல சேருமே வம்புந் துன்பும் (தா)

லீலா— சரணம்.

என்னமதி கொண்டாயடா தந்தைபேர் சொன்னு
லேது துன்பங் கண்டாயடா
அன்னையும் பிதாவுமே முன்னறி தெய்வமென்று
சொன்னமுதி யோர்வார்த்தை பின்னமதாகவின்று (ஏ)

பிரக— சரணம்.

அரியை மறக்கலாகுமா மறந்தால் வரும்
நரகம் சகிக்கப் போகுமா
புரியும் பாதகத் தந்தை போதனைக் கேபொருந்தி
எரியும் நெருப்பைப் போல என் மெலிகுறாய் வருந்தி (தா)

லீலா— விருத்தம்.

தடுத்துநீ மொழிந்த வார்த்தை தனக்கதி சினத்தை மூட்டி
விடுத்ததால் கொதித்து வெம்பி விரைவுட னுனது தந்தை
அடுத்தெனை தருமை மைந்தா ஐயையோ வுனைக்கொல்லக்
கொடுத்தனர் விஷத்தை யென்கை கோதைநா னென்செய்வேனே.

வ-ம்— பாலா! உன் தந்தை வார்த்தைக்கு எதிர்பேசி அவருக்குக் கோபத்தை மூட்டினதாலல்லவோ, உனக்கு விஷங்குடிப்பித்துக் கொல்லும்படி எனக்குக் கட்டளை யிட்டார், இதற்கு நானென்ன செய்வேன்?

பிரக— விருத்தம்.

கெருட வாகனனார் தன்னைக் கிட்டிய தாசர் கட்கு
அருடரா திருப்பன் கொல்லோ அன்னையே கேள்மனக்கண்
குருடரைப் போனனிங்கு குறிக்கிலே னழியும் நாடாம்
புருடரின் மொழியைப் போலிப் போதுதா விஷமெனக்கே.

வ-ம்— தன்னையடுத்த தாசர்களைப் பாதுகாக்கும் கருணாநிதி என்மட்டில், கருணைகாட்டா திருப்பாரோ? கண்ணிருந்தும் விழிகண் குருடரைப்போல, செத்துச் செத்துப் பிறக்கும் நாமத்தை யுச்சரிக்க என் மனம் வராது. இதனையுறுதியாய் நம்பி, தாங்கள் பர்த்தாவின் வார்த்தைக் கிணங்கி, அதி சீக்கிரமாக விஷத்தைக் கொடுங்கள்.

லீலாவதி— பாட்டு.

சட்டைபோறுக்க வைத்தாய் சிவமே - என்ற மேட்டு.

இ-ம்-மத்யமாவதி—தா-ம்-ஆதி.

பல்லவி.

என்ன விதமாய்த் தருவேன்டா கொடிய விஷம் (எ)

அநுபல்லவி.

சின்னஞ் சிறுவயசு உன்னுடைய நல்லாவி
தன்னைக் கொல்லவிசைந்தா லன்னையாவேனோ பாவி (எ)

பிரக— பல்லவி.

அம்மா அழுது வருந்தாதே எனைக் குறித்து (அ)

அநுபல்லவி.

பெம்மா னருளாலெனக் கெம்மாத்திர மிவ்விஷம்
தம்மால்முன் துக்கசுகம் பின்னால்வருஞ் சகசம் (அ)

லீலா— சரணம்.

பத்துமாதஞ் சுமந்து பெற்றேன் உன்னைநான் பாவி (பத்)
சித்தங் கலங்குதடா வத்சனேவிஷ மீய்ந்து
செத்துமடியக் கண்டி ருப்பேனோ உயிர்வாழ்ந்து (ப)

பிரக— ஷெ

நின்றுநினைத்தா லொன்றுவருமோ நமதிஷ்டம்போல் (நி)
அன்று எழுதினவன் அழித்தெழுதுவ தில்லை
கன்றிவா டுவதெல்லாங் கண்டாய் மிகவுந்தொல்லை (நி)

லீலா-வ-ம்— பாலகா! 'பெற்றமனம் பித்து பிள்ளைமனங் கல்லு' என்று சொல்லுவார்கள். அந்தப் பழமொழியின் அனுபவ உண்மையை நானின்று உன்னளவிற்கண்டேன். நீ எனது சோகத்தை உணர்ந்தாயில்லை. எந்த விதத்தில் உன்னைக்கொல்ல என்மனம் ஒருப்படும்? பதி வாக்கு மறுக்காது உன்னைக் கொன்று, அதனாலேற்படும் பரம கைவல்ய சுகபேரின்பத்தினும் ரௌரவாதி நரகமே, நான் குடியிருக்கும் நித்யபேரின்ப வீடாகக்கொள்ளுவேன். 'ஆக்கங் கருதி முதலிழக்கும் செய்வினை, ஊக்கா ரறிவுடையார்' என்ற முதுமொழி ஒன்றே என்னெண்ணத்தில் வேரூன்றி நிற்கின்றது. ஆதலால் உன்னையிழந்து நானடையும் மோட்சானந்தபலன் எனக்கு வேண்டுவதில்லை யென்றாலும், உன் தந்தையாகிய என் பதிவாக்கைத் தடுக்கக்கூடாதென்னும் காரணத்தால் சஞ்சலமடைகிறேன் இதற்கென்ன செய்வேண்டா கண்மணி!

விருத்தம்.

பதிசொல்லை மீறல்பாவம் பாலனைக் கொல்லல்பாவம்
விதியிவை யிரண்டுங்கூட்டி விட்டதே யிந்தவேளை
எதனைவிட் டெதனைச் செய்வே னென்னைப்போ லொருசண்டாளி
பதகி யிங்குண்டோநெஞ்சம் பதறுதென் செய்வேனையோ.

வ-ம்— பதிசொல்லை மீறினால் பதிவிரதா தர்மத்திற்குப் பங்கம்வந்து சேரும், புத்திரனுக்கு விஷமூட்டினால் அது பெரிய சிசுஹத்தி தோஷமுண்டாகும், எதனைவிட் டெதனைச் செய்வது? ஐயோ குளறுகிறது, அதிலும் நாவில் பசையில்லாததுபோல் தோற்றுகிறது. (மூர்ச்சையாகிறாள்)

பிரக— நமது அன்னையாரோ மூர்ச்சையாகினர். இனி நாம் சும்மா இருப்பதுதகாது விஷத்தை நாமே பானஞ்செய்வோம். (விஷத்தைத் தானே குடிக்கிறான், லீலாவதி மூர்ச்சைதெளிந்து பார்க்கிறாள்)

லீலா— அப்பா பாலகா! இப்பாத்திரமென்ன? இப்படிக் கவிழ்ந்து கிடக்கிறதே? எனதருமைப் பாலகன் விஷத்தைப் பானஞ் செய்துவிட்டான் போற்றெரிகிறதே? இன்னும் என்னென்ன துன்பம் விளையப்போகிறதோ? அடே என் செல்வமே! இனி யாவது உன் பிதாவின் நாமதேயத்தைத் துதிசெய்யடா?

பிரக— அம்மா! இதுவரை நடந்திருக்கும் வைபவங்களெல்லாம் அறிந்திருந்தும், இன்னுமா எனது தந்தையின் பெயரைத்துதிக் கச் சொல்லுகிறீர்கள்? நல்லது என் பிதாவைக் கண்டுவரு கிறேன். (போகிறான்)

ஸீன் முடிவு.

---

## ஸீன்-22.

காலம் — அந்தி.
இடம் — அரண்மனை.
பாத்-ள் — இரணியன், பிரஹலாதன்.

(இரணியனிடம் வந்து)

பிரக— பிதா! நமஸ்காரம்.

இரணி— வத்சா! கண்மணி! என்மடியிலுட்கார். இனிமேலாவது எனது நாமதேயத்தை உனது மழலைமொழியாலே மொழிந்து மனமகிழச் செய்யடா?

பிரக— பிதா! அந்த மாயாசொரூபியாகிய நாராயணன் பாதம் ஒன் றே துதிப்பேனேயொழிய, செத்துப் பிறக்கும் சுபாவத்தை யுடைய, உமது நாமத்தை ஒருபோதும் துதிக்கமாட்டேன். நீரேன் தன்பேரைச்சொல்லும்படி என்னை வற்புறுத்துகின்றீர்? அந்த மாதவனுக்கிணை உலகில் வேறு எந்தத் தெய்வமு முண் டோ? வீண் பிரயாசை தமக்குவேண்டாம்.

இரணி— பாட்டு.

கபரதர ஹான் - என்ற மெட்டு.

இ-ம்-இந்துஸ்தான் தோடி—தா-ம்-ஆதி.

பல்லவி.

எங்கிருக்கிறான் நீ
ஏற்றிப் போற்றிச் சாற்றும் அரி (எ)

அநுபல்லவி.

என்குலத்துக் குப்பகைவ
னென்றிருக்கு மந்தப் பயல் (எ)

சரணம்.

தங்கியவனிருக்கு மிடங்களை நாடிச்
சதுரங்க சேனைகள் போய்க் காணுமல் வாடி
இங்கு வந்தன ரானு மிதுவரை தேடி
இருக்கிறேன் வதைப்பதற் கெனக்கஞ்சி ஒளித்தோடி (எ)

பிரக— பாட்டு.

ஷை மெட்டு.

பல்லவி.

எங்குமிருப்பான் அவன்
இல்லாத இடம் வேறில்லை (எ)

அநுபல்லவி.

இந்த உலகஞ் சாகர மந்தரம் பாதாளலோகம் (எ)

சரணம்.

காட்டிலு மேட்டிலுங் கருதும் நிலையிலும்
கலையிலு மலையிலுந் தொழிலி னிலையிலும்
நாட்டிலும் வீட்டிலும் சபையின் நடுவிலும்
நத்துமவர் பத்தியிலும் உத்தமர்கள் புத்தியிலும் (எ)

இர— கூறுகின்றாய் பொதுவாய் வார்த்தையா லேது
குணமில்லை நேரினிலே பார்த் தாலல் லாது
தாறு மாறாகு மிது சரியோ தகாது
தக்கதோ ரிடத்தை நீகு றித்துரைத்திடு விப்போது (எ)

பிரக— காணும் பொருளி லெல்லாம் கலந்துட னின்று
கருதியது செய்கிக்கு மவனிட மென்று
பேணி யோரிடங்குறிப் பது நலமன்று
பெண்ணிலும் ஆணிலும் ரெண்டு
கண்ணிலு மண்ணிலு முண்டு (எ)

இர— பொங்குங் கடலாழமாய்ப் பூமியைத் தூக்கிப்
போர்செய் தெனது தம்பி பிராணனைப் போக்கி
பங்கஞ் செய்தவனை நானெதிர் தாக்கிப்
பழிக்குப் பழிமுடிக்க நினைத்தே னுரைப்பாய் நோக்கி (எ)

வ-ம்— அடே சிறுபயலே! அந்த அரியென்றபயல் எங்குமிருப்பா னென்கிறுயே (பல இடங்களிலுங் சுட்டிக்காட்டி இரணியன் கேட்கிருன் அங்கங்கு மிருக்கிருனென்று பிரகலாதன் சொல்ல இறுதியாய்த் தூணைச் சுட்டிக் காட்டி) இதிலிருப்பானு?

ஷெ மெட்டு.

பல்லவி.

இங்கிருக்கிருன் எங்கினும் நிறைந்த மாயன் (இ)
ஏனிதர்க்கு வம்புந் துன்பும்
என்மொழியை நம்பும் நம்பும் (இ)

அநுபல்லவி.

சங்கை யுமக்குவேண்டாம் சர்வதிகாரம்
தமக்கென்றிங் கேகாட்டுவான் தன்னவ தாரம்
பொங்கு மவன்புகழைப் புகல அபாரம்
போதித்தேன் சந்தேகமானுல்
சோதித்துப் பாரு மிந்நேரம் (இ)

சரணம்.

தொட்டதொட்டவிடத்திற் றேன்றுவானுமக்கு
சொற்பமேனும் சந்தேகம் வேண்டாமே யிதற்கு
அட்டி செய்திடில் நானே உயிரைமாய்ப் பதற்கு
அஞ்சுகிலே னந்தமாயன்
வந்து தோன்று வான்முன்னுக்கு (இ)

பல்லவி.

நிச்சயமிது நீர் சந்தேகங் கொள்ளவேண்டாம் (நி)
நேரவன் வராது போனுல்
நானே என்னுயிரை மாய்ப்பேன் (நி)

பிரக—

கவி.

சாணினு முளனேர் தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணினு முளன்மாமேருக் குன்றினு முள னிந்நின்ற
தூணினு முளன்முன் சொன்ன சொல்லினு முளனித்தன்மை
காணுதி விரைவிற்றுனே களங்கமில் லாதுநீயே.

வ-ம்— பிதா! நீர் கேட்ட அந்தப் பராபர வஸ்துவாகிய பகவான் மேரு முதலிய பருவதங்களிலும், கடலிலும், பூமியிலும், சுருதியிலும், சொல்லிலும், ஓரணுவினை நூறுபங்குப்படுத்திய அதனினும், இருப்பானேல், இந்தத் தூணிலிருக்க மாட்டானு இருப்பான் பாரும் தடையில்லை.

இராணி— அடே அப்படியா?

பாட்டு.

இந்தக் கம்பத்திலவ னில்லையே யின்று
எதிர்த்த யானையைச் சிங்கங் கொல்லல்போற் கொன்று
சிந்து ரத்தங் குடித்துன் தசையையுந் தின்று
திக்கெட்டும் புகழ்பரப்பச் சித்தத்தி னினைத்தேனின்று

பல்லவி.

காட்டு வாயடா நீ கைகுவித்த தெய்வமெங்கே
கம்பத்துக்கு ணிற்பானென்று
கும்பிட்டுச் சொன்னாயே யின்று (கா)

வ-ம்— அடே நீ இந்தத் தூணிலிருக்கிறானென்றாய்? அப்படி அதிற் காட்ட வில்லையேல் சிம்மமானது ஆனையை மத்தகத்தைப் பிளந்து ரத்தம் குடிப்பதுபோல் உன்னையுங்கொன்று உன் ரத்தத்தையுங் குடித்துத், தசைமுதலிய உறுப்புகளையுந் தின்று விடுவேன் சம்மதந்தானா?

பிரக— கவி.

என்னுயிர் நின்னாற்கோறற் கெளியதொன் றன்றியான்முன்
சொன்னவன் தொட்டதொட்ட விடந்தொறுந் தோன்றானாயின்
என்னுயிர் யானேமாய்ப்பல் பின்னும்வாழ் வுகப்பலென்னின்
அன்னவர்க் கடியனல்லே னருமீ துறுதிதானே.

வ-ம்— பிதா! என்னைக் கொல்வதென்றாலும்மால் முடியாது. அந்த மாதவன் எந்த இடத்திலுமிருப்பான் அப்படியிருக்கத் தாம் இந்தக் கம்பத்தைக் குறித்து இதிலிருப்பானா வென்று நிச்சயமாய்க் கேட்பதால், இந்தக் கம்பத்திலும் அந்தப் புண்ணிய புருஷரான நாராயணன் இருக்கிறார் என்று சொல்லுகிறேன் வேண்டுமானால் சோதித்துப்பாரும், அப்படி உம் சோதனைக்கு வெளிப்படானாகில், என்னுயிரை யானே மாய்த்துக்கொள்கிறேன். அவனுக்கடியனுமல்லேன், இவ்வுலக வாழ்க்கையும் வேண்டிலேனிது சத்தியம்.

இராணி— சந்தப் பாட்டு.

பண்டும் பகையுடன் என்றம் பியினுயிர்
பங்கம் புரிபய விதனாடே
அன்டுஞ் செயலிலொ ழிந்தும் புகலெனை
அஞ்சுஞ் செயலென அறியேனே

துண்டம் படுமொலி செண்றுந் திசை திசை
துஞ்சும் படிநினை வொடு நேரே
கண்டுஞ் சினமது பொங்குங் கதியிது
கம்பம் பொடிபட எறிவேனே

இரணியன்கோபமொடு தூணென்னுங்கம்பத்தைஎட்டி உதைத்தவுடன் அக்கம்பம் வெடித்து அதினின்றும் விஷ்ணு நரசிங்கரூபமாய்வெளியானதைக்காணுகிறான்

பாட்டு.

மூலமந்திர மோனநற் பொருளே - என்ற மெட்டு.

இ-ம்—தோடி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

கோர ரூப மாகத் தோணுதே
ருத்திர முற்றவிதச் செயல்
பெற்றிது மிக்கவி சித்திரம் (கோ)

அநுபல்லவி.

ஆரவாரஞ் செய் தண்டம் பொடிபட
அரவந்தலை கடலொலி யொடு
நரஹரி யெனு மிகவு ருவொடு (கோ)

சரணம்.

மனிதனுமில்லை மிருகமு மில்லை
வாழ்விவிது போற் காணவு மில்லை
இனியதா லென்ன விளையுமோ தொல்லை
இப்படி யுற்றது மற்றிதம்
எப்படி யுற்றது கற்பிதம் (கோ)

சிங்கம் போலவே திகழுவ தனம்
தேக மானிடன் போலிது தினம்
இங்கு தோன்று திதுவென வுற் பனம்
எதித்தார் பிழைக்கார் பிழைக்கார்
இதைத்தான் எடுத்தா ருரைப்பார் (கோ)

வ-ம்— ஆஹா! இது என்ன ஆச்சரியம்? இதுநாள்வரை பார்த்திராத கோரரூபமாகவன்றோ தோன்றுகிறது? உடல் நரனாகவும், தலை சிங்கமாகவும் உற்பத்தியான சம்பவம் எங்கேனுமுண்டோ? இவ்வுருவத்தை மனிசனென்றழைப்பதா? மிருகமென் றழைப்பதா? நல்லது இருபேரையும் ஒட்டியழைப்பதே தக்கது. அடே நரமிருகா! நீ யாரடா?

நரசிம்ம-வ-ம்— அடே! துஷ்டா! மூர்க்கா! பதிதா! நிருலஜ்ஜா! சண்டாளா! உனது குலவம்சநாச தாரணி தாண்டா உணர்ந்தாயா?

இரணி— கண்மணி பிரகலாதா! நீயே யென் செல்வம், நீயே என் குலமணி, இப்பகைவன் ஒளிந்திருந்த இடத்தைக் காட்டிக் கொடுத்தாய் உன்போல் தனயன் எனக்குளனோ?

பிரக— பிதா! இப்பொழுதாவது என் சொல்லைக்கேளும். அந்த அரி பரந்தாமனின் பாதத்தைப்பணிந்து கொள்வீரானால், அபயம் புகுந்து காப்பாற்றுவார். அபயம் புகுந்தோரை ஆதரித்துக் காப்பாற்றும் புண்ய சீலன் சொன்னேன், சொன்னேன் வீணாகக் கெட்டுப்போக வேண்டாம்.

நரஹரி— கண்மணி பிரகலாதா! உனக்கொன்றுந் தெரியாது. நீ சும்மா இரு, இப்பொழுதே இவனைக் கொன்றுவிடுகிறேன். இவன் எனக்கெம்மாத்திரம்? அடே துஷ்டா! நீ எதற்காக இங்கு வந்தாய்?

இரணி— அடே மிருகமே! நீ எதற்காக இங்கு வந்தாய் என் கையால் மாளவா?

நரஹரி— உன்னுயிரைப் போக்குவதற்காக வந்தேனடா மடையா!

இரணி— என்னுயிரைப் போக்கவா இங்குவந்தாய்?

நரஹரி— ஆம் உன்னுயிரைப்போக்கத்தான் வந்தேனடா தடிப்பயலே!

இரணி— ஏ நரமிருகா! நாவுதாங்கிப்பேசு, எனக்கு நீ பயந்துகொண்டிருந்த உனக்கு அப்பொழுதில்லாத வலி இப்பொழுதெங்கிருந்து வந்தது?

நரஹரி— அடே துஷ்டா! நிரபராதியைக் கொல்லலாகாதென்றே இதுவரை பொறுத்திருந்தேனடா மட்டிப் பிரஷ்டா!

இரணி— இப்பொழுதென்ன குற்றத்தைக் கண்டாய்?

நரஹரி— அடே மூர்க்கா! அருமைப் பிரகலாதனை நீ பலபல துன்பங்கள் செய்ததினிமித்தம், துஷ்டனாகிய உன்னைக் கொல்வதற்காகத் தோன்றினேனடா மடப்பயலே!

இரணி— அடே நரமிருகா! என் பிள்ளையைத் தண்டிக்கவும், கண்டிக்கவும் நான் பாத்திரனன்றோ? அதைக் குற்றமாகப் பாவிக்கவும், நீதிசெலுத்தவும் நீயாரடா? உனக்கென்னபாத்தியமுண்டு?

நரஹரி— அடே வெறியா! எனக்கென்ன பாத்திய முண்டென்று கேட்கிறாய்? சகல லோகத்திலுமுள்ள ஜீவராசிகளும், எல்லோரும் எனது மக்களோ, அவ்வகையில் நீயு மொருவன்தானடா, துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனத்தைப் பற்றியே எனதன்பிற் கிசைந்த பிரகலாதனை நீ பலபல துன்பங்கள் செய்ததினிமித்தம் துஷ்டனாகியவுன்னைச் சம்மாரம் செய்யத் தோன்றினேனடா வெறிநாய்ப் பயலே!

இரணி— சே துஷ்டா! என் புயபல பராக்கிரமத்தை அரைக்ஷணப் பொழுதில் காட்டுகிறேன் நில் யுத்தத்திற்கு?

இரணியனும் நரசிம்மமும் யுத்தம் செய்ய இரணியனை
அந்தி நேரத்தில் பொழுது அஸ்தமனமாகியு
மாகாமலும் இருக்குங்காலத்தில் அரண்மனை
வாசற்படியில் தூக்கியெடுத்து மடியில்வைத்து
வயிற்றைக் கிழித்துக் குடரைப் பிடுங்கி மாலை
யாயிட்டு, உதிரத்தையுங் குடித்து அட்ட
காசம் செய்கிற நரசிம்மத்தைக் கண்டு
பிரமேந்திராதி தேவர்கள் அஞ்சுகி
றார்கள் பிரகலாதன் பயப்படுகிறான்.
மகா லட்சுமி பிரசன்னமாகி
வந்து சமாதானம் செய்கிறாள்.

லெட்சுமி— பிராணபதி! குழந்தை பிரகலாதன்பயப்படுகிறான் சாந்த மாகவேண்டும்.

பிரக— சுவாமி! நமஸ்காரம்.

நர-ஹ— வத்சா! பிரகலாதா! அகமகிழ்ந்தேன் வேண்டிய வரத்தைச கேட்டுக்கொள்?

பிரக— சுவாமி! என்குலத்தார் இனி என்ன குற்றஞ் செய்தாலும் வதம் செய்யாதிருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

நர-ஹ— அப்படியே வரம் தந்தேன்! தந்தேன்!!

நரசிம்மமாகிய பகவானும் லட்சுமி தேவியும் சகல
தேவாசுரர் முன்னிலையில் பிரகலாதனுக்கு
முடிசூட்டி வைத்து அந்தரத் தானமாகிறார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

97724
42651

உ

குமரன் றுணை.

# புத்தக விளம்பரம்.

# ஸதி அநுசூயா

## இருபதிவிரதைகளின் சரித்திரம்.

இச்சரித்திரம் நமது நாடகத்தலைமையாசிரியர் ஸ்ரீலஸ்ரீ **T. T.** சங்கரதாஸ் சுவாமியவர்களியற்றிய சரித்திரங்கள் எல்லாவற்றிலும் மிக்கமேன்மையுடையது. இச்சரித்திரத்தில் இலக்குமி, பார்வதி, சரசுவதி மூவர்களின் வாக்குவாதமும், பிரம, விஷ்ணு, சிவன் மூவர்களும் மனைவியர் பொருமையின் சூழ்ச்சியால் அத்திரி மகரிஷியின் மனைவி அநுசூயாவென்னும் கற்புக்கணிகலனுள்வயின் சென்று, கற்பைச் சோதிக்க யாசித்துப் பாலர்களாகியதும், கற்பிற்றிகழ்ந்த நருமதையென்னும் பெண்பெருமாளின் மகத்துவமும், தெற்றென விளக்கும்; வசன சாதுரியமோ வாசாமகோசரமாய்ப் பொழிந்து காணும், பாடல்களின் கற்பனலங்கார சொற்சுவை, பொருட்சுவை கர்ணாமிர்தத்தையுண்டுபண்ணும். வாசிக்கும் நாவிற்கும் மனத்திற்கும் மாரு மகிழ்வைக்கொடுக்கும். இத்துடன் விடா நகைப்பை விளைவிக்கும் கர்விபார்ஸும் சேர்த்திருக்கிறது. நாடகநடிகர்கள் இப்புத்தகம் கண்ணுற்ற வமையமே அவசியங்கொள்ள அவா வருமேயல்லாது எள்ளற்குமனம் வாா. ஆதலின் இப்புத்தகம் சொற்பக்காப்பிகளே அச்சிட்டுத் தயாரிலிருப்பதால் முந்துங்கள்! முந்துங்கள்!!

புத்தகம் 1க்கு விலை அண 8.

இந்நூலாசிரியராலியற்றிய

பரமானந்தப்பக்திரஸக்கீர்த்தனை புத்தகம்விலை அண 6

ஷை ஆசிரியரா லியற்றிய

| | | | |
|---|---|---|---|
| 1 | சுலோசனசதி | 6 | தாராசசாங்கம் |
| 2 | அபிமன்யுசுந்தரி | 7 | குலேபகாவலி |
| 3 | சிமக்தனி | 8 | ஸ்காந்தம் |
| 4 | மிருச்சகடி. | 9 | கிருஷ்ணலீலா |
| 5 | இலங்காதகனம் | 10 | தோத்திரப்பிரபந்தத்திரட்டு |

முதலிய புத்தகங்கள் கூடியசீக்கிரம் அச்சிட்டு வெளிவரும் எதிர்பாருங்கள். புத்தகம் வேண்டுவோர்கள் அடியிற்கண்ட விலாசதாரிடம் வி. பி. மூலமாயும் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விலை சகாயமாகக் கொடுக்கக்கூடும்.

கு. மாயாண்டி பிள்ளை,
மனோன்மணி விலாசம் பிரஸ், வடக்குமாசிவீதி, மதுரை.

7B
7-38